அன்பளிப்பு 40 p .

# களத்தில்

[தா]யகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 18. 09. 1992

## இரப்பமடு இராணுவமுகாம் மூடப்பட்டது

வவுனியா இரப்பமடு இராணுவ முகாமிலிருந்து 150-200 யார் தூரத்திலிருந்த வீதித்தடையை அகற்றவென வந்த சிறிலங்கா இராணுவத்தின் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் 14 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் தென்னாபிரிக்காவில் செய்யப்பட்ட நவீன கவச வாகனமொன்றும் விடுதலைப்புலிகளினால் அழிக்கப்பட்டது. இந்த நவீன கவச வாகனத்துள் சக்திமிக்க ஆயுதங்கள் பொரத்துப்பட்டிருந்தன. இத்தாக்குதலை அடுத்து இரப்பமடு இராணுவ முகாமை சிறிலங்கா இராணுவத்தினர் மூடிவிட்டு இங்கிருந்த துருப்புக்களை கச்சைக்கொடி இராணுவ முகாமுக்கு இடமாற்றினர்.

## வடக்கை விட கிழக்கிலேயே

# இராணுவத்திற்கு அதிக சேதம்

### ■ சர்வதேச அரங்கில் சிறீலங்கா அரசு தடுமாறுகிறது

புலிகளின் தலையாக யாழ்ப்[பா]ணம் கருதப்படுமானால் அதன் இருதயமாக கிழக்கு [க]ருதப்படுகின்றது" எனக் கூறிய சிங்கள பௌத்த பேரினவாத சிறிலங்கா அரசு சுமார் இரண்[டரை] வருடங்களுக்கு முன் [கி]ழக்கு தனது கட்டுப்பாட்டுக்[கு]ள் கொண்டுவரப்பட்டு விட்டதாக அறிவித்தது. ஆனால் இவ்வறிவிப்பு எவ்வளவு அப்பட்ட[மா]ன பொய் என்பதை கிழக்கில் புலிகள் நடத்தும் வெற்றிகரமான தாக்குதல்கள் நிருபித்துள்ளன. (கொட்டியார இராணுவ படகு அழிப்பு, மட்டுநகர் அம்பாறை, பொலநறுவை, திருகோணமலை தாக்குதல்கள், பொலிஸ் நிலையத் தகர்ப்புகள் போன்றவை)

### சதிகார வலை

'கிழக்கை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால் ஈழத்திற்கான அடிக்கற்கள் 'அகற்றப்பட்டு விடும்' எனக் கணக்குப் போட்ட சிறிலங்கா அரசும் இராணுவமும் வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையில் உள்ள விநியோக வழிகளைக் கட்டுப்படுத்தல், ஒரு வலைப்பின்னல் போன்ற அமைப்பொன்றின் மூலம் தரைக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளல் என்ற இராணுவ தந்திரங்களை நடைமுறைப்படுத்தியது.

### இராணுவ வேலி

இதன் அடிப்படையில் மணலாற்று பகுதியில் ஒரு இராணுவ வேலியை அமைப்பதன் மூலம் வடக்கிலிருந்து கிழக்கிற்கும், கிழக்கிலிருந்து வடக்கிற்குமான போராளிகள் நகர்வைத் தடுப்பது என முடிவு செய்த சிறிலங்கா இராணுவம் கஜபாகுபுரவிற்கும் [கொ]க்குத்தொடுவாய்க்குமிடை[யில்] ஒரு இராணுவ வேலியை [அமை]த்தது. இதேவேளை கிழக்[கின்] கடற்பிரதேசங்களில் ஆழம் குறைந்த பரப்பில் செல்லக்கூடிய அதிவேக விசைப்படகுக[ளி]ன் ரோந்து நடவடிக்கைகளை [தீவிர]மாக்கி கடல்வழித் தொடர்[பை]யும் துண்டிக்க முயன்றது.

### கூட்டுப்படை

இதேவேளை இராணுவத்தின் தலைமைத்துவத்தின் கீழ், விமானப்படை, கடற்படை, [வி]சேட பொலிஸ் அதிரடிப்படை, [சி]ங்கள முஸ்லீம் ஊர்காவற்படை, சிங்கள இராணுவத்துடன் இணைந்துள்ள தமிழ்க் குழுக்கள், பொலிசார் ஆகியோரைக் கொண்ட கூட்டு ஆயுதக் குழுக்களின் முயற்சியால் தரைக்கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தியது.

### சிதறடிக்கப்பட்ட இராணுவம்

ஆனால் புலிகள் தமது யுக்திகளை சிறிலங்கா இராணுவத் தந்திரங்களுக்கு ஏற்ப மாற்றியதனால் கிழக்கில் இராணுவத்தினரின் இழப்பு என்றுமில்லாதவாறு அதிகரித்தது. புலிகளின் ஒவ்வொரு தாக்குதலும் இரட்டை எண்ணிக்கையில் இராணுவத்தை பலி எடுத்தது. புலிகளின் ஒவ்வொரு அதிரடித் தாக்குதலிலும் இராணுவத்தினரின் இறப்பு 10 -40 வரையில் வேறுபடுவதாக இருந்தது.

இத்தாக்குதலில் பெரும்பாலும் ரோந்து அணிகளே சிக்கின. எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத வகையில் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. சில அணிகள் முகாமிலிருந்து 100 -200 யாருக்குள்ளேயே சிதறடிக்கப்பட்டன. சில ரோந்து அணிகள் இரண்டு காவலரண்களுக்கிடையே நொறுக்கப்பட்டன. சில வேளைகளில் காவலரண்களும் தகர்க்கப்பட்டன.

### இராணுவ ஏடு காணாத யுக்திகள்

கிழக்கிலும் வன்னியிலும் புலிகளால் மேற்கொள்ளப்படும் தந்திரோபாயங்கள் இராணுவ ஏடுகள் எதிலும் இல்லை எனவும் புலிகளால் மேற்கொள்ளப்படும் "யூ" (U) பாணியிலான மறைந்திருந்து தாக்கும் யுக்தியிலிருந்து உயிர் தப்புவதென்பது அநேகமாக முடியாத செயல் எனவும் சிறிலங்கா இராணுவ அதிகாரிகளே தெரிவித்துள்ளனர். "யுத்தங்கள் இளநிலை அதிகாரிகளின் தலைமையில்தான் வெற்றியடைகின்றது. அல்லது தோல்வியடைகின்றது" சிறிலங்கா இராணுவம் இரண்டாம் கட்ட ஈழப்போரில் 303 இளநிலை அதிகாரிகளின் சேவையை இழந்துள்ளது. களத்தில் நின்று போரை நடாத்தும் இளநிலை அதிகாரிகளையும் பயிற்சி பெற்ற முன்னணிப்படையினரையும் இழந்து தவிக்கும் சிறிலங்கா இராணுவம் ஆற்றாத செயலாக குடாநாட்டுக்குள் ஊடுருவும் புதிய யுக்தியை அரம்பித்துள்ளனர். கடல்-விமான வழிப் பலத்தினால் குடாநாட்டின் கரையோரங்களில் கால் மிதித்து நிற்கும் சிறிலங்கா இராணுவம் உள் நகர முடியாத நிலையில் பொதுமக்கள் மீது செல்லடி, குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்களை குடாநாட்டுக்குள் நடாத்தி வருகின்றது.

### சர்வதேச அரங்கில் கொலைகாரனாக சிறிலங்கா அரசு

குடாநாட்டை கடல்வழி விமானவழி தாக்குதல்களாலும் பட்டினிச் சதியாலும் (பொருளாதாரத்தடை) அழிக்க நினைக்கும் சிறிலங்கா அரசின் உண்மை நிலை "இன அழிப்பே" என சர்வதேச சமூகம் நன்கு இனம் கண்டு விட்டது.

### சர்வதேச சமூகம் கண்டனம்

அவுஸ்திரேலியா, கனடா, சுவீடன் போன்ற நாடுகள் சமாதான முறையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண மறுக்கும் சிறிலங்கா அரசை நேரடியாக கண்டித்துள்ளன.

பிரிட்டிஸ் அரசு, சிறீலங்காவுக்கு ஆயுத வழங்கலையும் அபிவிருத்தி தவிர்ந்த மற்றைய கடனுதவிகளையும் நிறுத்தியுள்ளது. நெதர்லாந்து அரசு 49 மில்லியன் டொலர் உதவியை நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளது. ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு முன்பாக 22 அரசு சார்பற்ற நிறுவனங்கள் அமைதிப் பேச்சுக்கு மறுக்கும் சிறிலங்கா அரசின் அடாவடித்தனத்தை மிகக் கடுமையாக கண்டித்துள்ளன.

### அமெரிக்காவும் அக்கறை ?

இந்நிலையில் சிறீலங்காவிலிருந்து வெளிவரும் ஐலண்ட் பத்திரிகை தனது கட்டுரை ஒன்றில் அமெரிக்காவின் கொள்கைகளையும் எதிர்கால செயற்பாடுகளையும் திட்டமிடும் ஆறு நிபுணர்கள் தமிழீழத்தவரின் சுயநிர்ணய உரிமையை ஏற்கும்படி கருத்து தெரிவித்துள்ளதாக கூறி அச்சமுற்றுள்ளது. மசசுசெட்டை சேர்ந்த அமெரிக்க காங்கிரஸ் காரரான ஜோசப் ஆர். கென்னடி அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் அமெரிக்க பாணியிலான சமஸ்டி ஒன்றியமாக சிறிலங்கா மாற ஊக்கமளிக்கப்படல் வேண்டுமெனக் கூறியுள்ளார்.

### புலிகளின் செல்வாக்கு அதிகரிப்பு

வெரித்தாஸ் வானொலி தலைவர் பிரபாகரன், இந்திய பிரதமர் நரசிம்மராவ் இருவரையும் உலகின் மக்களாதரவு பெற்ற 4 வது தலைவர்களாக தெரிவு செய்துள்ளது.

சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சியும் தமிழீழ ஆதரவாளர்களும் ஒழுங்கு செய்த தமிழீழ ஆதரவுப் பேரணியில் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதுடன் தலைவர் பிரபாகரனை வாழ்த்தியும் இந்திய அரசின் தடையை வாபஸ் வாங்கக்கோரியும் தமிழீழத்தை வற்புறுத்தியும் சுலோக அட்டைகளுடன் கோசமிட்டு ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். பாரத முன்னாள் பிரதமர் வி.பி.சிங், ஜனதாதள பொதுச் செயலாளர் ராம் விலாஸ் பஸ்வார், நெடுமாறன், டாக்டர் ராம்தாஸ், மணியரசன், வீரமணி, சுபவீரபாண்டியன், தியாகு, பண்டுருட்டி ராமச்சந்திரன் உட்பட பல தலைவர்கள், அறிஞர்கள் இவ் ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

இவ்வாறு சர்வதேச மட்டத்தில் புலிகளின் செல்வாக்கு அதிகரித்து சிறிலங்கா அரசும் இராணுவமும் தலைகவிழும் நிலை உறுதியாகி வருகின்றது.

தொடர்ச்சி 11ம் பக்கம் ....



● புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட Y-8 விமானத்தின் சிதறல்கள் மக்கள் பார்வைக்கு

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# எமது சரித்திரத்தின் உந்து சக்திகள்

"எமது வீரசுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக; எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக; எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டது." திலீபனின் நினைவு தினம் என்றதுமே தலைவர் பிரபாகரனின் மேற்கூறிய வார்த்தைகள் தான் நினைவுக்கு வருகின்றன. அகிம்சை மேல் தமிழீழ மக்களுக்கு நம்பிக்கையிருந்தது. ஆனால் அகிம்சை வழியை தமிழீழ மக்களின் பலவீனமாகவே சிறிலங்கா-இந்திய அரசுக்கள் கருதின என்ற வரலாற்று உண்மை, திலீபனின் தியாகமரணத்தால் 26. 09. 1987 காலை 10. 48 மணிக்கு உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால், 26. 09. 1990ல் சரியாக மூன்று வருட காலத்தில், தமிழீழமக்கள் மேல் அடக்குமுறை பிரயோகத்திற்கு பெட்டகமாக திகழ்ந்த யாழ் கோட்டை மீது, திலீபன் தியாகியான அதே 10. 48 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத்தளபதி பானு தமிழீழ விடுதலைக் கொடியை, புலிக்கொடியை, ஏற்றிவைத்த மற்றொரு வரலாற்று நிகழ்வு பதிவாகியது. இந்த கோட்டை வெற்றி 54 விடுதலைப் புலி வீரர்களின் தன்னலமற்ற உயிர்த்தியாகத்தின் மேலேயே ஈட்டப்பட்டது. இந்த மாவீரர்கள், அகிம்சையை அலட்சியம் செய்து திலீபனை சாகடித்த சிறிலங்கா-இந்திய அரசுக்களுக்கு தக்க பதிலடியை, ஆயுதப் போராட்டத்தின் மூலம் கொடுத்தனர். கூடவே, பன்னூறு மாவீரர்களின் விடுதலை வேட்கையால் சர்வவல்லமை பொருந்திய இந்திய இராணுவம், புறமுதுகிட்டு, தமிழீழ மண்ணிலிருந்து வாபஸாகிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. திலீபன் அமரத்துவம் பெற்று 3 வருடங்களுக்குள்ளேயே அவனது மரணத்துக்கு காரணமாக இருந்த இந்தியப்படையும் இல்லை. அவனது கனவு போலவே புலிக்கொடி யாழ் கோட்டை மீது அசைந்து, அவன் வழியை நனவாக்க உறுதிபூண்டு விட்ட தமிழீழ மக்களின் உறுதியை உலகுக்கு உணர்த்தியது. இதே புரட்டாசித் திங்களில், 07. 09. 1978ல், ஜயவர்த்தனா சிறிலங்கா அரசியல் யாப்பை தனக்கேற்ற மாதிரி மாற்றி, சிறிலங்காப் பாராளுமன்றத்தைக் கைப்பொம்மையாக்கி அனைத்து அதிகாரத்தையும் சர்வவல்லமை பொருந்திய ஜனாதிபதி என்ற பெயரில் தமதாக்கிக் கொண்டார். இதே தினம், "அவ்ரோ" விமானத்தை வெடிக்கச் செய்ததின் மூலம், தமிழீழ விடுதலைப்புலிகள் சிறிலங்காவின் சர்வாதிகார ஜனாதிபதி அமைப்பு முறையில் தமிழீழ மக்களின் இறைமையை பறிக்க முடியாது, என்பதை உலகுக்கு உணர்த்தினர். தமிழீழ மக்களின் இறைமை மீட்கப்பட்டதின் வரலாற்றுச் சான்றாக 1990ல் இருந்து யாழ் கோட்டை மீது புலிக்கொடி பட்டொளி வீசிப்பறக்கிறது.

இதே புரட்டாசியில் தான் 01. 09. 1984ல் திக்கத்தில் 30 சிறிலங்காப் படையினரை கொரில்லா வீரர்கள் நிலக்கண்ணி மூலம் சிதறடித்து கப்டன் ரஞ்சனின் மரணத்திற்கு காரணமாக இருந்த அரசபயங்கரவாதிகளை அழித்தனர். அவ்வாறே, இன்று சிறிலங்கா அரச பயங்கரவாதிகளும், அவர்களின் கூட்டத்தவர்களும், தமிழீழ மண்ணில் ஆக்கிரமிப்பை, அட்டூழியங்களை செய்யலாம். இதனால் தமிழீழ விடுதலைப் போராட்டம் எள்ளளவும் பின்னடையாது. மாறாக வீறுகொண்டெழுந்து மாதகல் ராஜன் உட்பட அத்தனை தமிழீழ போராளிகளின் மரணத்திற்கு காரணமாக இருப்பவர்களை, தமிழீழ மக்களின் அழிவுக்கு வித்திடுபவர்களை, காலத்தோடு அழித்தே தீரும். இதுவே எமது விடுதலை வரலாறும் இந்த புரட்டாசி மாதமும் காட்டுகின்ற பாடமாகும்.

"எமது தாய் நாடு விடுதலை பெறவேண்டும். எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகளுடைத்தெறியப்படவேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக பாதுகாப்பாக வாழவேண்டும். இந்த இலட்சியமீடேற வேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும். இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும். மரணத்தின் நிழலில் வாழத்தான் வேண்டும்." எனும் தேசியத்தலைவரின் வார்த்தைகள் எமது இனத்தின் ஆத்மாவின் குரலொலி. இந்த விடுதலையை விரைவுபடுத்தும் பொறுப்பு ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு. எங்கு வாழ்ந்தாலும் உண்டு. எல்லைகளை கடந்து விட்டால் நாம் தொல்லைகளற்ற மனிதரென எண்ணுவது மடமை. இன்று ஐரோப்பாவில் தொடங்கியுள்ள ஐரோப்பா ஐரோப்பியர்க்கே என்னும் உணர்வின் நாளைய விளைவுகளிலிருந்து, புலம்பெயர்ந்த தமிழர்கள் தப்புவதற்கும், அவர்களுக்கென ஒரு நாடு தேவை என்பதையும் நினைவுறுத்தக்கடமைப்பட்டுள்ளோம். யார்விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன தமிழீழம் மலர்ந்தரசாவதை இனி தடுக்கும் சக்தி இவ்வுலகில் இல்லை. ■

# தெற்கை திருப்திப்படுத்தவே வடக்கில் தாக்குதல்கள்

■ பாஸ்கரன் ■

"சிறிலங்கா இனவாத சிங்கள அரசின் ஒன்பது இராணுவ, கடற்படை அதிகாரிகள் விடுதலைப்புலிகளின் வேவுப் பிரிவினரால் கொல்லப்பட்டமை சிறிலங்கா அரசிற்கு, தென் இலங்கையில் பாரிய நெருக்கடியைத் தோற்றுவித்துவிட்டது. இந்நிலையிலேயே சிங்கள அரசானது தமிழீழத்தில் மிகப் பெரியதொரு தாக்குதலை மேற்கொண்டு இன்றைய நெருக்கடியை சமாளித்து தென்னிலங்கை மக்களைத் திருப்திப்படுத்த முயற்சிக்கின்றது. இனவாத அரசின் இந் நடவடிக்கைகளை தமிழீழ மக்கள் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும்"

இவ்வாறு அல்வாய் பாடசாலை ஒன்றில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கிலே உரையாற்றிய விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழக வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. பாஸ்கரன் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளித்து தென்னிலங்கையைத் திருப்திப்படுத்துவதற்காக சிங்கள அரசு தமிழீழத்தில் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. சிங்கள அரசின் இந்நடவடிக்கைகளை முறியடிக்க தமிழ் மக்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ■

# முதலைக் கண்ணீர் வடிக்கும் அரசே வட-கிழக்கு யுத்தத்துக்குப் பொறுப்பு

■ நவசமசமாஜக் கட்சி அறிக்கை

டென்சில் கொப்பேகடுவ மற்றும் படை அதிகாரிகள் உயிரிழந்ததற்கு முதலைக் கண்ணீர் வடிக்கும் ஆளும் உயர்நிலை வட்டாரத்தினர் தான் வடக்கில் இடம்பெற்றுவரும் அறிவற்ற இனக்கொலை யுத்தத்துக்குப் பொறுப்பானவர்கள் ஆவர்.

நவசமசமாஜக் கட்சி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு வெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; கொப்பேகடுவ மற்றும் படை அதிகாரிகளின் மரணம் நாட்டின் இலட்சக்கணக்கான மக்களைச் சுற்றி வளைத்துள்ள துக்ககரமான நிலைவரத்தை வெளிப்பரப்புக்குக் கொண்டு வந்துள்ளது.

வடக்கில் இடம்பெறும் இனக் கொலை யுத்தம் காரணமாக சகல சமூகங்களையும் சேர்ந்த, பெரும்பாலும் தொழிலாளர்களும் விவசாயிகளுமாக, குறைந்தது 50 ஆயிரம் பேர் கடந்த பத்து ஆண்டுகளில் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒன்றரைக் கோடி மக்கள் பெரும்பாலும் தமிழர்கள் சம்பந்தப்பட்ட இவ்வன்செயல், எவ்வளவு இரக்கமற்றதும் தன்னிச்சையானதுமானது என்பதை படை உயரதிகாரிகளின் மரணம் தெளிவாகக் காட்டுகிறது.

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமாதானத்தைக் கொண்டு வருமாறு கோரவும் இது ஒரு வாய்ப்பாகவும் அமையட்டும்.

நவசமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர். விக்கிரமபாகு கருணாரத்தினா கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# வெட்ட வெளியான சூனியப் பகுதியாக தமிழ்க் கிராமமான வெல்லாவெளி

■ சூனியப் பிரதேசத்தில் இராணுவ ஆட்சிக்கு தென் தமிழீழத்தில் வெல்லாவெளி ஒரு சாட்சி

தமிழ் மக்கள் பல்லாண்டுகளாக வாழ்ந்த முந்நூறு குடும்பங்களைக் கொண்ட பழந் தமிழ்க் கிராமமான பட்டிருப்பு தொகுதியைச் சேர்ந்த வெல்லாவெளிப் பிரதேசம் இன்று வெட்ட வெளிப் பிரதேசமாக சூனியப் பிரதேசமாகக் காட்சியளிக்கின்றது என அங்கிருந்து வெளியேறிய அகதிகள் தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள மக்கள் அனைவரும் சிறிலங்காப் படைகளின் அட்டூழியங்கள் காரணமாக 1990 யூனில் இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து வெவ்வேறு கிராமங்களைச் சென்றடைந்துள்ளனர்.

அகதிகளாக இடம் பெயர்ந்தவர்களின் சொந்த இருப்பிடங்கள் அனைத்தும் முற்றாகவே தரை மட்டமாக்கப்பட்டு மீளக்குடியமர முடியாத நிலையில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளதுடன், அரச கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படாத நிலையிலும் நிவாரணமாக வழங்கப்படும் உலர் உணவுப்பொருட்களை விற்றே குழந்தைகளுக்கான பால்மா உணவுகளை வாங்குகின்றனர் என்றும் அறியப்படுகின்றது.

இங்குள்ள கல்விக்கூடமும் எரிக்கப்பட்டுள்ளதால் இங்குள்ள பிள்ளைகள் தமது கல்வி வாய்ப்புக்களை இழந்த நிலையிலும் உள்ளனர்.

இக்கிராமத்தில் இயங்கிவந்த உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் கூட சேதமாக்கப்பட்டுள்ளதால் தனியார் வீடொன்றிலேயே இவ்வலுவலகம் இயங்குகின்றது.

இங்கு வசித்து வந்த பெரும்பாலான மக்கள் விவசாயிகள். இவர்களில் பெரும்பாலானோர் கால்நடை வளர்ப்புகளில் ஈடுபட்டு வந்தனர். இராணுவ நடவடிக்கைகளை அடுத்து கால்நடைகள் அழிக்கப்பட்டும் களவாடப்பட்டும் உள்ளதால் இவர்களது உழைப்புக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இங்கு ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது பலியானவர்களுக்கான கொடுப்பனவுகள் கூட இன்னும் வழங்கப்படாத நிலையிலேயே உள்ளன.

அத்துடன் சொந்தக் கிராமமான பட்டிருப்புத் தொகுதியின் வெல்லாவெளி கிராமத்தை விட்டு வேறு கிராமங்களில் அகதிகளாக தஞ்சமடைந்திருக்கும் இத்தமிழ் மக்கள் சொந்தக் கிராமங்களில் குடியேறுவதற்கும் தொழிலில் ஈடுபடுவதற்கும் இராணுவம் தடைவிதித்து வருகிறது. ■

## மாவீரர்கள் நினைவாக விளையாட்டுப் போட்டிகள்

2ம் லெப்டினன்ட் சங்கிலி, கப்டன் ஜெகன், வீரவேங்கைகள் சுகந்தன், அருள், சீனு ஆகிய ஐந்து மாவீரர்களினதும் இரண்டாம் ஆண்டினை நினைவு கூரும் முகமாக கரப்பந்தாட்டப் போட்டியும், விளையாட்டுப் போட்டிகளும், நினைவஞ்சலிக் கூட்டமும் இடம் பெற்றன. அரியாலையில் இருக்கும் லெப். கேணல் செல்லக்கிளி அம்மான் வீடமைப்புத் திட்டத்தில் வாழும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி நிகழ்ச்சிகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் மற்றும் ரவி ஆகியோர் கலந்து கொண்டதுடன் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் நாடகமும் இடம் பெற்றது. ■

## மன்னார் தீவிலிருந்து தமிழர் வெளியேறத் தடை

மன்னார்த் தீவில் உள்ள தமிழ் அகதிகள் தம்மை மன்னார் மடு அகதிமுகாமுக்கு மாற்றும்படி விடுத்த கோரிக்கை புறக்கணிக்கப்பட்டுள்ளது. அண்மையில் மன்னார் தீவிற்கு சென்றிருந்த வெளிநாட்டுத் தூதுவர்களைக் கொண்ட குழுவினரிடமிருந்து மக்கள் இவ் வேண்டுகோளை விடுத்திருந்தனர். மன்னார் மாவட்ட பெரு நிலப்பரப்பில் புதிதாய்த் திறக்கப்பட்ட தட்சிணா மருதமடு அகதி முகாமிற்கு செல்வதற்காகவே இவ் வேண்டுகோளை மக்கள் விடுத்துள்ளதாய் தெரியவருகின்றது. மேலும் மன்னார்த் தீவை விட்டு தமிழ் மக்கள் வெளியேறுவதை இராணுவத்தினர் தடை செய்துள்ளனர். ■

## இராணுவத்தின் 'பாஸ்' இன்றி வவுனியாவில் வசிக்கத்தடை

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இராணுவத்தின் 'பாஸ்' இன்றி வசிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் இராணுவம் மற்றும் பொலீஸார் வழங்கிய நிரந்தர அல்லது தற்காலிக வசிப்பிட அனுமதி அட்டை வைத்திருக்காதோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவம் எச்சரித்துள்ளது. இது தொடர்பான சுவரொட்டிகள் பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ளது. ■

# அபார துணிபு, மின் வேகம், போர்த்திறன் தாக்குதல் வெற்றியின் இரகசியமிதுவே

## வன்னி முகாம் தகர்ப்பு பற்றி விசேட தளபதி தீபன்

11. 07. 1992 திகதி அதிகாலை வண்ணான் குளம் இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் வெற்றிகரமாகத் தாக்கி அழித்தனர். இத்தாக்குதல் குறித்து வன்னிமாவட்ட விசேட தளபதி தீபன் ஈழநாதத்திற்கு அளித்த விசேட பேட்டியை இங்கு தருகிறோம். ■

"வண்ணான்குளம் முகாம் எதிரியின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்தில் அமைந்திருந்தது. எமது வீரரின் தளராத உள்ளம், எதையும் சமாளிக்கும் ஆற்றல் -இவை பொருந்திய செயலாற்றும் துணிச்சல், கூர்மையான போர் நுணுக்கம், புதிய தந்திரோபாயம் ஆகியன எமது முயற்சிக்குப் பக்கபலமாய் அமைந்தன. துணிச்சலோடு சேர்ந்த எமது வேகம் தான் வெற்றிக்குக் காரணம்."

இவ்வாறு கூறுகிறார் வன்னி மாவட்ட விசேட தளபதி தீபன்.

ஈழநாதம் பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது;

வவுனியா மாவட்டம் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் எல்லை மற்றும் அனுராதபுர மாவட்ட எல்லைப்புறத்தில் அமைந்திருப்பது வண்ணான்குளம் இராணுவ முகாம். அதனைச் சுற்றியுள்ள பகுதி காடும், காட்டைச் சார்ந்த இடமுமாகும். பல காலமாக -காட்டின் அமைப்பிலே தமிழ் ஈழ எல்லைப்புற வேலிகளாக அமைந்துள்ள தமிழ்க் கிராமங்களான கப்பாய்ச்சி, மோத்தான்குளம், நேரியகுளம், வேப்பங்குளம், முசல்குத்தி, ஆனைவிழுந்தான் ஆகியவற்றின் குரல்வளையை நசுக்குவதுபோல அமைந்திருந்தது வண்ணான்குளம் இராணுவ முகாம் -கெடுபிடியும், நாசகரமான இராணுவ நடவடிக்கைகளினாலும் இந்தக் கிராமங்களிலிருந்து தமிழ் மக்கள் வெளியேறி விட்டனர். புலிகளைப் பலவீனப்படுத்திவிட்டோம், அடக்கி விட்டோம், ஒடுக்கி விட்டோம் என்று இராணுவம் வேறு பிரசாரத்தில் இறங்கியிருந்தது.

இந்த எல்லைப்புற முகாம் மீது பாரிய தாக்குதல் நடத்த வேண்டும் என்று முடிவு செய்து, மிகக் குறுகிய காலத்தில் விசேட வேவுப் பிரிவுகள் மூலம் முகாமின் நிலை குறித்தும், எதிரியின் பலத்தையும், பலவீனத்தைப் பற்றியும் அறிந்து கொண்டோம்.

### முப்பது நிமிடங்களில் முகாம் நிர்மூலம்

தகுந்த உபாயங்கள் வகுக்கப்பட்டன. புதிய உத்திகளை கையாண்டு தாக்குதலை நடத்தினோம். 11. 07. 92 திகதி அதிகாலை 3-15 மணிக்கெல்லாம் முகாமினுள் நுழைந்து விட்டோம் முதலில் முகாமை முற்றுகையிட்டு வடக்குப்பகுதியால் முன்னேறிய எமது அணியினர் அரண்களைக் கைப்பற்றி முகாமுக்குள் நுழைந்தனர். தெற்குப்பகுதியால் முன்னேறிய எமது அணிக்குச் சிறிலங்கா இராணுவத்தின் பலமான எதிர்ப்புக் கிடைத்தது. எதிர்ப்புக்கு மத்தியிலும் எம்மவர்கள் அஞ்சாமையுடன் முன் நோக்கிச் சென்றார்கள். இவர்களில் சிலர் காயப்பட்டதுடன், வீரச்சாவடையவும் நேரிட்டது. உதவி அணி முன்னேறி தெற்குப் பக்கத்தை கைப்பற்றியதும் முகாமின் வடக்குப் பகுதியும், தெற்குப் பகுதியும் கைப்பற்றப்பட்டதுடன் முகாம் முற்று முழுதாக எமது கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. 30 நிமிடங்களில் முகாம் அழிக்கப்பட்டது.

இந்த முகாம் தாக்குதலின் போது எதிர்பார்த்ததை விட எமக்கு இழப்பு மிகக்குறைவாகவே ஏற்பட்டது. மற்றமுகாம்கள் மீது நாம் மேற்கொண்ட முற்றுகை மற்றும் தாக்குதல்போல் அல்லாமல் இத்தாக்குதல் எதிரிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்தில் அமைந்திருந்தது. எல்லைப் பிரதேசமானதால் எதிரிக்கு அனைத்து வசதிகளும் கிடைக்கக்கூடிய இடம். எமக்கு மருத்துவ மற்றும் வசதிகள் குறைவான இடம். எமது தரப்பில் சிறிய தவறும் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தலாம். எமது வீரர் எதையும் சமாளிக்கக்கூடிய மனோநிலையில் இருந்தார்கள்.

### பேட்டி கண்டவர் மதன்

நாம் தாக்குதல் நடத்திய சமயம் நிலவுகாலம். எதிரிக்குச் சந்தர்ப்பம் வழங்காமல் எதிரியை நிலைகுலையச் செய்யும் வகையில் மின்னல் வேகத்தில் முகாம் மீது தாக்குதலை ஆரம்பித்தோம். எமது வீரர்கள் துணிச்சலோடு தாக்கினார்கள். நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் முகாமுக்குள் நிலை கொண்டிருந்த தடயங்கள் இருக்கின்றன. இரண்டு கவச வாகனங்கள் மற்றும் ஒரு புள்டோசர் எம்மால் சம்பூரணமாக நாசமாக்கப்பட்டது. எமது உக்கிரமான தாக்குதலில் இந்த வாகனங்கள் இயக்கமற்றுப் போனதால் நாம் அவற்றை முற்றாக அழித்துவிட்டோம்.

இந்தத் தாக்குதலைப் பொறுத்த வரையில் மாங்குளம், கொக்காவில் முகாம் தாக்குதல்களில் பாவித்தது போன்ற கனரக ஆயுதங்களை நாம் பாவிக்கவில்லை. சாதாரணமான ஆயுதங்கள் தான் பாவிக்கப்பட்டன. இந்த முகாம் மீது தாக்குதல் மேற்கொள்வதற்கு எம்மால் வகுக்கப்பட்ட தந்திரோபாயத்துக்குக் கனரக ஆயுதங்கள் உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. அப்படிப் பாவிக்க வேண்டிய யுத்த முனைகள் வித்தியாசமானவை.

### உதவி முறியடிப்பு

வண்ணான்குளம் முகாமிற்குத் தந்திரிமலை இராணுவ முகாமிலிருந்து உதவி வரும் என்பதை அனுமானித்து அதனை எதிர்கொள்ளத் தந்திரங்களையும், உபாயங்களையும் நாம் முன்கூட்டியே வகுத்திருந்தோம்.

சிங்களப் பகுதியில் சிங்களக் கிராமத்தை மையமாகக் கொண்டு அமைந்திருந்த முகாம் தந்திரிமலை. தமிழீழ எல்லைக்கு அப்பால் அமைந்திருந்த இக்குக் கிராமத்தில் இராணுவ முகாமுடன் சேர்ந்தாற்போல் பௌத்த விகாரை, பொலிஸ் நிலையம், பள்ளிக் கூடங்கள் ஆகியன உள்ளன. என்னென்ன சக்திகள் உண்டோ, அவ்வளவையும் ஏணியாக்கி அந்த எல்லைப் புறத்தின் சங்கிலித் தொடர்போன்ற பாதுகாப்புப் பிணைப்பிற்கு உறுதியளிப்பது தந்திரிமலை முகாம் என்று சிங்களவரால் நம்பப்பட்டது.

நாம் எதிர்பார்த்தது போல் தந்திரிமலையிலிருந்து நாற்பத்தைந்து நிமிடங்கள் கழித்து ஐந்து வாகனங்களில் இராணுவ உதவி அணியொன்று தமது சகபாடிகளின் உதவிக்கு வந்தது. இந்த இரு' முகாம்களும் வெகுதூரத்தில் இல்லை. உடன் உதவிக்கு வரக்கூடிய தூரம். வாகன அணியில் வந்த ஒரு பவள் கண்ணிவெடியில் சிக்கி நாசமாகியது. ஒரு கனரக வாகனம் ஆர். பி. ஜி தாக்குதலுக்கு உள்ளாகியது. அதிரடித் தாக்குதலினால் நிலை குலைந்த இராணுவ வாகன அணியினால் தொடர்ந்து முன்னேற முடியவில்லை. உதவிக்கு வந்த இராணுவ அணி அந்த இடத்திலேயே முடங்கி விட்டது. இராணுவ அணியினரால் வண்ணான்குள இராணுவ முகாமைக் காப்பாற்ற முடியாத நிலை! எமது கட் அவுட் (Cut out) அணிதான் உதவிக்கு வந்த சிறிலங்கா அணிமீது வெற்றிகரமாகத் தாக்குதலை நடத்தி அதனை நிலைகுலைய வைத்தது.

ஒட்டுமொத்தமாக வண்ணான் குளச் சண்டையில் எம்மவர்களில் ஏழுபேர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இவர்களின் தியாகமும் எமது வெற்றிக்குக் காரணமாய் அமைந்தது.

வண்ணான்குள இராணுவமுகாம் தாக்குதலுக்குச் சென்ற போது வழியில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்களைப் பற்றிக் கூறும் போது:



மக்கள் நடமாட்டமில்லாத காட்டுவழி. இராணுவ முகாமை நோக்கிக் கால்நடையாக இரண்டு நாள் பயணம். வழியில் ஓய்வெடுத்து எமது நீண்ட பயணத்தை இராப்பகலாகத் தொடர்ந்தோம். பயங்கரமான காட்டுமிருகங்கள் குறுக்கிடச் செய்தன, யானைக் கூட்டம் ஒன்று குறுக்கே வந்தது. சத்தம் சந்தடியில்லாமல் யானைக் கூட்டத்தைக் கலைக்க வேண்டியிருந்தது. வெடி தீர்த்துக் கலைத்தால் எதிரி விழிப்படைந்து விடுவான். யானைக் கூட்டத்தில் இருந்த இருபத்தைந்து யானைகளுக்கும் அருகில் சென்று தந்திரமாக நம்மவர் ஒருவர் கலைத்தார் என்றால் வழியில் ஏறபடும் கஸ்டங்களை யோசித்துப் பாருங்கள் என்று பேட்டியை முடித்தார். ■



முகாம் தகர்ப்பில் கைப்பற்றிய ஆயுதங்களின் ஒரு தொகுதி

### வண்ணான்குளம் இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்தோர் விபரம்:

* கப்டன் தெய்வம் 'நடராஜா இராமனூர் புளியங்குளம், வவுனியா)
* கப்டன் மணிமாறன் (செல்வன்) நடராசா சிவகரன் தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு)
* 2ஆம் லெப்டினன்ட் இளங்கோ (இராமசாமி ரஞ்சித் நிரஞ்சன்ராஜன் மன்னார்)

2ஆம் லெப்டினன்ட் ஜெயரூபன் (நாயகன்) (சின்னத்தம்பி வசந்தகுமார் இல. 795, கட்சன் றோட் வட்டக்கச்சி, கிளிநொச்சி)

* 2ஆம் லெப்டினன்ட் சுவேந்திரன் (பாபு) (கிருஸ்ணமூர்த்தி கலாகரன் புளியங்கூடல் ஊர்காவற்றுறை)
* வீரவேங்கை பகீரதன் (ஆறுமுகம் நடராசா இல. 2 தொப்பிக்கட்டையடி, இராமநாதபுரம், கல்மடு கிளிநொச்சி)
* வீரவேங்கை கானகன் (டக்கி) சுப்பிரமணியம் சிவகுமார் இல. 28 சிவபுரம், வவுனிக்குளம்

### வதந்தியால் வீணான மரணங்கள்

இராணுவம் மல்லாகம் பகுதிக்குள் ஊடுவி விட்டதாகப் பரப்பப்பட்ட வதந்தியினால் இருவர் உயிரிழந்ததோடு ஆயிரக்கணக்கான மக்கள் அவசரம் அவசரமாக சிதறிஓட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவ்வாறு தனது கைக்குழந்தையுடன் ஓடிய இளம்தாய் ஒருவர் தடக்கி விழுந்ததினால் கையிலிருந்த குழந்தை தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தது. வேறொருவர் அதிர்ச்சியால் மரணமடைந்தார். எறிகணை வீச்சில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தனது கணவன் இறந்து விட்டதாகப் பரப்பப்பட்ட வதந்தியை கேட்ட பெண் ஒரவர் தற்கொலை செய்து கொண்டார். ■

# எதிரியின் சவாலை முறியடிப்பதற்கு தேசிய எதிர்ப்பியக்கத்தை கட்டுவோம்

## தலைவர் பிரபாகரன் அறைகூவல்

"தமிழரின் வரலாற்றுப் பூமியை ஆக்கிரமிப்பால் அபகரித்துக் கொள்ளச் சிங்களப் பேரினவாதம் பகீரத முயற்சிகளைச் செய்கிறது. இதனால் எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்றுமில்லாத ஒரு பெரிய சவாலைச் சந்தித்து நிற்கிறது.

இந்தச் சவாலை நாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு முறியடிப்பதாயின் ஒரு திடமான, வலுவான தேசிய எதிர்ப்பியக்கத்தை நாம் கட்டி எழுப்பவேண்டும். போர்க்குணம் மிக்க ஒரு புரட்சிகர சமுதாயமாக எமது தேசத்தை உருவாக்கம் செய்யவேண்டும்."

இவ்வாறு தலைவர் பிரபாகரன் அறைகூவல் விடுத்துள்ளார். விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் வெளியிடப்பட்டுள்ள முத்தமிழ் விழா மலருக்கு தலைவர் வழங்கியுள்ள ஆசிச்செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். ●

தலைவர் பிரபாகரனால் வழங்கப்பட்டுள்ள ஆசிச் செய்தி வருமாறு:

எமது மொழியும் கலையும், பண்பாடும் எமது நீண்ட வரலாற்றின் விழுதுகளாக, எமது மண்ணில் ஆழமாக வேருன்றி நிற்பவை. எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக நிற்பவை எமது பண்பாடுதான் எமது தேசத்தின் உயிர். எமது இனத்தின் ஆன்மா எமது உடல்கள் அழிந்தாலும், உடமைகள் அழிந்தாலும், எமது இனத்தின் இதயமாக இயங்கும் பண்பாட்டு வாழ்வை எவராலும் அழித்துவிட முடியாது.

எமது மொழியில், எமது கலைகளில், எமது பண்பாட்டில் எமது மண்ணில் நாம் கொள்ளும் பாசமும் நேசமும் தேசிய பற்றுணர்வாக பரிணாமம் பெறுகிறது. இந்தத் தேசாபிமான உணர்வானது மக்களை ஆழமாகப் பற்றிக் கொள்ளும் பொழுதுதான் ஒரு தேசம் தனக்கே உரித்தான தனித்துவமான ஆளுமையைப் பெறுகிறது. இந்தத் தேசிய ஆளுமையை கொண்ட மக்கள் இனம்தான் ஒரு அரசை அமைத்துக் கொள்ளும் தகுதியைப் பெறுகிறது.

ஒரு திடமான, தனித்துவமான தேசிய ஆளுமையை கொண்ட மக்களாக தமிழீழ மக்கள் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டிருக்கிறார்கள். இரத்தப் புரட்சியாக கட்டவிழ்ந்த, நீண்ட கடினமான போராட்ட வரலாறும், அதனால் உருவான நிலைதளராத இலட்சிய உறுதியும், நாட்டுப்பற்றும் எமது மக்களை தேசிய ஆளுமை கொண்ட மக்கள் இனமாக மாற்றியமைத்திருக்கிறது. இதனால் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்களாக, தனியரசு அமைக்கும் தகுதி பெற்றவர்களாக விளங்குகிறார்கள்.

உலகெங்கும் தமிழினம் பரந்து வாழ்ந்தாலும் தமிழீழத்தில் தான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கிறது. தமிழீழத்தில் தான் தேசிய ஆளுமை பிறந்திருக்கிறது. தமிழீழத்தில் தான் தனியரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியிருக்கிறது. தமிழீழத்தில் பிறந்து, வளர்ந்து, நிமிர்ந்து நிற்கும் தமிழனின் தேசிய ஆளுமையைக் கொன்றுவிட எமது பகைவர்கள் திடசங்கற்பம் பூண்டு நிற்கிறார்கள். எமது வரலாற்று எதிரியான சிங்கள அரசு ஒரு புறமும், இந்திய வல்லரசு மறுபுறமுமாக எமக்கு பெரும் சவால்களாக எம்மை அச்சுறுத்தி நிற்கின்றன.

அனைத்துலக தமிழ்ப் பண்பாட்டின் மையமாக தன்னாட்சி உரிமைக்கு தகுதிபெற்றதாக, அரசியல் ஆளுமை பெற்று வளர்ந்துள்ள தமிழீழத்தேசியம் இந்திய உபகண்ட தேசிய எழுச்சிப் போராட்டங்களுக்கு உந்துசக்தியாக அமைந்துவிடுமென இந்தியா அஞ்சுகிறது. குறிப்பாக தமிழ் நாட்டில் செத்துக் கொண்டிருக்கும் திராவிடப் பண்பாட்டு இயக்கத்திற்கு புத்துயிரளித்து தூங்கிக்கிடக்கும் தமிழகத் தமிழனை தட்டி எழுப்பிவிடலாமென பாரதம் பயப்படுகிறது. இந்தியாவிலும் உலகளாவிய ரீதியிலும் தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கும் தமிழ்த் தேசிய எழுச்சிக்கும் ஊக்க சக்தியாக உருவாக்கம் பெற்றுவரும் தமிழீழ தேசியத்தை ஆரம்பத்திலேயே சிதைத்துவிட வேண்டுமென டில்லி ஆட்சிபீடம் திட்டம் தீட்டியது. இந்த நோக்கில்தான் இந்திய ஆளும் வர்க்கமானது சிங்களப் பேரினவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஒப்பந்தம் செய்து எமது மண்ணில் தனது ஆக்கிரமிப்புப் பாதங்களைப் பதித்தது. தமிழீழ தேசியத்தின் புரட்சி வடிவமான புலிகள் இயக்கத்தை அழித்துவிட முனைந்தது இந்திய தலையீடும் அதனால் எமது தாயகத்தில் நிகழ்ந்த மனிதக் கொலைகளும், அழிப்புகளும் தமிழ்த் தேசியத்தை நசுக்கிவிட முடியவில்லை பதிலாக எமது போராளிகளதும் பொதுமக்களதும் உறுதிமிக்க எதிர்ப்பியக்கம் தேசியப் பற்றுணர்வை மேலும் வலுப்படுத்தியது என்றுதான் சொல்லவேண்டும்.



இந்திய ஆட்சியாளரதும், சிங்களப் பேரினவாதிகளதும் நெருக்குதல்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து தமிழீழ தேசிய எழுச்சியை 'பிரிவினை வாதம்' என்றும் 'பயங்கரவாதம்' என்றும் உலகிற்கு திரித்துக் காட்டுவதில் இந்தியா முனைப்பாக நிற்கிறது. தமிழரின் தேசிய கட்டமைப்பிற்கு ஆதாரமாக விளங்கும் தமிழரின் வரலாற்றுப் பூமியை ஆக்கிரமிப்பால் அபகரித்துக் கொள்ள சிங்களப் பேரினவாதம் பகீரத முயற்சிகளைச் செய்கிறது. இதனால் எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்றுமில்லாத ஒரு பெரிய சவாலை சந்தித்து நிற்கிறது.

இந்தச் சவாலை நாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு முறியடிப்பதாயின் ஒரு திடமான, வலுவான தேசிய எதிர்ப்பியக்கத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். போர்க்குணம் மிக்க ஒரு புரட்சிகர சமுதாயமாக எமது தேசத்தை உருவாக்கம் செய்ய வேண்டும்.

ஒரு விடுதலை இயக்கம் தனித்து நின்று போராடி விடுதலையை வென்றெடுத்தாக வரலாறு இல்லை. ஒரு விடுதலை இயக்கத்தின் பின்னால் மக்கள் சக்தி அணி திரண்டு எழுச்சி கொள்ளும் பொழுது தான் அது மக்கள் போராட்டமாக தேசிய போராட்டமாக முழுமையும், முதிர்ச்சியும் பெறுகிறது. அப்பொழுது தான் விடுதலையும் சாத்தியமாகிறது.

எமது விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயமாக்கி மக்கள் போராட்டமாக முழுமைப்படுத்தி, மக்கள் அரங்கிலிருந்து ஒரு பலமான, உறுதிமிக்க தேசிய எதிர்ப்பியக்கத்தைக் கட்டி எழுப்பும் பணி இன்றைய வரலாற்றுத் தேவையாக எழுந்திருக்கிறது. இந்தத் தேவையைப் பூர்த்திசெய்வதில் எமது கலை, இலக்கிய படைப்பாளிகளின் பங்கு முக்கியமானது.

எமது போராட்ட வாழ்வின் மெய்யுண்மைகளை கலை, இலக்கியப் படைப்புக்கள் தரிசித்து நிற்கவேண்டும். எமது சமூக வாழ்வியக்கத்தின் சகல பரிமாணங்களிலும் ஆழமாக ஊடுருவி நிற்கும் இன ஒடுக்குமுறையின் கொடூரத்தினைச் சிருஸ்டிகர்த்தாக்கள் சித்தரித்துக் காட்டவேண்டும். மக்கள் இடையே விழிப்புணர்வையும், எதிர்ப்புணர்வையும், விடுதலை உணர்வையும் தூண்டி விடும் கலை, இலக்கிய ஆக்கங்களே எமது இலட்சியப் போருக்கு உரமேற்றுவதாக அமையும், இத்தகைய கலை, இலக்கியப் படைப்புக்களே தேசிய எதிர்ப்பியக்கத்திற்கு உயிரூட்டுவதாகவும் அமையும். ■

# சர்வதேசக் களம்



-சாரதாதேவி

### அணிசேரா நாடுகளின் கொள்கைகளில் தடுமாற்றங்கள்:

நிரந்தரமானவை என உறுதியாக நம்பப்பட்ட பல விடயங்கள் சற்றும் எதிர்பாராத வடிவத்தைப் பெற்றுவிட்டமை அண்மைக்கால உலக நிகழ்ச்சிகளாகும். எகிப்திய நாஸார், இந்திய நேரு, யூகோஸ்லாவிய டிட்டோ, இந்தோனேஸிய சுகர்னோ, ஆபிரிக்க என்குறோமா போன்ற தலைவர்களின் அரிய முயற்சியின் பயனாக உருவானதே அணிசேரா நாடுகள் அணியாகும்.

"பஞ்சசீலம்" என சுருக்கமாக இவ் அணியைச் சேர்ந்த நாடுகளது தத்துவம் அழைக்கப்பட்டது. கம்யூனிஸ, முதலாளித்துவ நாடுகளது சார்பின்றி தனித்து நின்று இயங்குவதன் மூலம் பல வறிய நாடுகள் மேம்பாடடைய முடியும் என்றும், போர் ஆபத்துக்களில் இருந்து ஒதுங்கியிருக்க முடியும் என்பன போன்றவையே இத் தத்துவத்தின் அடிப்படையாகும்.

108 நாடுகளை இன்று உள்ளடக்கியுள்ள இத்தாபனம் கடந்த வாரம் தனது 10வது ஆண்டுக் கூட்டத் தொடரினை நடத்தி முடித்துள்ளது. வளர்முக நாடுகளைக் கைப்பாவையாக வைத்திருக்க முனைந்த வல்லரசுகளுக்கு இவ் அணியின் தோற்றம் அச்சத்தை விளைவித்தது.

இதனை எவ்வாறேனும் உடைத்து விடவேண்டும் அல்லது தங்கள் நலன்களுக்குக் குந்தகம் இல்லாதவகையில் இதை மாற்றியமைக்க வேண்டும் என வல்லரசுகள் கங்கணம் கட்டி நின்றன. வரலாற்று ஓட்டத்தில் பல நெருக்கடிகளையும் தடைகளையும் இந்நாடுகள் அனுபவித்தமை மறக்கமுடியாத சம்பவங்களாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் கியூபாவின் கஸ்ரோவும், லிபியாவின் கடாபியும் பல முண்டுகளைக் கொடுத்துப் பார்த்தும் வல்லரசுகளே வெற்றி கண்டன.

சர்வதேச அரசியலில் இன்று நடந்துவிட்ட மாற்றங்கள் அணிசேரா நாடுகளிலும், அதன் அமைப்பிலும் பல மாற்றங்களைத் தோற்றுவித்துள்ளது.

அணிசேராமை என்ற தாரகமந்திரம் இன்று மறந்து போன ஒரு மொழியின் சொற்றொடராகவே தென்படுகிறது. வல்லரசுகளின் கைப்பாவையாக மாறிவிட்ட இந்தோனேஸியா, இவ்வணியினரை மேற்கு நாடுகளின் சர்வதேச நலன்களுக்கு இணைந்து போகும் புதிய வழிக்கு இழுத்துச் செல்வதையே முடிவடைந்த 10வது கூட்டத் தொடர் நிகழ்ச்சிகள் எமக்கு நினைவூட்டுகின்றன.

### மீண்டும் அகிம்சை போராட்டம்: தென் ஆபிரிக்கா.

தென் ஆபிரிக்காவிலேயே காந்தி அடிகள் தமது அகிம்சா வழி போர்முறையை முதன்முறையாகப் பரிசோதனை செய்தார். அப்பொழுது ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் மண்டேலா வாலிபர். தலை சிறந்த தலைவரான இவர் பிற்காலங்களில் இம்முறையை புகுத்தி தோல்வி கண்டதும் ஆயுதப் போராட்டமே வெள்ளை இன ஒதுக்கல் அரசைப் பணியவைக்கும் எனக் கண்டு தனது உத்தியை மாற்றினார். இதனால் ஏறத்தாழ 30 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அனுபவித்தமை யாவரும் அறிந்ததே.

சர்வதேச ரீதியான நெருக்கடிகள், ஆயுதப் போராட்டங்கள் போன்றவற்றின் விளைவாக வெள்ளை இனவெறி அரசு அரசியலில் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. வளம்மிக்க பகுதிகளில் பரவியிருந்த பல வகைப்பட்ட இனக்குழு மக்களை வளமற்ற பகுதிகளில் தாயகம்(HOME LANDS) எனப்படும் நிர்வாக முறையை அமைத்து, அங்கு குடியேறவைத்தது. இந்த நடவடிக்கை மூலம் வெள்ளையர் வாழும் பகுதிகளில் இருந்த கறுப்பரை விரட்டியதுடன், உலகத்தின் கண்ணில் மண்ணைத்தூவ முற்பட்டது. இவ்வாறு தாயகம் என்ற நிர்வாக அமைப்பை ராஸ்காய், சிஸ்காய், பொபதற்ஸ்வானா, வெண்டா போன்ற மாகாணங்கட்கும், "சுய ஆட்சி" அந்தஸ்தை மேலும் 7 மாகாணங்களுக்கும் வெள்ளையர் அரசு வழங்கி இனக்குழுக்களாகக் கறுப்பர்களைப் பிரிக்க எண்ணியது. ஆனால் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கறுப்பர்கள் யாவரும் இன ஒதுக்கல் மூலம் படும் அவதிகளை வைத்து முழு கறுப்பினத்தவரையும் ஓரணியில் திரட்டியது.

மண்டேலா பெப்ரவரி 90ல் விடுதலையடைந்த பின் இன ஒதுக்கல் கைவிடப்பட்டு ஜனநாயகத் தேர்தல் நடத்தப்படும் என பல வாக்குறுதிகள் F. W de clark வழங்கினார். நடைமுறையில் இது ஏமாற்று வேலை எனக் கண்ட கறுப்பினத்தவர் ஆத்திரம் அடைந்தனர். மிகவும் நிதான புத்தியும், அனுபவமும் வாய்ந்த மண்டேலா ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடாது முழுக்க காந்தி கையாண்ட சட்டமறுப்பு, பேரணி, ஒத்துழையாமை போன்ற வழிகளில் ஒவ்வொரு மாநிலங்களாக போராட்டங்களை நடத்தி வந்தார். அண்மையில் வெள்ளை இனத்தவரின் கைப்பொம்மை இராணுவ ஆட்சி நடக்கும் சிஸ்காயிலும் இதனை செய்ய முற்பட்டதும் விபரீதம் நடந்தது.

இங்கு நடந்த அமைதிப் போராட்டத்தை மிகக் கொடிய பலம் கொண்டு கறுப்பின இராணுவ அரசு அடக்கியது.

# 116 நாட்கள்

## (15. 04. 92 – 08. 08. 92)

26 மார்ச் 1992 வர்த்தகமானி அறிவிப்பின் மூலம், சிறிலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசாவால் கூட்டுப்படைத் தலைமையகத்தின் (Joint Operation Command) செயற்பாடுகள் இல்லாமற் செய்யப்பட்டன. முப்படைத் தளபதிகளையும், காவற்துறை மாஅதிபரையும் கொண்ட கூட்டுப் பாதுகாப்புப்படை (Joint Security Forces) உருவாக்கப்பட்டுள்ளது.

முன்னையது ஜே. ஓ. சி. என அழைக்கப்பட்டது. இப்போதையது ஜே. எஸ். எவ். என அழைக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டுப் பாதுகாப்புப் படை, மூத்த மேலாளரான வான்படைத் தளபதி எயர் மார்சல் குணவர்த்தனா தலைமையில் செயற்படும்.

**இந்த 116 நாட்களில் வட மாகாணத் தளபதி டென்சில் கொப்பேகடுவ, கடற்படை உயர் மேலாளர் கொமடோர் மொகான் ஜயமகா, பிரிகேடியர் விஜய விமலரத்ன உட்பட 586 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.**



காயமடைந்த போராளி ஒருவரை சிகிச்சைக்காக எடுத்துச் செல்லும் காட்சி.

முன்னரைப் போலல்லாது இப்போது முப்படைகளின் தளபதிகளே நேரடியாக முடிவுகளை எடுப்பதால், சமர்க்களத்தை வழி நடத்துவது சுலபமாக இருக்கின்றது என, கருத்து ,வெளியிட்டுள்ளார்கள்.

இதே சமயம், சிங்களப் படையணிகள் பலவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவத்தினரைக் கொண்டு, ஒரு சிறப்புப் படை அணியை இராணுவ பீடம் அமைத்துள்ளது. இது எந்த நேரத்திலும், எங்கும் சென்று சண்டைகளில் ஈடுபடும் என, அறிவிக்கப்பட்டுள்ளது. 15 ஏப்ரல் 1992 இல், நல்ல நேரத்தில் தமது கூட்டுப் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தை (ஜே. எஸ். எவ்) கொழும்பில் திறந்தனர். அதன்பின்பு அனுராதபுரம் மகாபோதிக்குச் சென்று, தமிழர்களுக்கு எதிரான போரை வெல்ல ஆசீர்வாதமும் பெற்றனர்.

அதன் பின், மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை ஏப்ரில் 15 இல் நடத்தினர்.

ஆனால் 28 மே 1992 இல்தான், இவர்கள் தமது மாபெரும் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கத் திட்டமும் தீட்டினர்.

ஐந்து முனைகளில் சமரைத் தொடங்கத் தீர்மானித்தனர். முல்லைத்தீவு, தொண்டமானாறு, தெல்லிப்பளை, மன்னார், வவுனியா ஆகியனவே அந்தச் சமர் முனைகளாகும். அதே நேரம் தென்தமிழீழத்திலும் இராணுவ நடவடிக்கையை நடாத்துவது என்று தீர்மானித்தனர்.

எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் சண்டைகளைத் தொடங்கினால், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு புலிகள் தங்களது படைப்பலத்தை நகர்த்த முடியாது எனக் கருதியே, சிங்களத் தளபதிகள் இத் தந்திரோபாயத்தைக் கடைப்பிடித்தனர்.

அத்துடன் தொடர்ச்சியாகப் புலிகளைத் தாக்காது விட்டால் அவர்கள் ஒன்று சேர்ந்து இராணுவ நிலைகளைத் தாக்குகின்றார்கள். எனவே, பல இடங்களில் ஒரே நேரத்தில் புலிகள் மீது தாக்குதல் தொடுப்பதன் மூலம் இராணுவ நிலைகளைப் பாதுகாப்பதுடன், புலிகளையும் பலவீனமடையச் செய்யலாம் என இராணுவத் தலைப்பீடம் க்ருதுகின்றது.

22 திங்கள்களாகக் கூட்டுப்படைத் தலைமையகம் (ஜே. ஓ. சி.) செய்ய முடியாமல் போனதை, புதிய கூட்டுப் பாதுகாப்புப் படைச் செயலகம் செய்யப் போகின்றதென, சிங்கள அரசு மார்தட்டுகின்றது.

யாழ். குடாநாடு சிங்களப்படைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்ற கோட்பரப்புகளுடன், பெரும் இராணுவ நடவடிக்கைகளும் தொடர்ந்தன.

'கிறீன்பெல்ட்-3', 'பலவேகய-2', 'சண்டமாருதம்', 'சத்பல', எனப் பல்வேறு பெயர்களில் இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**வெல்ல முடியாத- முடிவில் தோல்வியையே காணப்போகின்ற இந்தப் போருக்காக, எவ்வளவு சிறிலங்காப் படையினரை சிறிலங்கா அரசு பலி கொடுக்கப்போகின்றது?; எவ்வளவு தமிழ் மக்களைக் கொல்லப்போகின்றது?**

இந்த ஜே. எஸ். எவ். உருவாக்கப்பட்ட கடந்த ஏப்ரில் 15 இலிருந்து ஓகஸ்ட் 8 வரை, 426 இராணுவத்தினரை இழந்துள்ளதாகச் சிங்கள படை தெரிவித்துள்ளது. அதே வேளை, 1380 இற்கு மேற்பட்ட புலிகளைக் கொன்றுள்ளதாகவும் கூறியுள்ளது.

ஆனால் இந்த 116 நாட்களில் வடமாகாணத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, கடற்படை உயர் மேலாளர் கொமடோர் மொகான் ஜயமகா, பிரிகேடியர் விஜய விமலரத்தன உட்பட 586 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

எமது தரப்பில் 258 போராளிகளையே நாம் இழந்துள்ளோம்; இராணுவம் கூறுவதுபோல 1380 போராளிகளை நாம் இழக்கவில்லை.

ஆனால் இக்குறுகிய காலத்தில் இக்கூட்டுப் பாதுகாப்புப் படைச் செயலகம், 272க்கு மேற்பட்ட தமிழர்களைக் கொன்றுள்ளது.

மட்டு-அம்பாறை மாவட்டத்தில் 174 தமிழர்களும், யாழ்ப்பாணத்தில் 46 தமிழர்களும், திருகோணமலையில் 20 தமிழர்களும், வன்னியில் 30 தமிழர்களும், மன்னாரில் 2 தமிழர்களும் சிங்களப் படைகளினால் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்விதம் சிங்களப்படை தான் பாரிய இழப்புகளைச் சந்தித்து, தமிழ் மக்களுக்குப் பேரழிவை ஏற்படுத்திச் சாதித்தது என்னவென்று சொல்ல, பெரிதாக ஒன்றுமில்லை.

சிங்களத் தளபதிகள் கருதியது போல, மற்றைய இடங்களிலிருந்து புலிகள் வராவிட்டால் புலிகளால் போராட முடியாது என்ற கருத்து சரிவரவில்லை.

தொடர்ச்சியாகப் புலிகள் மீது தாக்குதல் நடத்தினால் இரா



இறந்த இராணுவத்தினரின் படங்களுள் ஒன்று

### யூன் 16 முதல் ஓகஸ்ட் 10 வரையான 56 நாட்களில்

- அதி உயர்நிலை அதிகாரிகள் உட்பட 311 இற்கும் அதிகமான சிறிலங்காப் படையினர் கொல்லப்பட்டனர்.
- 208 ஆயுதங்கள் சிங்களப் படையிடமிருந்து கைப்பற்றப்பட்டன.
- சீனத் தயாரிப்பான தாங்கிகள், தென்னாபிரிக்கத் தயாரிப்பான 'பவள்' கவச ஊர்திகள் உட்பட, 17 இராணுவ வண்டிகள் தகர்த்தப்பட்டன. அல்லது சேதமாக்கப்பட்டன.
- இக் காலப்பகுதிக்குள் எமது 110 போராளிகள் வீரச்சாவை அணைத்துக் கொண்டனர்.
- 'பல்வேகய - 2' எனப் பெயரிட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றைச் செய்த சிங்களப்படை வெற்றிலைக்கேணி முதல் ஆனையிறவு வரை, ஒரு இராணுவ வேலியைப் போட்டது. இந்தச் சமர் யூன் 28 முதல் 12 நாட்கள் நீடித்தது.
- சிறிலங்காவின் இராணுவ வானூர்தியான, சீனத் தயாரிப்பான வை -8 ரக ராட்சத விமானம் ஒன்று ஆனையிறவுச் சமரின்போது நடு வானிலேயே நொருக்கப்பட்டது.
- 08-08-1992 அன்று, யாழ். அராலிப் பகுதியல் சிங்களப் படையின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஊடுருவி -எமது 'சிறப்பு வேவுப் பிரிவு' நடாத்திய நிலக் கண்ணிவெடித் தாக்குதலில், சிறிலங்கா படைத்துறையின் வட பிராந்திய உயர் அதிகாரிகள் பலர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் விபரம்:

  - வட பிராந்திய ஆணைத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ
  - கடற்படையின் வட பிராந்தியத் தளபதி கொமடோர் மொகான் ஜயமகா
  - யாழ். பிராந்தியத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்ன
  - லெப்ரினன்ற் கேணல் ஆரியரத்ன
  - லெப்ரினன்ற் கேணல் பலிப்பான
  - லெப்ரினன்ற் கேணல் ஸ்ரீபன்
  - மேஜர் அல்விஸ்
  - கடற்படை லெப்ரினன்ற் லங்காதிலக
  - கடற்படை லெப்ரினன்ற் விஜயபுர
  - படைவீரர் விக்கிரமரத்ன



தமிழீழ வண்ணான்குளப் போர்க்களத்தில் மாவீரராக மாறியவர்களின் புதைகுழிகளுக்கு உற்றார், பெற்றோர், தமிழீழ நெஞ்சங்கள் உரிமை மண் தூவும் பொழுது எடுத்த படம்.

இந்த நாட்களில் இராணுவத்திடமிருந்து தானியங்கித் துப்பாக்கிகள்-300, இலகு இயந்திரத் துப்பாகிகள்-25, எம். 203 பிஸ்ரல் -5, ஆர். பி -5, ஆர். பி. ஜி -4, 60 மி. மீ. மோட்டர் -4, 81 மி. மீ. மோட்டர் -1, எல் 3 -2 உட்பட 340 ஆயுதங்களுக்கு மேல் எம்மால் கைப்பற்றப்பட்டன.

இது தவிர சிங்களப்படை, 22 கவச வாகனங்களையும் 4 தாங்கிகளையும் இழந்துள்ளது. அத்துடன், மிகப் பெரிய வை -8 ரக வானூர்த்தியையும் இழந்துள்ளது.

ணுவ நிலைகளைப் புலிகள் தாக்காது தடுக்கலாம் என்ற எதிர்பார்ப்பும், நிறைவேறவில்லை.

புலிகள் பலவீனமாக இருக்கின்றார்கள் என்ற ஊகமும் மெய்யாகவில்லை.

இராணுவம் தன் தங்ககங்களை ( முகாம்கள்) கூட்ட இராணுவத்திற்கு இழப்புகள் கூடுமென்பது, சிங்களத் தளபதிகளுக்கு நன்கு தெரியும்.

தொடர்ச்சி 13ம் பக்கம் ....

# உளவு வேலைகளில் ஈடுபட்ட ஒன்பது பேரின் விபரங்கள்

உளவு வேலைகளில் ஈடுபட்டு இலங்கை இராணுவத்துக்கும் தேசத்துரோகிகளுக்கும் காட்டிக் கொடுத்த 9 பேருக்கு விடுதலைப்புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவர்களைப் பற்றிய விபரம் வருமாறு:-

முழுப்பெயர்: முருகையா மாரியாய்(மணிமலர்), வயது: 52, முகவரி: விளாத்திக்குளம், ஓமந்தை, வவுனியா. தொழில்: வியாபாரம்.

இப்பெண் வியாபார நோக்கமாக வவுனியா சென்று வந்தவேளை அங்கு 'கமநே', 'ராஜபக்ச' போன்ற இராணுவத்தினருடன் ஏற்பட்ட தொடர்புகளால் அவர்களுக்கு 'விடுதலைப்புலிகள்' பற்றிய தகவல்களை வழங்கத் தொடங்கினார். இதன்மூலம் ஓமந்தைப் பகுதியில் அமைந்திருந்த 'பஸ்' அலுவலகம் உட்பட சில இயக்க முகாங்களைப் பற்றிய தகவல்களை வழங்கியுள்ளார். ஓமந்தைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் நடமாட்டங்கள் பற்றியும், அப்பகுதியில் நடந்த சில இராணுவத் தாக்குதல்களில் ஏற்படும் இயக்கத் தரப்பு இழப்புகள் பற்றியும் தகவல்களை வழங்கியுள்ளார். இவற்றிற்காக இவர் 'ராஜபக்ச'- என்னும் இராணுவ வீரனிடம் இருந்து 2,000 ரூபா பணத்தைப் பெற்றுள்ளார்.

முழுப் பெயர்: இராமையா சிவப்பிரகாசம், வயது: 40, முகவரி: மாணிக்கவளவு, ஓமந்தை, வவுனியா, தொழில்: வியாபாரம்.

இவர் ஆரம்ப கால்த்தில் ஒருவரைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததுடன் அதற்காகச் சிறை சென்றும் திரும்பியவர்.

1986ம் ஆண்டுக் காலப்பகுதியில் ஓமந்தைப் பகுதியில் இருந்த இராணுவ முகாமில் சமையல் வேலை செய்துவந்த இவர் அவ் இராணுவத்தினரோடு சேர்ந்து பல தமிழ்க் கிராமங்களில் சுற்றிவளைப்பிற்கு சென்றதோடு பல அப்பாவித் தமிழ் மக்களையும் இயக்க ஆதரவாளர்களையும் காட்டிக்கொடுத்து கைது செய்யவைத்தார். இதற்காக அக்காலப் பகுதியில் 20,000 ரூபா பணத்தை இராணுவத்தினரிடம் இருந்து பெற்றவர். இவர் தரைமார்க்கமாக வந்து எமதியக்க முகாங்கள், காவலரண்கள் என்பவற்றை அடையாளம் கண்டு அவதானித்த பின்னர் வவுனியா 'ஜோசப்' இராணுவமுகாம் சென்று அத்தகவல்களை வழங்குவதுடன், தாக்குதலில் ஈடுபடும் இராணுவ உயர் அதிகாரிகளுடன் சேர்ந்து உலங்கு வானூர்தியில் அப்பகுதிகளுக்கு வந்து அம் முகாம்களை அடையாளம் காட்டியுள்ளார். இத் தொடர்புகள் மூலம் வவுனியா மன்னார்ப் பகுதிகளில் அமைந்திருந்த கொந்தக்காரன்குளம், கோழியா குளம், மதினாநகர் ஆகிய இடங்களில் அமைந்திருந்த முகாங்கள் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட இயக்க முகாங்கள் பற்றிய தகவல்களை வழங்கியதன் மூலம் அவற்றுள் அனேகமான முகாங்கள் விமானத் தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தன்னைச் சந்தேகிக்கிறார்கள் என்பதை அறிந்த இவர் தலைமறைவாகி வவுனியாவில் நின்ற வேளை அங்கு பல அப்பாவிப் பொதுமக்களை இராணுவத்தினருக்குக் காட்டிக்கொடுத்துள்ளார்.

இக் காட்டிக்கொடுப்புகளுக்குச் சன்மானமாக கட்டங்கட்டமாக 30,000 ரூபா பணத்தையும் தடை செய்யபப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்து விற்றதன் மூலமும் பல ஆயிரக்கணக்கான ரூபா பணத்தை வருமானமாகவும் பெற்றுள்ளார்.

முழுப்பெயர்:- செல்லையா அம்பிகைபாலன் வயது: 38, முகவரி: தாமரைக்குளம் அடம்பன், மன்னார். தொழில்: லிகிதர், வியாபாரம்.

## ■ விசாரணையின் பின்னர் தேசத் துரோக குற்றவாளிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. ■

இவர் மூன்று பெண்களைத் திருமணம் செய்து, முதல் மனைவியை உலக்கையால் அடித்துக் கொலையும் செய்தவர். 1990ம் ஆண்டு 6ம் மாதமளவில் மன்னார் தாமரைக்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளால் நிலக்கண்ணி புதைக்கப்பட்டதை அறிந்து அத்தகவலை கடிதம் மூலம் தள்ளாடி இராணுவ முகாமுக்குத் தெரியப்படுத்தியதன் மூலம் அவ்வெடி குண்டு இராணுவத்தினால் கைப்பற்றப்படுவதற்கு காரணமாக ,இருந்துள்ளார்.

பூநகரி பகுதிக்கு இராணுவத்தினர் வருவதற்கு திட்டமிட்டிருந்த வேளையில் இவர் பூநகரி பகுதிக்கு நேரடியாகச் சென்று அவதானித்ததன் மூலமும் தனக்கு அறிமுகமான பல பொதுமக்களுடன் தந்திரமான முறையில் கதைத்தன் மூலமும் அப்பகுதித் தகவல்களை முழுமையாக சேகரித்து இராணுவத்திற்கு வழங்கியுள்ளார். இளமருதங்குளம், புதுக்குளம், சின்னக்குளம், நெழுக்குளம், ஓமந்தை ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த இயக்கமுகாம்கள் உள்ளிட்ட வவுனியா, மன்னார் பகுதிகளில் அமைந்திருந்த பல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை வழங்கியுள்ளார்.

இவர் தரை மார்க்கமாக வந்து எமது முகாம்கள், காவலரண்கள் ஆகியவற்றை அடையாளம் கண்டு அவதானித்த பின்னர் வவுனியா 'ஜோசப்' இராணுவ முகாம் சென்று அங்கிருந்து தாக்குதலில் ஈடுபடும் இராணுவ உயரதிகாரிகளுடன் சேர்ந்து உலங்கு வானூர்தியில் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு வந்து குறித்த முகாம்களையும், காவலரண்களையும் காட்டியுள்ளார். இத் துரோகத்தனங்களுக்குச் சன்மானமாக இராணுவத்திடம் இருந்து 35,000 ரூபா பண்த்தையும், தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்து விற்றதன் மூலம் பல ஆயிரக்கணக்கான ரூபா வருமானத்தையும் பெற்றுள்ளார்.

முழுப்பெயர்:- அரியரத்தினம் சிவானந்தம், வயது: 31, வேறு பெயர்: சின்ரா, முகவரி: பாவற்குளம், வவுனியா. தொழில்: வியாபாரம்.

கல்லாறு மினிக்பாம், சாளம்பைக்குளம், நாலாம்கட்டை ஆகிய இடங்களில் அமைந்திருந்த முகாம்கள் உள்ளிட்ட வவுனியாப் பகுதியில் அமைந்திருந்த பல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை வழங்கியதன் மூலம் அவற்றுள் பல முகாம்கள் விமானத்தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் காரணமாக இருந்துள்ளார். பாவற்குளம், செட்டிகுளம் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் அணியினரின் திட்டங்கள், நகர்வுகள் பற்றி உடனுக்குடன் வவுனியா சென்று இராணுவத்திற்கு தெரியப்படுத்துவார். செட்டிக்குளம் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொள்ளவிருந்த தாக்குதல் திட்டம் பற்றி இராணுவத்திற்கு உடன் தெரியப்படுத்தியதன் மூலம் அத் தாக்குதல் முயற்சி தோல்வியடைவதற்கு காரணமாக இருந்தார். அதில் ஒரு போராளி கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. இக் காட்டிக் கொடுப்புகளுக்காக இராணுவத்தினரிடமிருந்து 35,000 ரூபா பணத்தையும், தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்து விற்றதன் மூலம் 1000 ரூபாக்கும் அதிகமான வருமானத்தையும் பெற்றுள்ளார்.

முழுப்பெயர்:- விஸ்வலிங்கம் நாகராசா, வயது: 44, முகவரி: உயிலங்குளம், மன்னார். தொழில்: வியாபாரம்.

இவர் மன்னார், வவுனியாப் பகுதிகளில் அமைந்திருந்த கல்மடு, கள்ளிக்குளம், விளாத்திக்குளம், மகிழங்குளம் ஆகிய இடங்களில் இருந்த பல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை வழங்கியதன் மூலம் அவற்றுள் அநேகமான முகாம்கள் விமானத் தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் காரணமாக இருந்துள்ளார். குறிப்பாக மகிழங்குளம் பகுதியில் இருந்த பெண் போராளிகளின் முகாம் விமானத் தாக்குதலுக்கு உள்ளானதற்கும், அதில் இரு பெண் போராளிகளும், ஓர் அப்பாவிப் பெண்மணியும் கொல்லப்படுவதற்கும் காரணகர்த்தாவாக இருந்துள்ளார். வன்னிப் பகுதியைச் சேர்ந்த சில இயக்க முக்கியஸ்தர்களின் பெயர் விபரங்கள், நடமாட்டங்கள், தங்குமிடங்கள் பற்றிய விரிவான தகவல்களைச் சேகரித்து வழங்கியுள்ளார். இந்த துரோகத்தனங்களுக்கு சன்மானமாக 30,000 ரூபா பணத்தையும் தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்து விற்றதன் மூலம் 15,000 ரூபாய்க்கும் அதிகமான பணத்தையும் பெற்றுள்ளார்.

முழுப்பெயர்: அல்பிறட் டொமினிக் அருள்சேகரம், வயது: 48, வேறு பெயர்: டோனா, முகவரி: நாவற்குளம் அகதி முகாம். ஓமந்தை, வவுனியா. தொழில்: கடைச்சல், வியாபாரம்.

இவர் தரைமார்க்கமாக வந்து எமதியக்க முகாம்கள், காவலரண்கள் என்பனவற்றை அடையாளம் கண்டு அவதானித்த பின் வவுனியா 'ஜோசப்' இராணுவ முகாம் சென்று அங்கிருந்து தாக்குதலில் ஈடுபடும் இராணுவ உயரதிகாரிகளுடன் சேர்ந்து உலங்கு வானூர்தியில் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு வந்து குறித்த முகாம்களையும் காவலரண்களையும் அடையாளம் காட்டியுள்ளார்.

இத் தொடர்புகள் மூலம் பம்பைமடு, இளமருதங்குளம் ஆகிய இடங்களில் அமைந்திருந்த முகாம்கள் உள்ளிட்ட வவுனியா, மன்னார்ப் பகுதிகளில் அமைந்திருந்த பல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை வழங்கியதன் மூலம் பம்பைமடுவில் அமைந்திருந்த முகாம் உள்ளிட்ட பல இயக்கமுகாம்கள் விமானத்தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

தாண்டிக்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளின் நடமாட்டங்கள் பற்றியும், மிதிவெடிகள் வைக்கப் பட்டுள்ள இடங்கள் பற்றியும் தகவல்களை வழங்கியுள்ளார். இவற்றிற்காக இராணுவத்தினரிடமிருந்து கட்டங்கட்டமாக 10,000 ரூபா பணத்தையும் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்து விற்றதன் மூலம் பல ஆயிரக்கணக்கான ரூபா வருமானத்தையும் பெற்றுள்ளார்.

முழுப்பெயர்: நல்லான் சுப்பையா. வயது:40, முகவரி: இல 656, 1ம் வட்டாரம் வள்ளுவர்புரம், விசுவமடு, கிளிநொச்சி. தொழில்: வியாபாரம்(சொந்தமாக லொறி வைத்துள்ளார்.)

இவர் 1991ம் ஆண்டு 3ம் மாதம் அளவில் தனது லொறி மூலம் கொழும்பு, கிளிநொச்சி பகுதிகளுக்கிடையில் வியாபாரத்தில் ஈடுபடத்தொடங்கினர். இக்காலத்தில் ஒரு தடவை இவரது லொறியில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் கொண்டு வரப்பட்டவேளை லொறி இராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. இவ்வாறு இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்ட தனது லொறியை மீட்பதற்காக இவர் அடிக்கடி வவுனியா சென்று வந்தவேளை 'இந்திரன்' எனும் 'ரெலோ' நபர் மூலம் இராணுவ உளவுப்பிரிவுடன் தொடர்புபடுத்தப்பட்டு தடை செய்யப்பட்ட பொருட்களுடன் லொறியைத் திருப்பித்தரலாம் என்னும் இராணுவத்தினரின் வாக்குறுதியுடன் உளவாளியாகச் செயற்பட ஆரம்பித்தார்.

இத் தொடர்பின் மூலம் ஜோசப் இராணுவ முகாமுக்கு அடிக்கடி சென்று வந்துள்ள இவர் அங்கு இராணுவ உளவுப் பிரிவின் உயரதிகாரியைச் சந்தித்து உரையாடி தனது லொறிமூலம் வெடிகுண்டை யாழ்ப்பாணம் கொண்டு வந்து வெடிக்க வைப்பதற்கு பூரண சம்மதம் தெரிவித்து அவருடன் சேர்ந்து அதற்கான திட்டங்களையும் வகுத்துள்ளார். மேலும் வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களை நஞ்சூட்டிக் கொலை செய்வதற்கும் அவ் இராணுவ உயரதிகாரியோடு சேர்ந்து திட்டமிட்டுள்ளார்.

தனது திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுரேஸ் என்பவரையும் தயார்ப்படுத்தி இருந்தார். குறிப்பிட்ட சுரேஸை அழைத்துச் சென்று இராணுவத்தால் வழங்கப்படும் வெடிகுண்டைக் கையாள்வதற்கு பயிற்சியை வழங்கி அதனைக் கொண்டு வருவதற்காக அவரை அழைத்துச் செல்வதற்காக வந்தவேளை இவர் எம்மால் கைது செய்யப்பட்டார்.

இந் நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக இராணுவத்தினரிடம் இருந்து பணமாக நேரடியாக 5000 ரூபா பெற்றுள்ளதுடன் இராணுவத்தால் வழங்கப்பட்ட தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்து விற்றதன் மூலம் பல ஆயிரம் ரூபா வருமானத்தையும் பெற்றுள்ளார்.

முழுப்பெயர்: பேதுரு சாந்தான், வயது 48, முகவரி: அடம்பன், மன்னார். தொழில்: விவசாயம், வியாபாரம்.

வவுனியா, மன்னார் பகுதிகளில் அமைந்திருந்த சின்னப்பண்டிவிரிச்சான்குளம், பம்பைமடு, செட்டிக்குளம், வவுனிக்குளம் ஆகிய இடங்களில் இருந்த முகாம்கள் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை இவர் கொடுத்துள்ளார். இராணுவ உளவுப்பிரிவின் உயர் அதிகாரியான செனிவிரட்னா என்பவரை சந்திப்பதற்காக அம்பிகைபாலன், அமரசிங்கா போன்றோர் மூலம் இவர் வவுனியா 'ஜோசப்' இராணுவ முகாமில் இருந்து உலங்கு வானூர்தி மூலம் கொழும்புக் கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். இவர் தரைமார்க்கமாக வந்து எமது முகாம்கள், காவலரண்கள் ஆகியவற்றை அடையாளம் கண்டு அவதானித்த பின்னர் வவுனியா 'ஜோசப்' இராணுவ முகாம் சென்று அங்கிருந்து தாக்குதலில் ஈடுபடும் இராணுவ உயர் அதிகாரிகளுடன் சேர்ந்து உலங்கு வானூர்தியில் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு வந்து அம்முகாம்களையும், காவலரண்களையும் அடையாளமும் காட்டியுள்ளார். மது அருந்தும் பழக்கமுடைய இவர் இராணுவத்துடன் சேர்ந்து மது அருந்துவதற்காகவே மேற்படி காட்டிக்கொடுப்புக்களை செய்ததுடன் 1000 ரூபா வரையான பணத்தையும் நேரடியாகப் பெற்றுள்ளார். மேலதிக பணமும், பொருள்களும் வழங்குவதாக இராணுவத்தினரால் வாக்குறுதி அளிக்கப்பட்டபோதிலும் அவை வழங்கப்படவில்லை.

முழுப்பெயர்: பல்ராஜசிங்கம் மகேஸ்வரன்(மோகன்), வயது: 27. முகவரி: தேனுடையான், அடம்பன் மன்னார். தொழில்: விவசாயம், வியாபாரம்.

பூநகரி பகுதிக்கு இராணுவம் வரமுன்னர் அப்பிரதேசம் பற்றியும் அப்பகுதியில் அமைந்திருந்த இயக்க முகாம்கள் பற்றியும் விரிவான தகவல்களை இராணுவத்திற்கு வழங்கியுள்ளார். வவுனியா மன்னார் பகுதிகளில் அமைந்திருந்த வட்டக்கண்டல், காத்தான்குளம், விடத்தல்தீவு ஆகிய இடங்களில் இருந்து முகாம்கள் உள்ளிட்ட பல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை இராணுவத்திற்கு வழங்கியதோடு அதில் விடத்தல் தீவில் இருந்தமுகாம் உட்பட சில முகாம்கள் விமானத் தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் காரணமாக இருந்துள்ளார். பல தமிழ்ப் பொதுமக்களுடன் தந்திரமான முறையில் பழகி பல பொய்க் காரணங்களைக் கூறி அவர்களைத் தமது தகவல் சேகரிப்புக்கு பயன்படுத்தியுள்ளார். இக்காட்டிக் கொடுப்புகளுக்காக இராணுவத்திடமிருந்து கட்டம் கட்டமாக மொத்தம் 53,000 ரூபா பணத்தையும், தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வரலாம் எனவும் பூரண அனுமதியைப் பெற்றிருந்ததன் மூலம் 8,000 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானத்தையும் பெற்றுள்ளார். ■

# பெண்

அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியால் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றது

## சிறுகதை

அம்மாவின் கண்ணில் தெளிவாகப் படக்கூடியதாய் அடுக்களை மேசை மேல் கடிதத்தை வைத்தாள் கீதா. அந்தக் கடிதத்தைப் பார்த்து விட்டு அம்மா கதறப் போகின்ற கதறலையும் துடிக்கப்போகின்ற துடிப்பையும் கற்பனை செய்து பார்த்தபோது, தன் மேலேயே ஆத்திரமேற்பட்டது அவளுக்கு. அம்மா இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்த்து இருக்கமாட்டாள். அதைத் தாங்கிக் கொள்கின்ற சக்திகூட அம்மாவுக்கு கிடைபாது என்பதை நினைத்துப் பார்த்தபோது அம்மாமேல் பரிதாப உணர்வு எழுந்தது கீதாவுக்கு. ஆனாலும் அந்த நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாதது என்பதை அவள் உணர்ந்து தான் இருந்தாள்.

பெருமூச்செறிந்தபடி யன்னலினூடாக வெளியே வெறித்துப் பார்த்தாள் கீதா. தூரத்தில் நீர் நிரம்பிய வாளியை சுமக்க முடியாமல் சுமந்தபடி எங்கோ போய்க் கொண்டிருந்தாள் அம்மா. அவளின் மெலி ந்த உடலையும் உட்குழிந்த விழிகளையும் உற்றுப் பார்த்தபோது



அவளின் அண்ணன் சங்கரின் நினைவுகள் அவள் அடிமனதில் எழுந்து கொண்டன.

சங்கர் இயக்கத்திற்குப் போன பின்னர்தான் அம்மா இப்படி எலும்பும் தோலுமாய்த் துரும்பாகிப் போனாள். அழுதழுது அவள் கண்கள் ஒடுங்கிப் போனதைத் தவிர வேறு பயனெதுவும் இல்லை. துப்பாக்கி வேட்டுக்களும், குண்டுச் சத்தங்களும் கேட்கும் ஒவ்வொரு கணமும், அம்மா செத்துச் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தாள். சங்கருக்கென்று அம்மா பிடிக்கும் விரதங்களையும் செய்யும் நேர்த்திக் கடன்களையும் நினைத்துப் பார்த்தாள் கீதா. "பாவம் அம்மா--------இனி எனக்கும் சேத்து விரதம் பிடிப்பா----------".

மனத்திற்குள் மெதுவாக கூறிக் கொண்டே அவள் முற்றத்தை நோக்கித் திருப்பிப் பார்த்தாள். முற்றத்து வேப்பமர நிழலில் கதிரை ஒன்றில் சாய்ந்தபடி அவள் தந்தை பரமசிவம் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். அவர் பத்திரிகை படித்து முடிக்க இரண்டு மணித்தியாலமாவது எடுக்கும் என்பது கீதாவுக்கு தெரியும். அந்தளவுக்கு செய்திகளை எல்லாம் நுணுக்கமாக படிப்பார் அவர்.

நான்கு வருடத்திற்கு முன்னர் சங்கர் இயக்கத்திற்கு போன போது அம்மா அழுதழுது கூறியது அவள் செவிகளில் மறுபடியும் ஒலித்தது. "உந்த மனிசன் வேலையில்லாமல் பேப்பரை படிச்சு அரசியல் கதைத்துக் கொண்டு இருந்தத்தாலதான் அவனும் அதைப் பார்த்திட்டு இயக்கத்திற்குப் போனவன்----------" என்று. அம்மா கூறியதில் தவறில்லை என்பதை கீதாவும் உணர்ந்துதான் இருந்தாள். அந்தளவுக்கு அவளின் அப்பா பரமசிவம் சுதந்திர வேட்கையும் தமிழ் பற்றும் கொண்டவராகத் தான் இருந்தார்.
சங்கர் இயக்கத்திற்கு போய்விட்டான், என்பதையறிந்து அம்மா புழுவாய்த் துடித்துக் கதறியழுதபோது பரமசிவம் மட்டும் பெருமிதத்துடன் நிமிர்ந்து நடந்தார். "என்ன நடந்திட்டுது என்று இப்ப செத்த வீடு கொண்டாடுறாய்? அவன் தன்ரை நாட்டைக் காக்கிறதுக்காய் போராடப் போயிருக்கிறான். அவனைப் போல நாட்டுப் பற்றுக் கொண்டவனைப் பிள்ளையாய்ப் பெற்றதற்கு நீ சந்தோசப்பட வேண்டும்-------".

பரமசிவம் அன்றைக்கு கூறியபோது கீதா கூட அதிர்ந்து போனாள். சங்கர் இயக்கத்திற்குப் போனதுக்கு அப்பாவின் தூண்டுதல் தான் அதிகம் என்பதை அவள் உணராமலில்லை. சங்கர் போனதன் பின் பரமசிவத்தின் விடுதலை உணர்வுகள் கீதாவின் இதயத்திலும் விதையாய் பரவிக் கொண்டது.

மேடைகளிலும், கூட்டங்களிலும் பரமசிவத்தின் உணர்வு மயமான பேச்சுக்களைக் கேட்டு எத்தனையோ தடவைகள் மெய்சிலிர்த்திருக்கின்றாள் அவள். சங்கரினதும் பரமசிவத்தினதும் ஒன்றுபட்ட கொள்கைகளையும் இலட்சியங்களையும் செயற்படுத்த வேண்டுமென்ற உறுதியில் தான் இயக்கத்திற்குப் போவதற்கு துணிந்துவிட்டாள் அவள்.

தூரத்தில் அம்மா மாடுகளுக்குத் தண்ணீர் வைத்துவிட்டு, அவை குடிப்பதையே ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டு நின்றாள். அம்மா வருவதற்கிடையில் அங்கிருந்து போய்விட வேண்டுமென்ற எண்ணத்தில் எழுந்த கீதா விரைவாக நடந்து முற்றத்துக்கு வந்தாள்.

கதிரையில் சாய்ந்தபடி பத்திரிகை படித்துக்கொண்டிருந்த பரமசிவத்தை பெருமிதத்துடன் உற்றுப் பார்த்தாள் அவள்.

"அப்பா நான் போட்டு வாறன்.........." அதைக் கூறியபோது அவள் குரல் ஏனோ கரகரத்ததுடன் ஒருவித உறுதியும் அதில் கலந்திருந்தது.

"கவனமாகப் போட்டு வா"
அவள் பாடசாலைக்குப் போகிறாள் என்ற எண்ணத்தில் பரமசிவம் சாதாரணமாகவே கூறிவிட்டு பத்திரிகையை புரட்டினார்.

தூரத்தில் தெரிந்த அம்மாவின் மெலிந்த உருவத்தை ஒருகணம் வேதனையுடன் பார்த்துவிட்டு மறுகணம் விரைவாக நடந்தாள் கீதா.

மாடுகளுக்குத் தண்ணீர் வைத்துவிட்டு, வைக்கோலை அள்ளிப்போட்டுக் கொண்டிருந்த அம்மா, அவசரமாக நடந்து போகும் கீதாவை திரும்பிப் பார்த்தாள். ஏதோ ஒரு முள் அவள் இதயத்தில் சட்டென உறுத்தியது. வேகமாக நடந்து வீட்டுக்குள் வந்தாள் அம்மா.

அடுக்களை மேசைமேல் கீதா எழுதிவைத்த கடிதம் காற்றில் படபடத்துக்கொண்டிருந்தது. அந்தக் கடிதத்தை பயத்துடன் வாசித்தபோது அம்மா அதிர்ந்துபோனாள். சங்கரைப்போல கீதாவும் தன்னை ஏமாற்றிவிட்டதை அறிந்து அந்த தோல்வியைத் தாங்கமாட்டாதவளாய் விம்மி விம்மி அழுதாள்.

கதிரையில் சாய்ந்தபடி பத்திரிகை படித்துக்கொண்டிருந்த பரமசிவத்திடம் கீதாவின் கடிதத்தை கொடுத்தபோது அவள் இதயத்தில் ஏதோ ஒரு வெறுப்புணர்வு எழுந்து படிந்தது.

"உந்தப் பேப்பரைப் படிச்சுப் படிச்சு ஒருத்தனை போராட்டத்துக்கு அனுப்பினதோட விடாமல் பெட்டையையும் அனுப்பிப்போட்டார....". அந்த உண்மையை நினைத்துப் பார்த்தபோது பரமசிவத்தின் மேல் அடக்கமுடியாத ஆத்திரம் அவளுள் எழுந்தது. தன் இயலாமையை எண்ணி அவள் கண்ணீர் வடித்தபோது பரமசிவம் பத்திரிகையை போட்டுவிட்டு பதறியபடி எழுந்தார். என்றைக்குமில்லாமல் அவர் முகம் கோபத்தால் சிவந்து துடித்துக்கொண்டிருந்தது.

"என்ன வேலையடி செய்திட்டாள் இவள்? இப்படி வீட்டை விட்டு இவள் வெளிக்கிடுவாள் எண்டு நான் நினைச்சுக்கூட பாக்கேல்லை. இவ்வளவு காலமாய் மானம் மரியாதையோட திரிஞ்ச என்னை மற்றவையின்ர முகத்தில முழிக்காமல் செய்து போட்டாள். இப்படி ஒரு தலைக் குனிவு எனக்கு வருமெண்டு நான் கனவிலகூடக் காணேல்ல.....". பரமசிவம் கோபத்தால் படபடத்தபடி உரத்துக் கத்தினார். அவரின் ஆத்திரத்தையும் கோபத்தையும் கண்டு கன்னங்களில் வழிந்த கண்ணீரைக் கூட துடைக்க மறந்து போய் சிலையென நின்றாள் அம்மா.

பரமசிவம் அம்மாவை வெறித்துப் பார்த்தபடி கதிரையில் அமர்ந்தார். கீதாவின் கடிதத்தையே சொற்ப நேரம் உற்றுப் பார்த்தவர் ஏதோ ஒரு தெளிவான உறுதியான முடிவுடன் அம்மாவை நோக்கி நிமிர்ந்தார்.

"என்னத்துக்கு பேசாமல் நிக்கிறாய்.' அழு, உன்ரை ஆத்திரம் தீருமட்டும் அழு, ஏனெண்டால் இண்டையோட உன்ர மகள் செத்துப்போனாள். என்ரை கட்டுப்பாடகளை மீறி எண்டைக்கு அவளிந்த வீட்டை விட்டு வெளிக்கிட்டாளோ, அண்டையோட அவள் என்னைப் பொறுத்தவரை செத்திட்டாள்---------"

பரமசிவம் சாதாரணமாகவே கூறிவிட்டு, மறுபடியும் பத்திரிகையை எடுத்துப் புரட்டத் தொடங்கினார். ■

**செல்வி வேணி சின்னத்தம்பி**
**வினோத் வீதி**
**மட்டுவில் தெற்கு.**

அடுத்த போராட்டம் குவாஜீலுவிலும், பொபதற்ஸ்வானாவிலும் இடம் பெறவுள்ளது. இப்பிரதேசத்தில் மக்கள் ஆதரவு ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கு இருப்பினும், மண்டேலா எதிரணி புத்தலேஸிக்கும் அதிக செல்வாக்கு உண்டு. இவர்களே இன்று ஆயுதத்துடன் நடமாட அனுமதிக்கப்பட்ட வெள்ளையாட்சியாளரின் செல்லப்பிள்ளைகள்.

சிஸ்காயை தவிர ஏனைய பிரதேசங்களில் நடைபெற்ற காந்தீய போராட்டங்கள் சிறந்த வெற்றியைத் தந்துள்ளன. மேற்கூறப்பட்ட மாகாணங்களில் நடைபெற இருக்கும் அகிம்சை வழிப் போராட்டத்திற்கு சிஸ்காயில் இடம்பெற்ற அனுபவமே கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சர்வதேசக் களம்...

28பேர் மரணம் அடைந்து 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். கறுப்பின இராணுவத்தினர் தம் மக்கள் மீது இவ்வளவு கொடிய வன்முறையைப் பிரயோகிப்பார்கள் என மண்டேலா சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஏற்கனவே தமது சுகபோக வாழ்வுக்கு பேரழிவு வந்து விடும் எனப்பயந்த நிலையில் உள்ள சிஸ்காய் இராணுவத்தினருக்கு இதைத் தவிர வேறு வழி இல்லைப் போலும்.

## சோமாலியாவில் உணவு விநியோக பிரச்சனையின் பின்னணி:

இங்கு பஞ்சத்தினால் தினமும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்து கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. அமெரிக்க - சோவியத் பலப் பரீட்சையினாலேயே இந்நாடு சீரழிவுக்குள் தள்ளப்பட்டது. வறிய நாடுகளின் நிர்ப்பந்தத்தாலும் ஐ. நா. பொதுச்சபை காரியதரிசி புட்ரஸ் காலியின் தனிப்பட்ட நிர்ப்பந்தத்தாலும் ஐ. நா. உணவு நிவாரணத்தை மேற்கொண்டது. உணவு விநியோகத்தை கொள்ளையர்கள் ஆயுத முனையில் பறிக்கிறார்கள். அதனால் உணவு விநியோகிக்க முடியவில்லை என மேற்கு நாட்டுப் பத்திரிகைகள் கூறி வருகின்றன.

உண்மையில் அமெரிக்காவும், சோவியத்தும் ஏராளமான ஆயுதங்களை இம்மக்களிடையே காணப்பட்ட குறுநிலத் தலைவர்களைக் கொண்ட பிரிவுகளிடையே வழங்கி தங்கள் பலப்பரீட்சையை நடத்தி முடித்தன. இது முடிவடைந்ததும் மக்களிடம் இருந்த ஆயுதங்களை மரபு ரீதியாக இருந்த தலைவர்கள் கட்டுப்படுத்தி தமது செல்வாக்குகளை வளர்க்க முற்பட்டனர்.

பஞ்சம் வந்ததும் ஆயுத முனையில் கொள்ளையிட்டு தமது குழுவினர்களுக்கு உணவு கிடைக்க ஒவ்வொரு குழுத்தலைவர்களும் முயன்றனர். இந்நிலையில் திடீரென பெருந்தொகை உணவு உதவி நாட்டுக்குள் வர அதனை கொள்ளையிட்டு தமது மக்களிடையே வழங்க ஒவ்வொரு குழுத் தலைவர்களும் முயல்கின்றனர். இதன் வெற்றியிலேயே தமது பதவியின் எதிர்காலம் தங்கியுள்ளதை இவர்கள் உணர்ந்துள்ளனர்.

இதனைவிட தமது இனத்தைச் சாராதவர்கள் குறிப்பாக இஸ்லாமிய மதத்தைச் சேராதவர்கள் விநியோகத்தில் ஈடுபடுவதை எல்லாக் குழுக்களும் விரும்பவில்லை. நவீனமயத்தில் நம்பிக்கை கொள்ளாத இப்பிரிவினர் கோரிக்கைக்கு பாகிஸ்தானிய இராணுவம் கை கொடுக்க முன் வந்தது. ஆயினும் 500 பேருக்கு மேற்பட்ட பாகிஸ்தான் இராணுவத்தினர் வரக்கூடாது என கண்டிப்பான உத்தரவை தலைவர்கள் வழங்கியுள்ளனர். உணவு விநியோகங்கள் ஒவ்வொரு குழுத் தலைவர்கட்கூடாகவே இடம் பெறப்போகிறது. மக்கள் பட்டினியால் செத்தாலும் பரவாயில்லை இதற்குமேல் பலத்தை உபயோகிக்கப் போவதில்லை என ஐ. நா. முடிவெடுத்துள்ளது. ■

# போர்க்கலை உதிர்க்கும் கரு




1981ம் ஆண்டு அக்டோபர் 15ம் திகதி லெப்டினன்ட் சார்ள்ஸ் அன்ரனி(சீலன்) தலைமையில் விடுதலைப்புலிகளின் தாக்குதற் படையினர் யாழ்ப்பாணத்
தில் காங்கேசன்துறை வீதியில் இராணுவ ஜீப் ஒன்றின் மீது முதலாவது கெரில்லாத் தாக்குதலை நடத்தினர். இத் தாக்குதலில் இராணுவக் கோப்ரல்
கேவவாசம் இராணுவச் சிப்பாய் திஸ்ஸர ஆகிய இரண்டு இராணுவப் படையினர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் எதிரிகளின் ஆயுதங்களும் கைப்பற்றப்
பட்டன .

இதனையடுத்து 1982 யூலை 2ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து பதினாறு மைல் தொலைவிலுள்ள நெல்லியடியில் ரோந்து சென்று கொண்டிருந்த
பொலிஸ் படையின் மீது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட கெரில்லாத் தாக்குதலில் நான்கு பொலிசார் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதுடன் 3
பொலிசார் படுகாயமுற்றனர். 1982 செம்பம்பர் 29ல் ஜே. ஆர். ஜயவர்த்தனா ஜனாதிபதி தேர்தல் வாக்குவேட்டைக்காக யாழ்ப்பாணம் வந்த அன்று
பொன்னாலையில் நின்ற கடற்படை வாகனங்களை சிதைக்க எடுத்த முயற்சியில் நிலக்கண்ணி வெடியால் பாலம் தகர்க்கப்பட்டது .

எமது தாயகத்தில் விடுதலைப் புரட்சி தொடங்கிவிட்டது.- இது நிச்சயமாக வெற்றிபெறும். ஏனெனில் இது அடி மட்டத்திலிருந்து தொடங்கியுள்ளது. கெரில்லாக்களைக் கண்டு பயப்பட்ட மக்கள் இன்று கெரில்லாக்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள்.

• சீலன் 1983ல்





# விடுதலை வருவது உறுதி



1983 யூலை 15ம் திகதி தலை சிறந்த இராணுவத்தலைவர்களுள் ஒருவரான லெப்டினன்ட் சாரள்ஸ் அன்ரனி(சீலன்) இராணுவக் கூலிகளால் கொல்லப்பட்டு வீரமரணமடைந்தார். இதற்குப் பதிலடியாக யூலை 23ம் திகதி திருநெல்வேலி பலாலி வீதியில் லெப்டினன்ட் செல்லக்கிளி(அம்மான்) தலைமையில் 14 புலி வீரர்கள் சிறுடையில் நவீன ஆயுதங்களுடன் பதுங்கித் தாக்குதலை முறைப்படி வெற்றிகரமாக நடாத்தி 13 சிங்கள இராணுவத்தினரை உள்ளடக்கிய FOUR FOUR BRAW என்ற இராணுவ அணியை அழித்தனர். இச் சம்பவம் தமிழ்ழ விடுதலைப் போராட்ட வரலாற்றையே புதுத்திசைக்கு திருப்பியது. இவ்வாறு ஆரம்பமான பதுங்கித் தாக்கும் போராட்டமுறையே காலத்தோடு வளர்ச்சி பெற்று உலகின் தலைசிறந்த கெரில்லா விடுதலை இயக்கம் என்ற பெயரை தமிழ்ழ விடுதலைப்புலிகளுக்கு ஈட்டிக்கொடுத்தது. இதன் வளர்ச்சியில் நவீனத்துவமும் புகுத்தப்பட்டது. A. K. 47, G. P. MG, R. P. G, L. M. G 30 கலிபர், பிரெவினில்(L. M. G 50 கலிபர்) G3, M16, மோட்டார் எறிகணைகள், சினைப்பர்கள் போன்ற நவீன ஆயுதங்களுடன் சக்திமிக்க அணியாக, தென் ஆசியாவின் முக்கிய இராணுவ அணிகளில் ஒன்றாக விடுதலைப்புலிகள் வளர்ச்சி கண்டனர். இவ் ஆயுதங்களை குறிப்பாக கண்ணி வெடிகளை தாமே தயாரித்த புலிகள் ஜொனி கண்ணி வெடிகள், கொலின்ஸ் கடற்கண்ணி வெடிகள் என மாவீரர்களின் பெயர்களை நன்றியோடு அவற்றுக்கு சூட்டினர். பசிலன் மோட்டார், அருள் 89 டிரைபிள் கிறினைற், விவேகன் 92 மோட்டார் எறிகணை என மாவீரர்களின் பெயர்களை தமது தயாரிப்புகளுக்குச் சூட்டி தமது இதய பாசத்தை வெளிப்படுத்திய புலிகள், இதே பதுங்கித்தாக்குதல் முறையிலேயே, கண்ணி வெடியை புதைத்து சிறிலங்கா இராணுவத் தலைமைகளையும் கடற்படை தலைமைகளையும் அராலித்துறையில் அழித்து உலகையே வியப்புக்குள்ளாக்கினர்.

27.10.1982ல் சாவகச்சேரியில் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலில் பொலிஸ் நிலையம் கைப்பற்றப்பட்டு முதன்முதலில் ஆயுதக்களஞ்சிய அறையில் இருந்த 33 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இதுவே ஒரு பொலிஸ் நிலையம் முற்றாக வீழ்ச்சியுற்ற முதலாவது அதிரடித்தாக்குதல். 1983 மார்ச் 4ல் பரந்தனுக்கருகே உமையாள் புரத்தில் சென்று கொண்டிருந்த இராணுவ அணிமீது நடாத்தப்பட்ட கெரில்லாத் தாக்குதலைபடுத்து இராணுவத்திற்கும் புலிகளுக்கும் நேரடித் துப்பாக்கிச் சண்டை ஒரு மணி நேரத்திற்கு நடைபெற்றது இத் தாக்குதலில் இராணுவத்தினர் காயமடைந்து பின் வாங்கியதுடன் கவசவண்டி ஒன்றும் முதன்முதலில் சேதப்படுத்தப்பட்டது.




**1987ல்** இந்திய இராணுவம் எம் மண்ணில் காலடி வைத்த வேளையில், புலிகளைச் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்தனர். புலிகளோடு மக்களை இனங்காண முடியாத இராணுவத்தினர் மக்களை வயது வேறுபாடு இன்றி கொன்று குவிக்கும் பணியில் வீடு வீடாகச் சோதனையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்திய இராணுவத்தின் முற்றுகைக்குட்பட்ட ஒரு பிரதேசமான தெல்லிப்பளை பகுதியிலிருந்து மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் 13 வயது நிரம்பியவளான தர்சினி என்ற இளம் பெண் தனது பெற்றோருடன் அப் பகுதியிலேயே இருந்தாள்.

விடுதலைப் போரிலே ஊறிய உள்ளங்கள் உயிர்த்துடிப்புடன் போராடிக்கொண்டிருக்கும் எமது செந்த மண்ணில் "வாழ்வது என்றால் சுதந்திரமாக வாழவேண்டும் இல்லையேல் சாகவேண்டும்" என்ற சிந்தனையே ஊறி இருக்கின்றது.

ஒரு முறை சுற்றிவளைப்பில் ஈடுபட்ட இந்திய இராணுவம் தர்சினியின் சகோதரனை "பயங்கரவாதி" என்ற முத்திரையுடன் கைது செய்து காங்கேசன்துறை தடுப்புமுகாமில் வைத்து மிகவும் கொடூரமான முறையில் சித்திரவதை செய்தது. சகோதரனைப் பார்க்கவென தாயுடன் தர்சினியும் சென்றாள். தமையனின் உடலில் சித்திரவதையின் தடயங்களைக் கண்ட தர்சினியின் கண்கள் கலங்குகின்றன. தமையனிடம் "அண்ணா இவங்களை நான் துவக்கு எடுத்துச் சுடாமல் விடமாட்டேன்" என்று உறுதியுடன் கூறுகிறாள். சகோதரனின் கண்களும் கலங்குகின்றன.

இரு உடன்பிறப்புக்களுடன் கடைசிப் பிள்ளையாகப் பிறந்த தர்சினி மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டாள். கடுமையான போராட்ட சூழலில் வளர்ந்ததால் இவளது இயல்பு வித்தியாசமானதாக இருந்தது. அச்சமின்றித் துணிவுடன் வாதாடும் திறனும், கல்வியிலும், கலைகளிலும், ஆர்வத்துடன் கற்கும் திறமையும், வீட்டிற்கு வருவோரை உபசரிக்கும் நற்பண்பும் உடையவளாக இருந்தாள்.

தர்சினியின் வீட்டிற்கு போராளிகளும், ஆதரவாளர்களும் வருவதை அறிந்த இந்தியப் படையினர் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் உதவியுடன் சுற்றி வளைத்த போது ஆதரவாளரான நிர்மலன் என்ற தமையனின் நண்பனை இவளின் வீட்டில் வைத்து இவளுக்கு முன்னாலேயே சுட்டுக்கொன்றனர். தர்சினியின் ஒன்றுவிட்ட சகோதரனுடன் தானும் ஒரு சகோதரனைப் போலவே பாசமுடன் பழகி போராட்ட உணர்வினைத் தர்சினிக்கு உணர்த்தியதில் இவனுக்கும் பங்குண்டு. இராணுவத்தினர் சுட்டபோது நேரே கண்டதில் அது தர்சினியின் இதயத்தில் ஆழமாகப் பதிந்தது. இந்தச் சம்பவங்கள் பிஞ்சு உள்ளத்தில் தானும் போராடப் போகவேண்டும் என்ற எண்ணத்தை மேலும் உறுதிபெறச் செய்தது.

இந்திய இராணுவத்தின் கொடுமைகள் முடிவடைந்ததும் மீண்டும் சிறிலங்காப் படையினரின் அனர்த்தங்கள் ஆரம்பித்தன. புலிகளுடன் நேருக்கு நேர் சண்டை போடமுடியாத சிங்களப் படையினர் குண்டுவீச்சு விமானங்கள் மூலம் தாக்குதலைத் தீவிரப்படுத்தினர். புலிகளை அழிப்பதாகக் கூறிய இலங்கை அரசு குடிமனைகள் மீதும், பாடசாலைகள், வைத்தியசாலைகள், ஆலயங்கள் போன்றவற்றின் மீதும் தாக்குதலை நடத்தியது.

இந்த வேளையில், தர்சினி வீட்டிலிருந்து குண்டு வீச்சு மத்தியிலும் காங்கேசன்துறைப் பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த போராளிகளுக்குத் தினமும் உணவு தயாரித்துச் சென்று கொடுத்துவிட்டு வருவாள். ஒருமுறை உணவுடன் சென்ற தர்சினி திரும்பி வீட்டிற்கு வரவில்லை. தந்தையார் போராளிகளின் முகாமிற்கு தேடிச்சென்ற போது வரமறுத்துவிட்டாள். ஆனால் போராளிகள் இவளைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். போராட்ட உணர்வு இதயத்தில் வலுக்கொண்ட இவள் வீட்டில் தந்தையுடனும், சகோதரனுடனும் தான் இயக்கத்திற்குப் போகப் போகிறேன் என்று வாதாடுவாள்.

சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல்கள் வான், தரை, கடல் வழியாக ஆரம்பித்தன. யாழ் கோட்டையில் மும்மரமாக சண்டை நடந்து கொண்டிருந்தது. புலிகள் சளைக்காது வீரத்துடன் முன்னேறிக்கொண்டிருந்தார்கள். நாளுக்கு நாள் மக்களின் உடமைகளும் உயிர்களும் சிறிலங்காப் படையின் குண்டு வீச்சுக்களால் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. வீட்டிலிருந்த தர்சினிக்குதினமும் பத்திரிகைகளை வாசிக்கும் பொழுதும் செய்திகளைக் கேட்கும் பொழுதும் போராடப் போகவேண்டும் என்ற உணர்வு புயலடிக்கத் தொடங்கியது. தர்சினி 1990-08-15 அன்று விடுதலையை நோக்கிய பாதையில் காலடி வைத்தாள். வயதிலே சிறியவளான தர்சினி விடுதலைப் பாதையில் இணையும் போது தந்தைக்கு "நாட்டு நிலைமையை யோசியுங்கள்" என்று எழுதிய கடிதத்தை இங்கு முழுமையாகப் பிரசுரிக்கின்றோம்.

அப்பா,

நான் இயக்கத்திற்குப் போக ஆசை கொண்டுள்ளேன். இந்த ஆசையை நிறைவேற்ற உங்கள் ஒத்தாசை வேண்டும். இதைப்பற்றி நீங்கள் தப்பாக நினைக்க வேண்டாம். பேனா ஏந்திய கைகள் இன்று துப்பாக்கி ஏந்துகின்றன என்று ஆச்சரியப் படலாம். ஆனால் நீங்கள் அன்று படிப்பை விட்டுவிட்டு ஆமி வேலையில் சேர்ந்தீர்கள். இப்போது புரிகிறது. முதலில் நாட்டு நிலமையை யோசியுங்கள். இன்று சிங்களவர்கள் கூட ஒரு சிறுவன் தனது மதிய உணவு நிதியை தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒதுக்குகிறான். நடக்க எடுக்க முடியாத கிழவர்கள் கூட ஆயுதம் ஏந்தியவண்ணம் நிற்கின்றார்கள். அவர்கள் அன்று 66, 72, 83, 87 இவ்வாறு ஆண்டாண்டு காலமாக எம்மை அழித்து ஆட்சி செய்ய முனைகிறார்கள். ஏன் நாம் அப்படி முனையக்கூடாது? "அண்ணன் காட்டிய வழியில் தம்பி செல்கின்றான் அதுபோல அக்காள் காட்டிய வழியில் நானும் போகிறேன்" வீணாகத் தேடி அலைய வேண்டாம். தமிழீழம் கிடைக்கும் வரை போராடியே தீருவோம்.

எத்தனை எத்தனை
கொடுமைகள் இங்கே
இனியும் இருப்பது மடமை
என்றே
இன்றே குதிப்போம்
போர்க்களத்தில்
அடிமை வாழ்வு எத்தனை
காலம்
விடிவு காண புறப்படுவோம்
புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்

தி. தர்சினி.

தனது கல்வியை இடையில் நிறுத்திவிட்டு சுதந்திர மண்ணில்தான் கல்வியைத் தொடர முடியும். அதற்குள் விடியலின் பாதையிலே புரட்சிக் கல்வியை தொடரப் போவதாக தந்தையின் சேட்டினுள் கடிதத்தை வைத்து விட்டு அக்காவின் வழியை பின்பற்றி விடியலைக் காணப் புறப்பட்டாள்.

பயிற்சி முகாமுக்கு அனுப்பப்பட்டாள் தர்சினி. அங்கு கீதா என்ற பெயருடன் பயிற்சியினைப் பெற்றாள். தனக்குப் பயிற்சியின் போது வழங்கப்பட்ட பணிகளை மிகவும் சுறுசுறுப்புடன் செய்து முடிப்பாள். அமைதியான தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் விழிகளின் வீரத்தின் உறுதியையும், விடுதலையுணர்வையும் நிதானமாகச் சிந்தித்து திட்டங்களை வகுப்பதிலும் கீதா திறமையாக செயற்பட்டாள். பயிற்சிகளை விரைவாகவும் உற்சாகமாகவும் செய்து முடிப்பாள். தனக்கு பொறுப்பாளராக உள்ளவர்களின் கட்டளைகளை ஏற்று அதன்படி நடப்பாள்.

எல்லாப் போராளிகளுடனும் அன்பாகப் பழகுவாள். இவளது உயிர் நண்பியாக தவச்செல்வி என்ற போராளி இருந்தாள். இருவரும் ஒரே பயிற்சி முகாமிலே பயிற்சி எடுத்தவர்கள். எந்த விடயத்திலும் ஒற்றுமையாகவும் போட்டியாகவும் செயற்படுவார்கள். இருவருக்குமிடையில் பொறாமை என்பது கிடையாது. பயிற்சியின் போது விளையாட்டுப் போட்டிகள் எல்லாக் குழுக்களுக்கிடையிலும் இடம் பெற்றது. அப்போது இருவருக்கும் இடையில் கடும் போட்டி. ஆனாலும் கீதாவே முதலிடங்களைப் பெற்றாள்.

கலை நிகழ்சிகளில் ஆர்வமுடைய கீதா பயிற்சியின் ஒய்வு நாட்களில் நிகழ்சி இடம்பெறும் போது தனது கலைத் திறனையும், பாடல்களையும் இனிமையாக வெளிப்படுத்துவாள்.

பயிற்சி முடிவடைந்ததும் இவள் 15 பேர் கொண்ட குழுவிற்குப் பொறுப்பாளராக தெரிவு செய்யப்பட்டாள். வயதில் சிறியவளாக இருந்தாலும் தனக்குரிய வேலைகளை பொறுப்புடன் ஏற்று பிள்ளைகளுக்கு எந்த நேரம் என்ன வேண்டுமோ அதனைக் கேட்டு நிறைவேற்றுவாள். அறிவுரைகள் கூறி நல்வழிப்படுத்துவாள்.

இவர்களது பயிற்சி முடிந்த நேரத்தில் காரைநகர் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்காப் படையினருடன் மோதல்கள் ஆரம்பமாகின. இந்த மோதலின் போது மகளிர் படைப்பிரிவும் பங்கு கொண்ட போது கீதாவும் கலந்து கொண்டாள்.

பின்னர் விசேட பயிற்சிக்கென அழைக்கப்பட்டு பயிற்சி முகாமிற்கு சென்ற போது இவளைப் பார்க்கவென முதல் தடவையாக பெற்றோரும் சகோதரனும் வந்தார்கள். ஆனால் கீதாவோ தன்னைப் போலவே வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பல போராளிகள் பெற்றோரைக் காணாது இருக்கிறார்கள். நானும் அவர்களைப் போல ஒரு போராளி. நான் மட்டும் பார்த்துக் கதைக்க மற்றப் பிள்ளைகளுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே. அவர்களுக்கும் பாசம் இருக்கும்தானே என்ற நினைப்புடன் பாசத்தின் பிணைப்பு அழுத்தினாலும் பெற்றோரைச் சந்திக்க மறுத்து விட்டாள் கீதாவைப் பார்க்காமலே பெற்றோர் வீடு திரும்பினார்கள்.

எமது இயக்கத்தில் இருக்கும் இவளுடைய அக்காவையும் தான் ஒருமுறையும் இயக்கத்தில் சேர்ந்தபின் பார்க்கவில்லை எனக் கூறுவாள்.

மீண்டும் போர் ஆரம்பமாகியது. மன்னாரில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா அரச படையின் கெடுபிடிகள் அதிகரிக்க மக்கள் அகதிகளாக வேண்டிய நிலை ஏற்பட்டது. உடைமைகள் உயிர்கள் அழிக்கப்பட்டதுடன் பெண்கள் கோரமான முறையில் பாலியல் வன்முறைகளிற்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அத்துடன் புலிகளின் காவல் அரண்களை கைப்பற்றப் போகின்றோம் என்று கூறி முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்துப் புலிகள் பாரிய தாக்குதலை நடத்தத் தொடங்கினர்.

17-06-91 அன்று மன்னாரில் நடைபெற்றுக் கொண்டிருந்த தாக்குதலில் பங்கு கொள்ள மகளிர் படையணியினரும் செல்வதற்கு தயாராகினார்கள். வாகனத்தில் ஒவ்வொரு குழுவும் ஏற்றப்பட்டது. கீதாவும் தோழியரும் வாகனத்தில் ஏறியதும் எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகின்றோம் என்று பாடத் தொடங்கினர். வாகனம் எதிரிகளின் மறைவிடத்தை நோக்கி விரையத் தொடங்கியது. சிறிது தூரம் சென்றதும் யார் இந்த சண்டையில் முதலில் சாகிறது என்ற பேச்சு எழுந்தது. அப்போது கீதா நான்தான் முதலில் சாவேன் என்று கூறினாள். நான்தான் முதலில் சாவேன் என்று மகிழ்ச்சியுடன் கூறியதைக் கேட்டு மொனமாகின்றனர்.

வவுனியாப் பகுதியில் சண்டை மிகவும் தீவிரமாக இடம் பெற்றுக் கொண்டு இருக்கின்றது. சிறிலங்கா படையின் குண்டு வீச்சு விமானங்களின் கண்மூடித்தனமான தாக்குதலின் மத்தியில் புலிகள் இராணுவத்தினரை முன்னேற விடாது பதில் தாக்குதலை நடாத்தியபடி முன்னேறிச் செல்கின்றனர்.

இந்த வேளையில் கீதாவின் அணியினர் வந்த வாகனம் வவுனியா குருக்களூர் பகுதியை அடைந்ததும் பழுதடைந்து விட்டது. அவர்கள் வாகனத்தை விட்டிறங்கி கால்நடையாக சண்டை நடக்கும் இடத்தை நோக்கி விரைகின்றனர். அப்போது இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் இவர்கள் செல்லும்



**- கீதா -**

திசையை நோக்கி வட்டமிட்டு குண்டு வீச்சுக்குத் தயாராகிக் கொண்டிருந்தது. இதனைக் கவனித்த கீதா தன் தோழிகளிடம் பாதுகாப்பு நிலை எடுக்குமாறு கூறுகின்றாள்.

அந்த நேரம் விரைவாக வந்த குண்டு வீச்சு விமானங்கள் இரண்டும் பாதுகாப்புநிலை கொண்டிருந்த இடத்திற்கருகில் பதிந்து சென்றது. அப்பகுதி முழுவதும் ஒரே புகைமண்டலமாக இருந்தது. கீதாவும் அவளுடன் இருந்த மூன்று தோழிகளும் வவுனியா மண்ணிலே சாவுடன் சங்கமமாகின்றனர்.

இறுதி மூச்சுவரை இலட்சிய தாகத்திற்காகவே, களத்தில் போராடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட இவ்வேங்கைகளின் கனவுகளை நன்வாக்க விடியலைக் காண பல்லாயிரக்கணக்கானோர் அணிவகுத்து நிற்பார்கள். எமது மண்மீட்கப்படும் வரை துப்பாகிகள் தூங்கப்போவதில்லை. ■

**மாவீரர் திலீபனின் 5வது ஆண்டு நினைவு - 26-09-1992**



தேசத்தை
நேசிக்கத் தெரிந்தவனுக்கு
மரணம் ஒரு தூசு...
ஆமாம்...
சுதந்திரத்தின் கனம்
மிக அதிகமானதுதான்.

மரணத்தை பூரண மகிழ்ச்சியோடு நான் ஏற்றுக்கொள்கிறேன். எனது சாம்பல் மேட்டிலிருந்து புதிய அத்தியாயம் எழுதப்படவேண்டும். -திலீபனின் இறுதியுரை

# புலிகளும் மத சுதந்திரமும்

**மதம் சம்பந்தமான விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு என்ன? விடுதலைப்புலிகள் மதத்திற்கு விரோதமானவர்களா? மதவழிபாட்டுச் சுதந்திரத்திற்கு எதிரானவர்களா? மதம் பற்றி விடுதலைப்புலிகளின் சித்தாந்த கருத்துப் பார்வை என்ன? இவ்விதமாக மக்கள் மத்தியில் எழுப்பப்படும் கேள்விகளுக்குத் தெளிவான கொள்கை விளக்கத்தை அளிக்க முயல்கிறது இக்கட்டுரை.**

மதம் சம்பந்தமான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை, எமது கொள்கைத் திட்டப்பிரகடனம் தெட்டத்தெளிவாக எடுத்து விளக்குகிறது. அதில் கீழ்க் கண்டவாறு சொல்லப்படுகிறது:

"தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மதசார்பற்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கும். அதேவேளை சகல மதங்களையும் சார்ந்த மக்களினதும் அடிப்படை உரிமையான வழியாட்டுச் சுதந்திரத்திற்கு, எமது இயக்கம் உத்தரவாதமளிக்கும், சகல மதத்தவர்களும் தமது ஆன்மீக அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும், மத-கலாசாரப் பண்புகளைப் பேணிவளர்க்கவும் எமது இயக்கம் ஊக்கமளிக்கும்".

புலிகளின் கொள்கைப் பிரகடனத்தில் இரத்தினச்சுருக்கமாகத் தரப்பட்டுள்ள இந்த விளக்கம், மதம் சம்பந்தமாக மூன்று முக்கிய அம்சங்களை முதன்மைப் படுத்துகிறது.

ஒன்று, மதசார்பற்றநிலை. இரண்டாவது, மக்களின் வழிபாட்டுச் சுதந்திரம். மூன்றாவது, தமிழரின் தேசிய பண்பாட்டு வாழ்வு.

இந்த மூன்று அம்சங்களையும் இனி விரிவாகப் பார்ப்போம்.

விடுதலைப்புலிகள் இயக்கம் மதசார்பற்றது எனும் பொழுது, எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் சார்ந்ததாக நிற்கவில்லை என்பது தான் அர்த்தம். தமிழீழ மக்கள் தழுவிக் கொண்ட சகல மதங்களையும் அரவணைத்து, கௌரவித்து, சகல மதத்தவர்களுக்கும் பொதுவாக நின்று நடுநிலையைக் கடைப்பிடிப்பது தான், மதசார்பற்ற நிலையாகும். தமிழின ஒருமைப்பாட்டையும், தேசிய சுதந்திரத்தையும் இலட்சியமாக வரித்துக் கொண்ட ஒரு விடுதலை இயக்கம், மதசார்பான கொள்கையைக் கடைப்பிடிப்பது தவறானதாகும். இந்தக் குறுகிய மதவாதப்போக்கு தமிழ் இன ஒற்றுமைக்கும் தமிழ்த்தேசிய ஒருமைப்பாட்டிற்கும் பெரும் முட்டுக்கட்டையாக அமையும். இதனைக் கருத்திற் கொண்டு தான் எமது இயக்கம், ஆரம்ப காலத்திலிருந்தே மதசார்பற்ற நடுநிலையைத் தழுவிக்கொண்டது.

சிங்கள அரசு மதசார்பானது. ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு, அதாவது பௌத்த மதத்திற்கு தேசிய அந்தஸ்தும் கௌரவமும் வழங்கி, ஏனைய மதங்கள் சார்ந்த மக்களை அந்நியப்படுத்தியது. இந்தக் குறுகிய மதவாதப் போக்கு சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு வழிகோலி, சிங்கள தமிழ் தேசிய இன முரண்பாட்டைத் தீவிரமடையச் செய்தது. சிங்கள தேசத்து மதவாத, இனவாத ஒடுக்குமுறையைச் சந்தித்துநிற்கும் தமிழ்த் தேசிய இனம், மத நம்பிக்கைகளின் அடிப்படையில் பிளவுபட்டு நிற்கமுடியாது; அது எமது தேசியப் போராட்டத்தைப் பலவீனமடையச் செய்யும். எமது மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வழி நடத்திச் செல்லும் விடுதலை இயக்கம் என்ற வகையில் புலிகள் இயக்கம் மதசார்பற்ற நிலையைத் தழுவி, மதங்களுக்கு அப்பால் நின்று இனரீதியில் -தேசிய ரீதியில், எமது மக்களை அணிதிரட்டி ஐக்கியப்படுத்தும் அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறது.

> **எமது விடுதலை இயக்கத்தின் இலட்சியப் போருக்கு, மதங்கள் துணைநிற்க வேண்டும். இந்த சத்திய யுத்தத்திற்கு ஆதரவாக எமது மத நிறுவனங்கள் குரலெழுப்பவேண்டும். இது சகல மதங்களதும் தவிர்க்கமுடியாத தார்மீகக் கடப்பாடு ஆகும். •**

தமிழீழ மக்களின் சுதந்திர இயக்கம் என்ற ரீதியில், நாம் எமது மக்களின் அடிப்படையான சுதந்திரங்களுக்காகவும், உரிமைகளுக்காகவும் போராடிவருகிறோம். இதில் வழிபாட்டுச் சுதந்திரம் முக்கியமானது. இறை வழிபாடு மனிதர்களின் அடிப்படையான உரிமை. புனிதமான இந்த உரிமையை எமது இயக்கம் கௌரவிக்கிறது.

மெய்யுண்மையைத் தரிசிக்கவிழையும் மனிதனின் ஆன்மீகத் தேடுதலானது, எல்லாக் காலங்களிலும் எல்லாச் சமூகங்களிலும் ஒரு முடிவில்லாத இலட்சியப் பயணமாகத் தொடர்கிறது. வாழ்வியக்கத்தின் அர்த்தத்தையும், பிரபஞ்சத்தின் அற்புதத்தையும் புரிந்துகொள்ள விழையும் மனித இனத்தின் மிகவும் ஆழமான அபிலாசையாக, இந்த விழைதல் தொடர்கிறது. ஆன்மீகமும் சரி, விஞ்ஞானமும் சரி, இந்த விழைதலின் தோற்றப்பாட்டையே குறித்து நிற்கின்றன.

எந்த வழியிலோ, எந்த வடிவத்திலோ உண்மையைத் தேடும் உரிமை மனிதனுக்கு உண்டு. இது அவனது ஆன்மீக உரிமை. தனது ஆன்மீக அபிலாசைகளுக்கு திருப்திகாணும் வகையில் ஒரு மனிதன் சிந்திப்பதும், செயல்படுவதும், தேடுவதும், நம்புவதும் நம்பாமல்விடுவதும், வழிபடுவதும் வழிபடாமல் விடுவதும், அவனுக்கே உரித்தான தனிமனித சுதந்திரமாகும். இந்த வகையில் வழிபாட்டு உரிமையானது, மனிதனின் சிந்தனைச் சுதந்திரத்தைச் சார்ந்து நிற்கிறது. இந்த உரிமையை எமது விடுதலை இயக்கம் மதிக்கிறது; கௌரவிக்கிறது. ஏனென்றால் இது சுதந்திரமான மனித வாழ்விற்கும், உன்னதமான மனித வளர்ச்சிக்கும் இன்றியமையாதது.

மத வழிபாடு எமது மக்களின் பண்பாட்டு வாழ்வுடன் இழையோடி நிற்கிறது. பண்பாட்டு வாழ்வு எமது தேசியத்திற்கு ஆதாரமானது. எமது தேசியம் ஒரு சுதந்திர அரச நிர்மாணத்திற்கு அத்திவாரமானது.

தேசிய உரிமைப்பாட்டின் அடிப்படையில், தன்னாட்சி கோரி ஒரு வீரசுதந்திரப்போரை நடத்திவரும் விடுதலை இயக்கம் என்றரீதியில், எமது மக்களை தேசிய ரீதியில் தேசிய மக்கள் சக்தியாக அணிதிரட்டுவது எமது அடிப்படை அரசியல் இலட்சியம். இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதாயின் எமது தேசியத்திற்கு ஆதாரமாகவும், எமது தேசியக் கட்டுமானத்திற்கு தூண்களாகவும் விளங்கும் எமது பண்பாட்டு வடிவங்களைப் பேணிப் பாதுகாப்பது, அத்தியாவசியமானது.

> **எமது இயக்கம் மத சார்பற்றது; எந்த ஒரு மதத்தையும் சார்ந்து நிற்காதது. அதாவது, எமது மக்கள் தழுவிக் கொண்ட சகல மதங்களையும் அரவணைத்து, கௌரவித்து, அவற்றுக்குப் பொதுவாக நின்று, நடுநிலையைக் கடைப்பிடிக்கும். •**

இந்த வகையில், தமது பண்பாட்டுக் கோலமாக எமது மக்கள் வரித்துள்ள மத வாழ்வுக்கு, நாம் மதிப்பளிக்கிறோம். அந்த மத வழிபாட்டு வாழ்வின் மேம்பாட்டுக்காக எமது இயக்கம் உழைக்கும்.

அடிப்படையான தனிமனித உரிமைகளும் சுதந்திரங்களும் பேணப்படும் சமூக உலகில் தான், மனித வாழ்வு சிறப்புறும்; முழு மனித விடுதலை சாத்தியமாகும்; மனிதாபிமானமும் தர்மமும் தழைத்தோங்கும். தனிமனித சுதந்திரங்கள் பேணப்படாமல், சமூக நீதியுடைய சமத்துவ சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியாது. தனிமனித தனித்துவத்தை மறுதலித்து பொருளுலகத்தைச் சீரமைக்க முயன்ற சமூகப் பரிசோதனைகள் தோல்விகளையே சந்திக்கமுடிந்தது.

தமிழீழ சமுதாயம் அந்நிய ஆதிக்கத் தளைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள விழைகிறது. விடுதலையை நோக்கிய இந்த விழைதல், மண் விடுதலையை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல. தனிமனித தமிழன் ஒவ்வொருவனும் தனது ஆன்மீக அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு சுதந்திர தேசத்தைக் கட்டி எழுப்புவது தான் எமது விடுதலைப் புரட்சியின் இறுதி இலட்சியமாகும்:

வழிபாட்டு உரிமையைக் கௌரவித்து, எமது மக்களின் அடிப்படைச் சுதந்திரங்களுக்காகப் போராடும் எமது விடுதலை இயக்கத்தின் இலட்சியப் போருக்கு, மதங்களும் துணை நிற்கவேண்டும். ஒடுக்கப்பட்ட மனிதர்களின் விடிவிற்காக எமது தேசத்தில் ஒரு தர்மப்போர் நிகழ்ந்து வருகிறது. இந்த சத்திய யுத்தத்திற்கு ஆதரவாக எமது மத நிறுவனங்கள் குரலெழுப்பவேண்டும். சகல மதங்களதும் தவிர்க்கமுடியாத தார்மீகக் கடப்பாடு இது.

மக்களின் விடிவிற்காகத் தனது உயிரை அர்ப்பணிக்கும் ஒரு சுதந்திர வீரனின் தியாகமும் சாராம்சத்தில் புனிதமானது; ஒரு ஆழமான பரிமாணத்தில் ஆன்மீகமானது என்றும், சொல்லலாம். ■




## நிகழ்வும் நினைவும்....

அரசியலில் அக்கறை இல்லை என்று கூறி ஒதுக்கிவிடுவதற்கு இது என்ன பொழுதுபோக்கு விளையாட்டா? எமது எதிர்கால வாழ்வின் நிர்ணய சக்தியல்லவா? மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கான அடிப்படை இதுவல்லவா? அரசியலில் அக்கறை இல்லை எனக் கூறுவோர் இவற்றை கவனத்திற் கொள்ள வேண்டும்.

இறுதியாக, இன்றைய போராட்டத்துடன் முரண்பாடு உடையவர்களுக்கு ஒரு வார்த்தை! உலகில் முரண்பாடு என்பது மிக மிக இயல்பானது. ஒரு வகையில் கூறப்போனால் முரண்பாடுகளோடுதான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால் நீங்கள் ஒரு உண்மையினை ஒப்புக்கொள்ள வேண்டும்.

**தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் மூலம் தான் வென்றெடுக்கப்பட முடியும் என்பதும் அப்போராட்டத்தினை விடுதலைப்புலிகளின் தலைமையிலேயே தமிழீழ மக்கள் முன்னெடுத்து வருகின்றனர் என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.**

**முதலில் இதனை ஒப்புக்கொள்ளுங்கள். தேசிய விடுதலைப் போராட்டத்துக்குப் பங்களிப்பு வழங்குங்கள். பங்களிப்புடன் கூடிய விமர்சனங்களை முன் வையுங்கள்!**

இதைவிடுத்து, வெறுமனே தத்துவங்களை விழுங்கி விட்டு ஜீரணிக்க முடியாமல் வாந்தி எடுப்பதில் யாருக்கு என்ன இலாபம்? ■

## வடக்கை விட....

### அங்கீகாரப் பயம்

இதனால் அச்சமடையும் சிறிலங்கா அரசு புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் குடாநாட்டை மையமாகக் கொண்டு இயங்கும் "நிதர்சன அரசாங்கத்தை" (Defacto Government of L.T.T.E) எவ்விதத்திலும் அழித்தொழிக்க துடிக்கிறது. இல்லையேல் சர்வதேச சமூகம் இந்த நிதர்சன அரசாங்கத்தை விரைவில் அங்கீகரித்து விடும் என்னும் அச்சம் சிறிலங்கா அரசை பிடித்தாட்டத் தொடங்கியுள்ளது.

### பிரதேசமில்லையெனக் காட்ட முயற்சி

இதற்காகவே தமிழீழ விடுதலைப்புலிகளை அழிக்கவோ, பிடிக்கவோ முடியா விட்டாலும் அவர்களது கட்டுப்பாட்டிலுள்ள

தொடர்ச்சி 12ம் பக்கம் ....

# ஜேர்மனியில் வளர்ந்து வரும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான வன்செயல்

அண்மைக் காலங்களில் ஐரோப்பாவில் ஆங்காங்கே வெளிநாட்டவர்களுக்கு எதிரான சில சம்பவங்கள் நடைபெற்றன. அவற்றில் சில செய்திகள் மூலமாக வெளிவந்தன. பல வெளி வராது இன்றும் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றது.

இருந்தாலும் கடந்த மாதத்தில் கிழக்கு ஜேர்மனியில் றொஸ்றொக் (ROSTOCK) என்னும் இடத்தில் நடைபெற்ற வெளிநாட்டவர்களுக்கு எதிரான வன்செயல்கள் உலகத்தின் கவனத்தையே தன் வசம் திருப்பியது.

இன்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்பு கிட்லரின் நாஜிப் படைகள் இதனையே யூதர்களுக்கு எதிராக செய்தது. அன்றும் வேலையில்லாத் திண்டாட்டம், வீடுகள் பற்றாக்குறை, உணவு பற்றாக்குறை போன்றவற்றை முன்வைத்தே யூத இனமக்களுக்கு எதிராக பிரச்சாரம் செய்தது. யூத இனமக்கள் நாஜிப்படைகளால் கைது செய்து கொண்டு செல்கையில் கைதட்டி வரவேற்றவர்கள் இந்த ஜேர்மன் மக்கள் தான்.

அதேபோன்று கிழக்கு ஜேர்மனியில் றொஸ்றொக்(ROSTOCK) என்னும் இடத்தில் வியட்நாமியர்கள் வாழும் விடுதியை தாங்கள் கிட்லரின் வழித்தோன்றல்கள் எனக் கூறிக்கொள்ளும் இனவெறியர்கள் தாக்கி எரித்தபொழுது அங்கே வாழ்ந்த ஜேர்மனியர்கள் கைதட்டி ஆரவாரித்து அதனை ஆதரித்து ஏற்றுக்கொண்டனர்.

இதனை இன்றும் ஜேர்மனியில் வாழும் யூத இனமக்கள் கண்டித்தனர். 50 வருடத்திற்கு முன்பு செய்த அதே தவறை திரும்பவும் செய்கின்றீர்கள் என சுட்டிக்காட்டினர்.

மேற்படி வியட்நாமியர்கள் வாழ்ந்த விடுதி எரிக்கப்பட்ட போது மிகவும் வேதனையானதும் கவலைக்குரியதுமான விடயம் என்னவென்றால் சம்பவம் நடந்தவேளை மாநில உள்ளூராட்சி அமைச்சருக்கு தகவல் கொடுக்க முயற்சி செய்த பொழுது அவர் வீட்டில் இல்லை. பொலிசார், தீயணைப்பு படைகள் போன்றன தகவல் கொடுத்தும் காலதாமதமாகியே அங்கே வந்தன. இவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வரும் பொழுது விடுதிக்குள் இருந்து பல வியட்நாமியர்கள் அடித்து விரட்டப்பட்டு விட்டார்கள். அதேவேளை விடுதியும் அரைவாசிக்கு மேல் எரிந்துவிட்டது. இனவெறியர்களின் வெறியாட்டத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்கு 5 நாட்கள் சென்றன. மேலும் மாநில உள்ளூராட்சி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்மொழியப்பட்டும் கடைசியில் அது பிசுபிசுத்துப் போய்விட்டது.

இங்கு குறிப்பிட்டு சொல்ல வேண்டிய விடயம் என்னவென்றால் மேற்படி வியட்நாமியரின் விடுதி எரிப்பு சம்பவத்தின் போது 13,16 வயது இளம்பிள்ளைகளும் கலந்து கொண்டனர். அந்த அளவிற்கு இளம்பிள்ளைகளுக்கும் இனவெறி பிஞ்சிலே புகுத்தப்பட்டுள்ளது. நாஜிப்படைகளும் இப்படியான இளம் சிறார்களை பயன்படுத்தியதை இரண்டாவது உலகமகா யுத்த வரலாறு கூறுகின்றது.

இனவெறியர்களின் இந்த வன்முறையை எதிர்த்து கருத்து தெரிவித்த பிரபல தொழிற்சங்கம் (OTW) ஒன்று கைதட்டி வரவேற்ற ஜேர்மனியர்களை கண்டித்துள்ளது.

மேற்படி வன்முறையை எதிர்த்து இடது சாரிகள் பெரியதொரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை றொஸ்றொக்கில் நடத்தினார்கள். இதில் 13000 பேர் வரையில் கலந்து கொண்டனர். பேர்லினில் இருந்து மாத்திரம் 15 பேருந்து வண்டிகளில் இடதுசாரியினர் வந்திருந்தனர். இந்த ஊர்வலத்தில் துருக்கியர்களும் இலங்கைத் தமிழர்களும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. இதில் முக்கியமான கோரிக்கை என்னவென்றால் வெளிநாட்டவர்களும் எம்மைப் போல் மக்கள் தான், அவர்கள் மீது உங்கள் வெறியாட்டத்தைக் காட்டாதீர்கள், திரும்பவும் பாசிசம் வேண்டாம். இது போன்ற பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இடது சாரிகள், தொழிற்சங்கங்கள் தமது கண்டனங்களைத் தெரிவித்தும் இனவெறியர்கள் தமது வன்முறையைத் தொடர்ந்தனர். இதனைத் தொடர்ந்து அரசியல் தஞ்சம் கோரி அகதிகள் வாழும் ஆறு விடுதிகள் கிழக்கு ஜேர்மனியிலும் ஒரு விடுதி மேற்கு ஜேர்மனியிலும் எரிக்கப்பட்டன. இவ் இனவெறித்தாக்குதல்கள் இன்றுவரை தொடர்கின்றன. இதனை நான் எழுதிக்கொண்டு இருக்கும் போழுது பொட்ஸ்கிளாம்(POTSC-LARM) என்னும் இடத்தில் அரசியல் தஞ்சம் கோரியோர் விடுதியொன்று எரிந்து கொண்டிருக்கின்றது.

இங்கு தலைதூக்கியுள்ள இனவெறித் தாக்குதலுக்கு அண்மைக் காலமாக அரசியல் தஞ்சம் கோரியோர் தொகை அதிகரிப்பே காரணம் என அரசியல்வாதிகள் கூறியுள்ளனர். வருடாவருடம் அரசியல் தஞ்சம் கோரும் தொகையினர் கூடிக்கொண்டே செல்கின்றனர். இதனை தீர்ப்பதற்கு ஒரேவழி அரசியல் தஞ்சம்கோர ஆதாரமாக உள்ள சட்டமான சரத்து 16 ஐ எடுத்து விடுவதுதான் சிறந்தது என ஆளும் கட்சியினர் கூறிவருகின்றனர். மிகவும் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியான (S.-P. D) சோசலிச ஜனநாயகக் கட்சி தம்முடன் ஒத்துழைக்காததினாலேயே மேற்படி சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன என எதிர்க் கட்சியினரை சாடியுள்ளனர்.

அரசியல் தஞ்சம் கோருவதற்கான சட்டம் 16 ஆவது சரத்து என்ன கூறுகின்றது என்றால், ஒருவனுக்கு அவன் வாழும் நாட்டில் உள்ள அரசாங்கத்தால் நேரடியான துன்பம் ஏற்படக்கூடிய சூழ்நிலையோ, அல்லது அரசாங்கத்தால் தேடப்படுபவனாக இருந்தால் அத்தகைய ஒருவனுக்கே அரசியல் தஞ்சம் கோரும் உரிமை உள்ளது.

மேற்படி சட்டம் எப்படி உருவானதென்றால், முன்பு நாஜிப் படைகளினால் தேடப்பட்ட பலர் ஜேர்மனியிலிருந்து வேறு பல நாடுகளுக்கு தப்பிச் சென்றனர். இவர்களை அவ்வாறான நாடுகளும் ஏற்றுக்கொண்டு அரசியல் தஞ்சம் அளித்தன. இரண்டாவது உலகமகா யுத்தத்தின் பின் ஏற்பட்ட ஜனநாயக ஆட்சியின் போது ஜேர்மனியிலிருந்து முன்பு தப்பிச் சென்றவர்களும் ஜேர்மன் பாராளுமன்றத்தில் இருந்தனர். இவர்களின் முன்மொழிவே மேற்படி 16ஆவது அரசியல் தஞ்சம் கோரும் சரத்து மிகவும் அதிகப் பெரும்பான்மையுடன் சட்டமாக்கப்பட்டது.

இச்சட்டமே இன்று ஜேர்மன் அரசியலில் மிகவும் சர்ச்சைக்குரியதும் மிகவும் முக்கியமான அரசியல் பிரச்சனையாகவும் உருவெடுத்துள்ளது.

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்தவர்களில் 5 வீதமானவர்களுக்கே அரசியல் தஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நிராகரிக்கப்பட்ட 95 வீதமானவர்களில் வியட்னாம், குர்கிஸ்தான், இலங்கைத் தமிழர்கள், ஈரான், ஆப்கானிஸ்தான் போன்ற நாட்டவர்கள் அவர்களது சொந்த நாட்டிற்கு திருப்பியனுப்ப முடியாத நிலையில் உள்ளனர். காரணம் மேற்படி நாடுகள் யுத்தம் நடைபெறும் பிரதேசமாக ஜேர்மனியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதே ஆகும். இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இலங்கை அரசு யுத்தத்தை மேற்கொண்டுள்ளபோதும் இலங்கையை யுத்தம் நடைபெறும் பிரதேசம் இல்லையெனக் கூறி தமிழர்களை திருப்பி அனுப்ப ஜேர்மன் அரசானது எடுத்திருக்கும் முடிவோ விசித்திரமானதும் அபாயமானதும் எனக்கூறத்தான் வேண்டும்.

அரசியல் தஞ்சம் கோரும் 16 சரத்து சட்டத்தை எடுத்துவிட்டால் ஜேர்மனியில் யாரும் தஞ்சம் கோரமுடியாது. அதேவேளை அரசியல் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்ட 95 வீதமான வெளிநாட்டவர்களையும் இந்நாட்டைவிட்டு வெளியேற்றிவிடலாம் என அரசாங்கம் கருதுகின்றது. எனவே தற்போது மேற்படி சட்டத்தை அகற்றுவதற்கான பெரும்பான்மை பாராளுமன்றத்தில் இவர்களுக்கு இல்லை எனவே பிரதான எதிர்க்கட்சியின் ஆதரவை வேண்டி நிற்கின்றனர். ஆனால் பிரதான எதிர்க்கட்சியோ மேற்படி சட்டம் அகற்றப்பட்டால் உண்மையான அரசியல் தஞ்சம் கோர தகுதியுடையோர் பாதிக்கப்படலாம் எனக் கருதுகின்றது. அதேவேளை 30,000 அரசியல் தஞ்ச வழக்குகள் விசாரிக்கப்படாமலேயே இருக்கின்றதென ஆளும் கட்சியை குற்றஞ்சாட்டியுள்ளது. எது எப்படி இருந்தாலும் அரசியல் தஞ்சம் கோருவதற்கான 16வது சரத்து சட்டம் வெகு விரைவில் அகற்றப்படக் கூடிய அல்லது திருத்தப்படக் கூடிய அறிகுறியே தென்படுகின்றது. இதனால் பெரும்பாலான அரசியல் தஞ்சம் கோரிய வெளிநாட்டவர்களுக்கு ஆபத்தான நிலையே ஏற்படும்.

ஜேர்மனியில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான வன்முறைகள் ஜேர்மனி பிரிந்தபோது மேற்கு ஜேர்மனியில் ஆங்காங்கே, துருக்கியர்களை வெளியேற்று என்ற கோசத்தோடு உறங்கிக்கிடந்தது. ஆனால் கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் இணைந்த ஜேர்மனியாக மாறிய போதே திரும்பவும் விளித்துக் கொண்டு மேற்கு ஜேர்மனியில் இருந்து கிழக்கு ஜேர்மனிக்கு பரவத்தொடங்கியது.

இவ்விரு ஜேர்மனிகளும் இணைந்தபோது பெரும் பொருளாதார நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம், வீடு இல்லாத் திண்டாட்டம், வாடகை உயர்வு, வரி உயர்வு போன்ற நெருக்கடிகள் ஏற்படத் தொடங்கியது. அதிலும் கிழக்கு ஜேர்மனியர்களுக்கு மேற்படி பிரச்சனைகள் இரட்டிப்பாக இருந்தது. இதனால் ஜேர்மனியர்கள் கொந்தளித்தனர். இதனைச் சமாளிக்க முடியாது ஜேர்மன் அரசாங்கம் அரசியல் தஞ்சம் கோரி வந்த வெளிநாட்டவர்களினால் மேற்படி பிரச்சனை ஏற்பட்டுள்ளமாதிரியான ஒரு சூழ்நிலையை உருவாக்கியது.

இதனால் கிழக்கு ஜேர்மன் வாழ் மக்களில் பெரும்பாலான இளைஞர்கள் அரசியல் தஞ்சம் கோரிய வெளிநாட்டவர்களை வெறுக்கத் தொடங்கினார்கள். இவர்களை பயன்படுத்தினார்கள் இனவெறியர்கள். அதன் விளைவே இன்றைய விடுதி எதிர்ப்பு சம்பவங்கள். மேற்படி இனவெறியர்கள் யார்? இவர்கள் எப்படிப்பட்டவர்கள்? என்பதை சற்று ஆராய்வோம்.

புதிய நாஜிகள், தீவிரவலதுசாரிகள், தீவிர தேசியவாதிகள், நிறத்துவேசிகள்.

இவர்கள் தங்களின் தலைவன் கிட்லர் என்று சொல்லுகின்றார்கள். அவரின் படத்தை பூஜிக்கின்றார்கள். கிட்லரின் சின்னத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். கிட்லர் போன்று 'சல்யூட்' அடிக்கிறார்கள். ஊர்வலம் போகின்றார்கள். மனிதர்களைக் கொல்லக் கூடிய துப்பாக்கிகள், கத்திகள் வைத்திருக்கின்றனர். சதா மதுபானத்துக்கு அடிமையாகவே திகழ்கின்றார்கள். இவர்களுக்கு ஆதரவாக சில தேசிய கட்சிகள் வெளிநாட்டவர்களுக்கான பிரச்சாரங்களை முன்வைத்து ஜேர்மன் மக்களின் சுமார் 15 விகிதமான ஆதரவையும் பெற்றுள்ளனர்.

மேற்படி கிட்லரை தலைவனாகக் கொண்டு இனவெறியர்களின் இலக்கு நிச்சயமாக அரசியல் தஞ்சம் கோரிய வெளிநாட்டவர்களுக்கு மாத்திரம் எதிரானதல்ல. இவர்கள் ஜேர்மனியில் வாழ்கின்ற சகல வெளிநாட்டவர்களுக்கும் எதிரானவர்கள். காரணம், அண்மையில் யூத இனமக்களுடைய சவக்காலைகளைக் கூட நாசப்படுத்தியுள்ளனர். இவர்களால் ஏற்படக்கூடிய அபாயம் இன்று அரசியல் தஞ்சம் கோரிய வெளிநாட்டவர்களுக்கு. நாளை விருந்தினர், வேலையாட்களாக வந்திருக்கும் துருக்கியர்களுக்கு. அதன் பின்பு இங்கு பெரிய வியாபாரிகளான வெளிநாட்டவர்களுக்கு.

இங்கு ஏற்பட்டுள்ள வேலையில்லாத்திண்டாட்டம், பொருளாதார நெருக்கடி போன்றவை இங்கு அரசியல் தஞ்சம் கோரியுள்ள வெளிநாட்டவர்கள் வெளியேறிவிட்டால் தீரப்போகும் பிரச்சனை என்று யாரும் கருதிவிடமுடியாது.

மேற்ப்டி வெளிநாட்டவர்களுக்கெதிரான சக்திகள், இனவெறியினர் ஜேர்மனியில் மாத்திரம் உள்ள ஒரு நோயாக கருத முடியாது. இந்நோய் முழு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், கனடாவிலும் ஒரு சில ஏனைய உலக நாடுகளிலும் உறங்கிக்கிடக்கின்ற கொடிய நோயாகும். எனவே இவை தற்போது உறங்கிய நிலையிலும் நீறுபூத்த நெருப்பாகவும் உள்ளது. ஆனால் இவைகளும் விழித்துக் கொள்ளும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

எனவே அன்பார்ந்த தமிழ் மக்களே! நாம் ஒருகாலமும் ஐரோப்பிய தமிழராகவோ, கனடிய தமிழராகவோ, அமெரிக்க தமிழராகவோ தலை நிமிர்ந்து சுதந்திரமாக வாழமுடியாது. எனவே போலியான உண்மைக்கு புறம்பான ஒரு ஆசையை வளர்த்துக் கொண்டு உங்களுக்கும் உங்கள் எதிர்காலச் சந்ததியினருக்கும் கல்லறை கட்டிவிடாதீர்கள்.

அங்கே தமிழீழத்தில் தம்பி பிரபாகரனின் தலைமையில் உண்மையான தமிழீழத்துக்கான உக்கிரமான போராட்டம் நடைபெறுகின்றது. அந்த தமிழீழத்தில் தான், அந்த மண்ணில்தான் தன்மானமுள்ள தமிழன், சுதந்திரமான தமிழன், எமது எதிர்காலச் சந்ததிகள் வாழலாம். தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்று சொல்வார்கள். தமிழன் தனக்கென, சகல இறைமையும், சுயநிர்ணய உரிமையும் கொண்ட தன்னுடைய தாய் நாடாம் மலரப் போகும் தமிழீழத்தில் நின்று கொண்டு தமிழன் என்று சொல்லும்போது தான் அவன் பூரண தமிழனாகின்றான்.

தற்போதைய காலகட்டங்களில் நாம் வெளிநாடுகளில் இருந்தாலும் அங்கு நடைபெறும் தமிழீழத்திற்கான போராட்டத்தை ஊக்குவிப்பதற்கு எமது தாய் நாட்டைக் காக்க எம்மால் முடிந்த உதவிகளைச் செய்வோம், எமது பிரச்சனைகளை சர்வதேசப்படுத்துவோம். அவ் விடுதலைக்கு தோளோடு தோள் நிற்போம். எமது தமிழீழத்தில் மானமுள்ள தமிழனாக வாழவேண்டும் என்பதை நாம் யாரும் மறந்துவிடக் கூடாது. ■

## வடக்கை விட ...

வெறும் மண்ணையாவது மிதித்து, அவர்களுக்கு ஆட்சி பிரதேசம் இல்லை வெறு கெரில்லா இயக்கமே என காட்ட வேண்டுமென்னும் அவாவி... யாழ். குடாநாட்டின் கரையோரங்களில் தமது இராணுவத்தை இறக்கி பல மில்லியன் ரூபா பெறுமதியான இழப்புக்களையும் பன்னூறு சிங்கள இராணுவத்தினரின் உயிர் இழப்புகளையும் மாதாமாதம் சம்பாதித்து வருகின்றது சிறிலங்கா அரசு.

### இன அழிப்பு என உறுதியாகின்றது

அதேவேளை சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் அகதியாக மாற சர்வதேச சமூகத்தவர் சிறிலங்கா அரசின் இன அழிப்பு நடவடிக்கையை மேலும் மேலும் தெ... வாகக் கண்ணுற்று அதன் மூல... தமிழீழ விடுதலைப்புலிகளி... நியாயமான போராட்ட நோ... கையும், தமிழீழத்தின் அவசிய... தையும் அங்கீகரித்து வருகி... னர். ■

கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் எனப்படும். நெய்தலுக் குரிய ஒழுக்கம், இரங்கல், நெய் தல் நிலத்தில் வாழும் மக்களு டைய தொழில் மீன் பிடிப்பதும், உப்பு விளைவித்தலும், முத்துக் குளிப்பதுமாகும். காற்றோடும் அலையோடும் மல்லாடும் இம் மக்கள் கடலுக்கே இரையாகிப் போவதுமுண்டு. கடலுக்குப் போய் மீளாத கணவனையோ, மகனையோ எண்ணி எண்ணி வாயிலும் வயிற்றிலும் அறைந்து கொண்டு பெண்கள் புலம்புவர். இதுவே இரங்கலுக்கான கார ணம். இரங்கலைப் புலம்பல் என்றும் கூறலாம்.

இயற்கையின் சீற்றத்துக்கு மீன வர் பலியாவது உலகெங்கும் நிகழ்ந்து வருவதாயினும், அண் மைக் காலங்களில் தமிழ் மீனவர் களை மேலதிகமாக ஓர் ஆபத்து சூழ்ந்துள்ளது. சிறிலங்கா கடற் படையினர் நம் மீனவர்களை வெட்டியும் குத்தியும் சுட்டுக் கொல்வதும், அவர்களுடைய வள்ளம், வலைகளைச் சேதப் படுத்துவதும், மீனவர் குடியிருப் புகளை அழித்து கொலை, கொள்ளை புரிவதும் வழமையாகி வருகின்றது. கொடுங்கோன்மை யின் இந்த முகம் இயற்கையின் கொடுமையை விட கோரமா னது.

எப்படி எமது பாரம்பரிய நிலப்ப ரப்பை பிரிக்கப்படாத வடதென் தமிழீழத்தை நாமே ஆள வேண் டிய அவசியம் இருக்கிறதோ, அதே போலவே தமிழ் மண் ணின் பெரும் பகுதியைச் சூழ

ரியின் கப்பல்களையும் சக்தி மிக்க படகுகளையும் மோதிச் சிதறடிக்கும் இவர்களுடைய வீரத்துக்கு முன் சிங்களம் திணறுகின்றது.

நடந்து கொண்டிருக்கும் விடுத லைப் போராட்டத்தை முன்னெ டுத்துச் செல்வதில் தமிழீழக் கலைஞர்கள் பெரும் பங்காற்றி வருகிறார்கள். விடுதலைக் கீதங்களைத் தாங்கி இது வரை தமிழீழத்தில் எட்டு ஒலிப்பதிவு நாடாக்கள் வெளி வந்துள்ளன. அண்மையில் கடற்புலிகள் அமைப்புக் கலைஞர்களை இலை ணத்து விடுதலைப்புலிகள் கலை, பண் பாட்டுக்கழகம் உருவாக்கிய 'நெய்தல்' ஒலி நாடா வெளியிடப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் விடுதலை இயக்கம் பற்றி விமர் சனம் செய்த 'நியூஸ்வீக்' சஞ் சிகை "தமிழர் வரலாற்றில் ஓர் உன்னத இடத்தை வகிக்கின்ற சோழப் பெருமன்னர்களுடைய கொடியைத் தமது கொடியாகக் கொண்டுள்ளார்கள்" என்று குறித்துள்ளது.

**'ஆழ்கடலெங்கும் சோழ மகராஜன்**
**ஆட்சி புரிந்தானே அன்று- தமிழ்**
**ஈழக் கடலெங்கும் எங்கள் கரிகாலன்.**
**ஏறி நடக்கின்றான் இன்று'**

களோ கடலோடு கரைந்து போகின்றவர்கள்.

**'ஆறடி மண்ணிலும் அடங் கிடோம்' எனும்**
**கரும்புலி உணர்வது கேட் குதா'**

"கடலலையே கொஞ்சம் நில்லு - தமிழன்
வீரத்தை உலகெங்கும் சொல்லு"
-என்பது யோகி தரும் நெய்தல்

மீனவர்கள் கரைவலை இழுக் கின்றார்கள். "ஏலேலோ ஐலசா -ஏலேலோ ஐலசா!"

பரம்பரை பரம்பரையாக அவர் கள் இக்கடலலையின் மடியில் தவழ்ந்தவர்கள். ஆசியாவின் கடல் எல்லாம் ஆண்ட தமிழன் அகதியாக உலகெங்கும் அலை யும் இழிநிலை கண்டு இரங்கு கின்றார்கள்.

**'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**
**இருந்ததும் இந்நாடே'**
**-என பெருமிதத்தோடு பாடினான் பாரதி.**

**'அழுது கொண்டும்**
**தொழுது கொண்டும்**
**இன்னும் வாழ்வதோ-எங்கள்**
**அப்பு ஆச்சி**
**வாழ்ந்த மண்ணை**
**எதிரி ஆள்வதோ'**



**போரில் குதித்துள்ள**
**நாடு- தமிழ்**
**ஈழம் உருவாகும்**
வேளை இதுவாகும்
என்று களம் நோக்கி ஓடு"

"கடற்புலி ஒருத்தி கடமையில் ஈடுபட்டிருக்கின்றாள். ஆடாமல் அசையாமல் இலக்கினை உற்று நோக்கியபடி சிலையாகி கடல் விம்முகிறது. அவைகள் அவள் கண்களை மறைக்கின்றன.

"அலையே நீயும் பொங்காதே - என்
இலக்கினை இனியும் மறைக் காதே"

உண்மையான அனுபவம் கலை யாகும் அழகை ரசிக்கிறோம்.

இந்த நோக்கில் மீனவர்களு டைய உணர்வுகளை வெளியிடும் 'நெய்தல்' காலத்தின் தேவை யாகவும், தமிழினத்தின் நிகழ் கால ஆவணமாகவும் விளங்கு கின்றது.

நெய்தலின் இசையமைப்பைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட வே ண்டும். நவநவமான கற்பனை கள் நடைபேதங்கள் ஒருசில இசைக் கருவிகளை வைத்துக் கொண்டு கேட்போரைக் கிறங்க வைக்கும் இசைக் கோலங்கள் பாடகர்களும் சிறப்பாகவே செய் திருக்கின்றார்கள். சாந்தன் கூட அடக்கி வாசிக்கின்றார். பார்வதி சிவபாதம் பல்லவியை பாடும் பாணியல் ஒரு புதுமை செய்கி றார்.

"நீலக்கடலே நெடுகன் நிலவே"

# "நெய்தல்" - ஒரு நெடும் பாய்ச்சல்

வுள்ள கடற்பரப்பை நாமே கட் டியாள வேண்டிய தேவையும் இருக்கிறது. தமிழருக்கு இது ஒன்றும் புதிய விசயம் அல்ல. இராசராசன், இராசேந்திரன் முதலிய சோழப் பெருமன்னர் பெரிய கடற்படை ஒன்றை வைத் திருந்தது மட்டுமன்றி, ஜாவா, சுமாத்திரா (சிறிவிஜயம்) முதலிய தூரகிழக்கு நாடுகள் வரை சென்று தமது கடலாதிக்கத்தை நிலை நாட்டினார்கள். தமிழ் வணிகர்களுடைய கலங்களு டைய பாதுகாப்பை உறுதி செய் தார்கள். பாரம்பரியமான மரக் கலமொன்றில் வல்வெட்டித்து றையைச் சேர்ந்த மாலுமிகள் சப்தசமுத்திரங்கள் தாண்டிய அண்மைக்கால வரலாறு மெய் சிலிர்க்க வைப்பது.

தமிழ்ழ விடுதலைப் போரை ஒடுக்கக் கங்கனம்கட்டி, நிற்கும் சிறிலங்கா அரசு தரையிலும், கடலிலும், வானிலும் போர் தொடுக்கிறது. கடற்பாதைகளை மூடி எம்மை நசுக்கப் பார்க்கின் றது. எமது மீனவர்களை துன்பு றுத்துகின்றது; கொல்கின்றது. இந்நிலையில் உதித்ததுதான் 'கடற்புலி'கள் அமைப்பு. அதன் ஒரு பிரிவு 'கடற்கரும்புலிகள்' உயிரைத் துச்சமாக மதித்து எதி



என்று எடுப்பாகத் தொடங்குகின் றது நெய்தல். கரிகாலனும் புகழ் பெற்ற ஒரு சோழனே. இமயத் தின் புலி இலச்சினையைப் பொறித்தவன் அவன். இந்தப் பெருமையை எல்லாம்படி அதன் வாரிசாக விளங்கும் எங் கள் கரிகாலன் (தலைவர் பிர பாகரன்) புகழ் பேசுகின்றது இவ் இசைப்பா.

**'எங்கள் கடல் மீதில்**
**எதிரி வருகின்ற**
**இன்னல் இனிமேலும்**
**இல்லை'** -என்ற நம்பிக்கை தரும் ஒரு முத்தாய்ப்பு. 'கரும்பு லிகள்' என்ற யோகியின் பாட்டு பிரபலமானது.

**'அம்மாவும் அப்பாவும்**
**எங்களுக் குண்டு**
**ஆனாலும் மண்மீதில்**
**பெரும்பாச முண்டு**
**ஆறடி மண்கூட**
**நமக்காகக் கேளோம்'**

எனக் கரும்புலிகளின் மன உணர்வுகளை வடித்தது அந்தக் கீதம். ஆறடி மண்ணுக்கு மேல் எதுவும் எதிர்பார்க்காத தரைப்பு லிகள். ஆனால் கடற்கரும்புலி



**இது புதுவை இரத்தின துரையின் உணர்ச்சிகர மான பாட்டு.**

**'எதிரி வருவானா?**
**கரையைத் தொடுவானா?**
**என்று புயலாகி**
**வென்றோம்- புலி**
**அதிரும் வெடியோடு**
**கடலில் நடைபோடும்**
**அணியில் துணையாகி**
**நின்றோம்'**

இது புதுவையின் இன்னொரு ஆவேசப்பாட்டு. ஆம்! தன் உடலைச் சிதறடிக்கின்ற வெடி யோடு படகில் போகும் கடற்பு லிகளின் துணிச்சலை, தியா கத்தை இணைக்கும் போது யார் தான் சிலையாகாதவர். நினைத் துப் பார்க்கின்றோம். சின்னச் சின்னப் பூக்களெல்லாம் புயலாகி போர்க்காலத்தில் நிற்கின்ற பூமியல்லவா இது! கூவியழைக் கின்றார் புதுவை இரத்தினதுரை.

**'பூவும் புயலாகிப்**
**பாயும் புலியாகி**

நெய்தலில் புதுவை இரத்தின துரை எழுதிய நெஞ்சை அள் ளும் மீனவப்பாட்டு ஒன்று வரு கின்றது.

**'வெள்ளி நிலா விளக் கேற்றும்**
**நேரம் - கடல்.**
**வீசுகின்ற காற்றில்உப் பின் ஈரம்**
**தள்ளி வலை ஏற்றிவள் ளம்போகும் -மீன்**
**அள்ளி வர நீண்ட நேரம் ஆகும்.**

எல்லாம் இவ்வளவு சுலபமாக முடிவதில்லையே கடலில் நேவிக்காரன் சுட்டுவிட்டால், "பேருமின்றி ஊருமின்றி பெற்ற வளின் முத்தமின்றி ஈர உடல் கரையொதுங்கும் காலை"

## நம்பியாரூரன்

மீனவன் வீட்டு வாசலிலும் கோலம் போட்டு இருக்கின்றது. என்ன கோலம்? வறுமையின் வேதனையின் கோலம்.

"வாயிறுக்கி வயிறிறுக்கி வாழும் கடல் மீனவரின் வாசலெங்கும் வேதனையின் கோடு"

நெஞ்சைப் பிழியும் சோக பாவத் துடன் ஒலிக்கின்ற இந்தப் பாட்டு நெய்தலின் சிகரம் என லாம். பாடிய சாந்தனும் சிட்டு வும் பாராட்டுக்குரியவர்கள்.

தமிழீழ விடுதலைப் போரில் நெய்தல் நில மக்களே அதிக இழப்புகளை சந்தித்தவர்கள் எனலாம். மயிலிட்டி, 'தீவகம்', வெற்றிலைக்கேணி, மன்னார், முல்லைத்தீவு இன்னும் பிற பகு திகளில் இருந்து இடம் பெயர்ந்து தொழிலின்றி அலை பவர்களும் மீனவர்களே.

என்ற கீதம் மழலைக் குரலில் இழைகிறது.

"கடலலையே கொஞ்சம் நில்லு" ஒரு "முல்லை" முத்திரைஒட்டு மொத்தமாகப் பார்க்கையில் இதுவரை வெளிவந்த விடுத லைக் கீதங்களில் 'நெய்தல்' ஒரு-உச்சத்தாவல்-நெடும் பாய்ச் சல். ■

## 116 நாட்கள்....

இவ்வளவு இராணுவத்தையும் தளபாடங்களையும் இழந்துங் கூட, ஏன் சிறிலங்கா போரைத் தொடர விரும்புகின்றது? ஒன்று, ஜே. வி. பி.யை அடக்கியது போல் எப்படியாவது புலிகளை அடக்கிவிடலாமென்ற, பிழை யான கணிப்பீட்டில் எழுந்த ஓர் எதிர்பார்ப்பு. அடுத்தது, அதி காரப் போட்டியும், அரசியல் நிர்ப்பந்தங்களும் ஆகும். பிரே மதாசா, சிறிலங்காவில் தனக்கு அரசியல் நெருக்கடி தோன்றும் போது அதைத் திசை திருப்ப, தமிழீழத்தில் இராணுவ நடவடிக் கைகளை முடுக்கி விடுகின்றார். படைத் தளபதிகளுக்கோ, மற்றை தளபதிகளை விடத்தாம் திறமைசாலிகள் -சாதிக்கக்கூ டியவர்கள் -என்று நிரூபிக்க சந் தர்ப்பம் வேண்டும். அத்துடன் ஆளுக்காள் ஏற்பட்டுள்ள அதி காரப் போட்டியில் வெல்வதற் காகவும், போரை நீட்டிக் கொ ண்டே இருப்பார்கள். சிலர் 'ஆயுத பேரம் மற்றும் ஊழல்கள் மூலம் பணம் சேர்க்கலாம் என் பதாலும், போரைத் தொடர விரும்புகின்றனர். அரசியல் - இராணுவ நிர்ப்பந்தங்களுக்கா கவும் தெளிவாக தெரிவிக்கின்ற பிழையான கணிப்பீடுகளுக்கா கவும், வெல்ல முடியாத -முடி வில் தோல்வியையே காணப் போகின்ற இந்தப் போருக்காக, எவ்வளவு சிறிலங்காப் படையி னரைச் சிறிலங்கா அரசு பலி கொடுக்கப் போகின்றது? ; எவ் வளவு தமிழ் மக்களைக் கொல் லப் போகின்றது? ■

# சர்வதேச அரசியல் சர்ச்சைகளில் சுயநிர்ணய உரிமை 2

முதலாம் உலக மகாயுத்தம் முடிந்தபின் பாரிஸ் சமாதான மகாநாட்டிற்கு (1919) 14 அம்ச சமாதானத் திட்டத்துடன் வருகை தந்த அமெரிக்க ஜனாதிபதி வில்சன், சுயநிர்ணய உரிமையின் காவலர் போலப் பேச்சிலும் செயலிலும் காணப்பட்டார். அவர் மகாநாட்டில் உரையாற்றும்போது "..... மக்களும், மாகாணங்களும், விளையாட்டில் பாவிக்கப்படும் அற்பமான பொருட்கள் போலக் கருதி இறைமையிலிருந்து புறக்கணிக்கப்படக்கூடாது. போர் சம்பந்தமான எந்த ஒரு பிரதேசத் தீர்வும் அப்பிரதேச மக்களின் விருப்பங்களையும் நலன்களையும் கருத்தில் கொண்டதாக அமையவேண்டும்" என்றார். வில்சனின் கருத்து சுயநிர்ணய உரிமை தொடர்பாக முதலாளித்துவ நாடுகளின் நிலைப்பாட்டு மாற்றத்தை வெளிக்காட்டத்தவறவில்லை. ஏனெனில் சுயநிர்ணய உரிமை யடிப்படையிலான ஆபிரிக்க நாடுகளின் எழுச்சியின் ஒரு கட்டத்தில் முதலாளித்துவநாடுகளின் கருத்தைப் பிரதிநிதித்துவம் செய்தவராகக் கணிக்கப்பட்ட 'நீற்ச்கே' என்பவர், "வழமையான போர் முறைமைகளை காட்டுவாசிகளுக்கெதிரான பேரில் பயன்படுத்துவது மிகவும் கேலிக்குரியது. நீக்கிரோ வாசிகளின் வீடுகளைச் சுட்டெரித்து அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். இது ஒன்றே காத்திரமான தீர்வாகும்" என்று கூறியமை கவனிக்கத்தக்கது.

இருப்பினும் வில்சனுடைய வேடம் விரைவில் கலையலாயிற்று. தனது மகாநாட்டு உரையைப் பின்னர் விளக்கும் போது, "போரில் தோற்கடிக்கப்பட்ட சாம்பிராட்சியங்களின் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தவிர்ந்த ஏனையோருக்கு சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்க மகாநாட்டிற்கு அதிகாரம்கிடையாது" என்று கூறிப், பின்வாங்கி விட்டார். வில்சனின் ஜனாதிபதிப் பதவிக் காலத்திலேயே அவரது இராஜாங்கக் காரியதரிசியான லான்சின் சுயநிர்ணய உரிமையை "நடைமுறைப்படுத்த முடியாதது" என்றும் "ஆபத்தானது" என்றும் வர்ணித்துவிட்டார். பரிஸ் சமாதான மகாநாட்டில் பின் உருவான சர்வதேச சங்கமும் சுயநிர்ணய உரிமை தொடர்பாகத் தீர்க்கமான விதிகளையோ, செயல் முறைகளையோ கொண்டிருக்கவில்லை.

வில்சனைப் போலவே லெனினும் சுயநிர்ணய உரிமை தொடர்பாக இராஜதந்திர நிலைப்பாட்டைக் கொண்டிருந்த போதிலும், லெனினின் கருத்துக்கள் வில்சனின் கருத்துக்களை விட ஆழமானவையாகவும் முற்போக்கானவையாகவும் காணப்படுகின்றன. மார்களின் நோக்கும் போக்கும் சர்வதேசத்தையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. 'கவுற்ஸ்கி' தேசியவாத இயக்கங்களை முதலாளித்துவ வளர்ச்சியுடனேயே அடையாளப்படுத்தினார். 'றோசா லக்ஸம்பேர்க்', சர்வதேச தனியுரிமை முதலாளித்துவத்தின் எழுச்சியானது சகல தேசியக் குழுக்களையும் அர்த்தமற்றதாக்கி விட்டதாக கருதினார். ஆனால் லெனின் தேசத்தையும், வர்க்கத்தையும் உருவாக்கும் சக்திகளை இணைக்க விரும்பினார்.

லெனினின் இயக்கவியல் அணுகுமுறையானது, சுயநிர்ணய உரிமையை சமூக-வரலாற்றுக் கட்டுமானங்களுக்குட்பட்டதாகவே கண்டது. தேசியரீதியிலும், சர்வதேசியரீதியிலும் முதலாளித்துவத்தைத் தோற்கடிப்பதற்கான ஓர் ஆயுதமாகவே அவர் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்த விரும்பினார். போல்சிவிக்கர்கள் சிறிய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாகக் கூடத் தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். பாட்டாளிச் சர்வதேசியத்தை விட அவர் சுயநிர்ணய உரிமைக்கு முக்கியத்துவம் வழங்கி எழுதியுள்ளார். சுயநிர்ணயம், சர்வதேசியம், ஜனநாயகம், மத்தியவர்க்கம் என்பவற்றையெல்லாம் தத்ருபமாக ஒரே கோட்டில் இணைத்துப் பின்வருமாறு கூறுகிறார்:

"நாங்கள் சுயநிர்ணயத்துக்கான சுதந்திரத்தை, அதாவது ஒடுக்கப்பட்ட நாடுகளுக்குப் பிரிந்து செல்லும் உரிமையை வேண்டுகின்றோம். அதன் மூலம் நாம் பொருளாதாரச் சீரளிவைக் கனவு காணவில்லை. அல்லது சிறிய அரசுகள் என்ற இலட்சியத்தை நாம் அணைத்துக் கொள்ளவும் இல்லை. மாறாக, நெருக்கமான ஐக்கியத்தையும், இணைப்பையும் கொண்டதும், ஆனால் உண்மையான ஜனநாயகத்தையும், உண்மையான சர்வதேசியத்தையும் அடிப்படையாகக் கொண்டதுமான பெரிய அரசு ஒன்றுக்கு நாம் சார்பானவர்கள். பிரிந்து செல்லும் சுதந்திரம் இல்லாமல் அது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும்".

கலாநிதி வே. மணிவாசகர்
சிரேஸ்ட அரசறிவியல் விரிவுரையாளர்,
பொருளியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

பிரிந்து செல்லும் உரிமைவரை சென்று லெனின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தார். இருந்தபோதும் சோவியத் சமஸ்டியின் குடியரசுகளுக்குப் பிரிந்து செல்லும் உரிமை மறுக்கப்பட்டே வந்தது. அதன் விளைவாக இன்று சோவியத் யூனியன் பல கூறுகளாக உடைந்துள்ளதையும் காண்கின்றோம். அத்துடன் சுயநிர்ணய உரிமையடிப்படையிலான போராட்டங்களுக்கு சோவியத் யூனியன் வழங்கி வந்த ஆதரவும் படிப்படியாக குறைந்து வந்து இன்று பூச்சியமாகியுள்ளது. கிழக்கைரோப்பிய நாடுகளில் தோன்றிய சில சுயநிர்ணயப் போராட்டங்களைச் சோவியத் யூனியன் இராணுவ பலத்தால் நசுக்கிய வரலாறும் உண்டு.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் தோன்றிய ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சுயநிர்ணயம் பற்றிய செயற்பாட்டுச் சிக்கல்களின் களமாக இருந்து வந்துள்ளது. இருப்பினும், சர்வதேச சங்கம் போலன்றி, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சுயநிர்ணய உரிமைக்கு உகந்த இடம் வழங்கியது. அதன் சாசனத்தில் இரு தடவைகள் இவ்வுரிமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. (பிரிவு 1 (2) பிரிவு 55) இவ்வம்சங்கள் தொடர்பாக இருவகைப்பட்ட விளக்கங்கள் உண்டு. பழைமைவாதிகள் இவற்றை இறைமையுள்ள சமத்துவமான அரசுகள் பற்றிய ஒரு விளக்கம் மட்டுமே என்கின்றனர். ஆனார் முற்போக்குவாதிகள் அவற்றை மக்களின் விருப்பத்துடன் பிரதேச ரீதியிலான மாற்றங்களைச் செய்வதற்கான நிச்சயமான உரிமையாகக் கருதுகின்றனர்.

சுயநிர்ணயம் பற்றிய இத்தகைய தெளிவற்ற விளக்கங்களையும் திட்டவட்டமற்ற செயற்பாட்டு முறைகளையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு குடியேற்ற நாடுகளின் விடுதலைப் போராட்டங்களை மேற்குலக ஏகாதிபத்தியங்கள் நிராகரித்தே வந்தன. ஆனால் ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச் சபையில் பெரும்பான்மைப் பலம் பெற்ற போது, சுயநிர்ணய உரிமை தொடர்பாக சில முற்போக்கான நடவடிக்கைகள் அறிமுகமாயின. இந்நாடுகளின் தொர்ச்சியான கூட்டு முயற்சிகளினால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் குடியேற்றவாதத்தை சகல வழிகளிலும் சட்ட ரீதியற்றது என்று பிரகடனம் செய்தது. மேலும் 1960 இல் குடியேற்ற நாடுகளுக்கும், மக்களுக்கும் சுதந்திரம் வழங்குவது பற்றிய ஐக்கிய நாடுகளின் பிரகடனம் *(The United Nations Declaration on the Granting of Independence to Colonial Countries and Peoples-General Assembley Resolution, 1514 (XV) )* ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களில் எஞ்சியிருந்த குடியேற்றவாதத்துக்கும் சாவு மணியாயிற்று. அன்றியும் தயாரிப்பு நடவடிக்கைகளின் தாமதங்கள் சுயநிர்ணய உரிமையைச் செயற்படுத்தாமல் இருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கக் கூடாது என்றும் பிரகடனம் வலியுறுத்துகிறது. இதன் மூலம் குடியேற்ற நாடுகள் அரசியல் முதிர்ச்சியும், நகரீகமும் அடையும் வரை சுதந்திரத்தைப் பின் போடவேண்டும் என்ற ஏகாதிபத்தியவாதம் வலுவிழந்து போயிற்று.

சுயநிர்ணய உரிமையானது பிரிந்து செல்லும் உரிமையை உள்ளடக்குகின்றதா? அல்லது இல்லையா? என்பதுபற்றி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிலைப்பாடு தெளிவாகவில்லை. ஐக்கிய நாடுகள் சாசனம் பிரிந்து செல்லும் உரிமையை மறுத்து, உறுப்பு நாடுகளின் சுதந்திரத்தையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் ஆதரிக்கின்றது. அது போல், குடியேற்ற நாடுகளுக்கும், மக்களுக்கும் சுதந்திரம் வழங்குவது பற்றிய ஐக்கிய நாடுகளின் பிரகடனமும் பகுதி ரீதியாக அல்லது முழு அளவில் ஒரு நாட்டின் தேசிய ஐக்கியத்தையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் சீர்குலைக்கும் நோக்கிலான எந்தவொரு நடவடிக்கையும் கண்டிக்கிறது. இது தொடர்பாக் அளிக்கப்பட்ட விளக்கங்களின் படி, ஒரு குடியேற்ற நாடு சுயநிர்ணய உரிமையடிப்படையில் விடுதலையடைந்தபின் அதன் பிரதேசம் ஒன்று அவ்வுரிமையை மீண்டும் பிரயோகித்து பிரிந்து கொள்ள முடியாது என்பதாகும்.

ஆனால், ஐக்கிய நாடுகளின் நட்புறவு தொடர்பான சர்வதேச சட்டத் தத்துவங்கள் பற்றிய பிரகடத்தின் *(Declaration On the Principles of International Law Concerning Friendly Relations of 1970)* 'சமத்துவ உரிமையும் மக்களின் சுயநிர்ணயமும்' *(Equal Right and Self -Determination of Peoples)* என்ற அத்தியாயத்தின் ஏழாம் பந்தியின் சுதந்திரம் பெற்ற குடியேற்ற நாட்டின் மக்கள் பிரிவொன்றுக்கும் சுயநிர்ணய உரிமை பிரயோகிக்கப்படும் என்றும், அரசாங்கங்கள் மக்களைப் பூரணமாகப் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றது. பிரகடனத்தின் வாசகம் ஒன்று பின்வருமாறு சூசமாகத் தெரிவிக்கின்றது.

"சமத்துவ உரிமை, சுயநிர்ணயம் போன்றவற்றை அனுசரித்து நடப்பதன் மூலம் தமது பிரதேசத்துக்குச் சொந்தமான முழு மக்களையும் இன, மத வேறுபாடின்றி பிரதிநிதித்துவம் செய்கின்ற சுதந்திரமும், இறைமையும் கொண்ட அரசுகளின் பிரதேச ஒருமைப்பாட்டையும் அரசியல் ஒற்றுமையையும் பகுதியாகவோ அல்லது முழுவதாகவோ பலவீனப்படுத்தவோ அல்லது கூறுபடுத்தவோ அதிகாரம் அளிக்கும் அல்லது உற்சாகம் ஊட்டும் வகையில் மேலேயுள்ள பந்திகளில் எதுவும் கருத்துப்படாது".

இங்கு முறைமுகமாகப் புலப்படுத்துவது யாதெனில், பிரதேச ஒருமைப்பாட்டையும், அரசியல் ஒற்றுமையையும் பேண விரும்பும் ஓர் அரசு தனது பிரதேச மக்களை இன, மத, நிற வேறுபாடின்றிப் பூரணமாகப் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும் என்பதும், தவறும் பட்சத்தில் பிரிந்து போகும் உரிமையை அங்கீகரிக்க வேண்டியது தவிர்க்க முடியாதது என்பதுமாகும்.'

இதன் பின்னரும் கூட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உலகின் பல பாகங்களிலும் இடம்பெற்ற சுயநிர்ணயம் சம்பந்தமாக பேராட்டங்களில் மிகவும் மந்தமாகவே இயங்கியது. குறிப்பாக ஆபிரிக்காவில் பயாபிரா, கதங்கா, மேற்கு சகாரா போன்ற பிரதேசங்களின் மக்கள் சுயநிர்ணய அடிப்படையில் மேற்கொண்ட நீதியான பிரிந்து செல்லும் போராட்டங்கள் நீண்டகாலம் நீடித்து பாரிய உயிர்ச்சேதங்களும் பொருட்சேதங்களும் ஏற்பட்ட போதெல்லாம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மனிதாபிமான உதவிகளை அனுப்புவதனுடனும், பேச்சுவார்த்தைக்கான அவசியத்தை வலியுறுத்துவதுடனும் நின்றதே தவிர ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. மேலும் இப்பிரச்சனைகளில் நிலவிய அநாவசியமான வெளியார் தலையீடுகளையும் தடுத்து நிறுத்தும் வல்லமையையும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கொண்டிருக்கவில்லை.

சுயநிர்ணய உரிமை என்பது குடியேற்ற நாடுகளுக்கோ அல்லது வெளியாரின் கட்டுப்பாட்டில் உள்ள நாடுகளுக்கோ மட்டும் தான் பிரயோகிக்கத்தக்கது என்ற நிலைப்பாட்டையே 1960 களில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கொண்டிருந்தது. அதையே தொடர்ந்தும் கடைப்பிடிக்க அது முயன்று வந்துள்ளது. அத்துடன் அங்கத்துவ நாடொன்றின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும், ஐக்கியத்திற்கும் குந்தகம் விளைவிப்பதில்லை என்ற தனது சாசன உறுதிமொழியையும் அது பேண முற்படுவது போலத் தெரிகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுக் காரியதரிசியான யூ. தாண்ட், பத்திரிகை நிருபர்களுக்கு ஒருமுறை பேட்டி அளித்தபோது, "......பிரிவினையை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஒருபோதும் அங்கீகரித்ததே இல்லை; அங்கீகரிக்கவுமில்லை; எதிர்காலத்திலும் தனது உறுப்பு நாடொன்றின் விடயத்தில் அது அங்கீகரிக்கும் என்று நான் நம்பவில்லை...." என்று குறிப்பிட்டமை, கவனிக்கத்தக்கது.

இருப்பினும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இத்தகைய சட்டமும், மரபும், கௌரவமும் பேணமுற்படுகின்ற நிலைப்பாடு நடைமுறை நிலைமைகளுக்குப் பொருந்தி வரவில்லை. பலஸ்தீனியர்கள், ஆர்மீர்கள், குர்திஸ் இனத்தவர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கையாலாகாத் தனமானது அதன் நற்பேரைப் பாதித்துள்ளமை, யாவரும் அறிந்ததே, மேலும் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தினை அரசியல் ரீதியாக ஊக்குவித்ததோ அல்லது நேரடியான இராணுவத் தலையீட்டின் மூலமோ சில சக்திமிக்க நாடுகள் வெற்றிபெற வைத்தபோது, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது சாசனவிதிகள் மீறப்பட்டமை குறித்து அதிகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அத்துடன் சுயநிர்ணயம் சம்பந்தமான பிரச்சினைகளில் சம்பந்தப்பட்ட மக்களிடையே வாக்கெடுப்பொன்றை நடத்தி முடிவுக்கு வரும் வழிமுறைகளும், ஐக்கிய நாடுகளின் சட்டதிட்டங்களில் உண்டு. அதையும் மிகவும் அபூர்வமாகவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கடைப்பிடித்துள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகள் சுயநிர்ணய உரிமை பற்றி அக்கறைப் படுவதாகத் தெரியவில்லை. ஏனெனில் இவ்வுரிமை அமுல் படுத்தப்பட்டால் ஐரோப்பாவின் இருபது நாடுகளுக்குப் பதிலாக 68 நாடுகள் தோன்ற இடமுண்டு. மூன்றாம் உலக நாடுகளின் போக்கும் சுயநிர்ணய உரிமையை கேள்விக்குரியதாகவே மாற்ற முற்படுகின்றது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் விதிகளின்படி மக்கள் யாவருக்கும் சுயநிர்ணய உரிமையுண்டு. ஆனால் சிறுபான்மையினர் பிரச்சனையை எதிர்நோக்கும் ஈராக், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் சுயநிர்ணய உரிமையானது முழுமக்கள் தொகுதிக்கு மட்டுமே பிரயோகிக்கத்தக்கது என்றும், சிறுபான்மை இனங்களுக்கு அது உரித்தானது அல்ல என்றும் வாதிட்டு வந்துள்ளன.

மாறிவரும் சர்வதேச நிலைமைகளும் சுயநிர்ணய உரிமையின் வளர்ச்சிப் போக்கிற்கு வாய்ப்பாக அமையவில்லை. பிராந்திய ஒழுங்கமைப்புக்களின் பெருக்கமும், சர்வதேச ரீதியில் நாடுகளின் பரஸ்பர தங்கிருத்தலின் வளர்ச்சியும், தேசிய அரசுகளின் முக்கியத்துவத்தை மழுங்கடித்தபோது, சுயநிர்ணய உரிமையும் பாதிப்படையலாயிற்று. ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரலையும் கவனத்தையும் சமூக, பொருளாதார பிரச்சினைகளே ஆக்கிரமிக்க முற்படுகின்றன. மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்திப் பிரச்சினைகள் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினைகளை மூடிமறைக்க முற்படுகின்றன.

இராணுவ-இராஜதந்திர மேலாதிக்கத்தினால் சுயநிர்ணய உரிமை துஸ்பிரயோகங்கள் செய்யப்பட்ட சம்பங்கள் வரலாற்றில் ஏராளம் உண்டு. பரிஸ் சமாதான மகாநாட்டின் தவறுகளால் பல ஜேர்மனியர்களும், லித்துனியர்களும், றூடியன் இனத்தவர்களும் போலந்துக்கும், செக்கோசிலோவாக்கியாவுக்கும் இடம் பெயர்க்கப்பட்டனர்.

தொடர்ச்சி 15ம் பக்கம் ..

# நிகழ்வும் நினைவும்

-திலீபன்-

## 'அரசியலுக்கு இங்கு இடமில்லை' ஏன் இந்தக் குழப்பம் ?

'களத்தில்' பத்திரிகையினை லண்டனில் விநியோகிக்கச் சென்ற எனது நண்பர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தோடு இன்றைய நிகழ்வும் நினைவும் பகுதியினை ஆரம்பிக்கின்றேன்.

ஒரு பொது இடத்தில் (பொது மக்கள் கூடும் இடத்தில்) எனது நண்பர்கள் களத்தில் பத்திரிகையினை மக்களுக்கு விநியோகிப்பதற்கான அனுமதியினை நிர்வாகிகளிடம் கோரியபோது இவ்விடத்தி 'அரசியலுக்கு இடமில்லை' எனக்கூறி அனுமதி மறுக்கப்பட்டதாம்!

ஒரு நிர்வாகத்தின் கீழ் உள்ள இடத்தில் எத்தகைய பிரசுரங்களை விநியோகிக்க அனுமதிப்பது என்பது 'அவ் நிர்வாகத்திற்குரிய உரிமை என்பதனை நாம் விளங்கிக் கொண்டாலும் அதற்காகக் கூறப்பட்ட காரணம் தொடர்பாக கடும் விமர்சனங்களை முன்வைக்க வேண்டியுள்ளது.

மேற்குறிப்பிட்ட உதாரணம், மட்டுமல்ல, மேலும் பல பொது அமைப்புக்கள் 'அரசியலுக்கு இங்கு இடமில்லை' என்ற ரீதியிலேயே செயற்பட்டு வருவதனையும் அவதானிக்க முடிகின்றது.

"எமது அமைப்பில் பல்வேறு அரசியல் கருத்துடையவர்களும் அங்கம் வகிக்கின்றார்கள். எனவே அரசியலை நுழைய விட்டால் அங்கத்தவரின் ஒற்றுமையினைப் பேணுவது சிரமமமாகி விடும்" "இவ்விடத்திற்கு வருபவர்கள் பலர் அரசியலில் அக்கறையுள்ளவர்கள். ஆதனால் அரசியல் பிரசுரங்கள் இங்கு விநியோகிக்கப்படுவதனை அவர்கள் விரும்ப மாட்டார்கள்" இது போன்ற காரணங்களை கூறிக் கொண்டு அரசியல் சார்ந்த விடயங்களை இவர்கள் விலக்கி விடுவார்கள்.

மேலெழுந்த வாரியாக நோக்கும் போது இவர்கள் கூறுவதில் நியாயம் இருப்பது போலத்தான் தோன்றும். இவ் அமைப்புக்களின் செயற்பாட்டுக்கு 'அரசியல் முட்டுக்கட்டை போட்டு விடும்' என்ற எண்ணமும் ஏற்படும்.

ஆனால் தமிழ் மக்களின் மத்தியில் இயங்கும் இவ் அமைப்புக்கள் அரசியல் என்று கூறி ஒதுக்குவது எதனை? தமிழீழ மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தினை; தமிழீழ மக்களின் எதிர்கால நல்வாழ்விற்கான இன்றைய தியாக வேள்வியினை; தமிழீழ மக்களின் இறைமையினை நிலை நிறுத்துவதற்கான சுயநிர்ணய உரிமையினை வென்றெடுப்பதற்கான போராட்டத்தினை இதனையே இன்று அரசியல் என்று கூறி சில பொது அமைப்புக்கள் ஒதுக்குகின்றன.

தமிழீழ மக்களிடம் அரசியல் அதிகாரம் இல்லாத காரணத்தினால் தான் நாம் நாற்பதாண்டு காலத்திற்கும் மேலாக ஒடுக்குமுறைக்குட்படுத்தப்பட்டு வருகின்றோம் என்பதனை இவர்கள் மறந்து விட்டார்கள் போலும்!

### அரசியல் என்றால் மலினமா?

சிலர் அரசியல் என்ற வார்த்தையின் அர்த்தம் புரியாமல் அதனை மலினப்படுத்துவதனை நாம் நடைமுறையில் காண்கின்றோம். எமது மண்ணில் கட்சி அரசியல், மேடைப் பேச்சினைத் தளமாகக் கொண்டு நடைபெற்று வந்த காலத்தில் அரசியல் தொடர்பாக ஏற்பட்ட கசப்பான அனுபவம் இதற்குக் காரணமாக அமையலாம்.

ஆனால் உண்மையில் அரசியல் அதிகாரமே இன்று சகல செயற்பாடுகளையும் நிர்ணயிப்பதனைக் காண்கின்றோம். கலை, தொழினுட்பம், விஞ்ஞானம், பொருளாதாரம் உட்பட சகல துறைகளும் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பதனை அரசியல் அதிகாரமே தீர்மானிக்கின்றது. கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக முழு இலங்கைத் தீவினையும் கட்டியாளும் அரசியல் அதிகாரம் சிங்களப் பேரினவாதிகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றமையே தமிழீழ மக்கள் இன்று அனுபவிக்கும் சகல துன்பங்களுக்கும் காரணம். எமது கைகளில் இருக்க வேண்டிய அரசியல் அதிகாரம் எம்மிடமிருந்து பிறக்கப்பட்டிருக்கும் இன்றைய நிலையில், அதை மீள எமது கைகளில் எடுத்துக் கொள்ளவே இன்று தமிழீழ மக்கள் போர்க்களத்தில் குதித்துள்ளனர்.

இன்றைய சூழலில் 'அரசியலுக்கு இங்கு இடமில்லை' என்று கூறி ஒதுக்குவதோ அல்லது ஒதுங்குவதோ எதிரிக்குத் துணைபோகும் ஒரு நடவடிக்கையாகவே அமையும்.

### பொது அமைப்புக்களும் அரசியலும்

இன்று புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் பல பொது அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. இத்தகைய பொது அமைப்புக்களில் அரசியல் நுழைவது தவறானது என்ற எண்ணம் இவ் அமைப்புக்களில் செயற்படும் பலரிடம் இருக்கின்றது. இன்று தமிழீழ மண்ணில் பதவிக்கான கட்சி அரசியல் நடைபெறவில்லை என்பதனை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவர்களுக்கு நான் உதாரணம் ஒன்றினைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் அரச கரும மொழி ஆக்கப்பட்ட சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படுமுன், அது குறித்த வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்ற போது ஏராளமான சிங்களப் பொது அமைப்புக்கள் சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தினை நிறைவேற்றி, அதனைப் பகிரங்கப்படுத்தின. ஒரு இனத்தினை ஒடுக்குகின்ற நடவடிக்கையாக இருந்தும்கூட, தமது பேரினவாத நலன்களைப் பேணிக் கொள்வதற்காக அவ் அமைப்புக்கள் அந்த முடிவினை எடுத்தன. அன்றிலிருந்து இன்றுவரை இத்தகைய அமைப்புக்கள் அரசியல் தீர்மானத்தினை நிறைவேற்றுவதனைக் காண்கின்றோம்.

இதனை நாம் இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் பொது அமைப்புக்கள் அரசியலில் ஈடுபடுவது தவறானது என்ற கருத்து வரலாற்றில் மறுக்கப்பட்டிருக்கின்றது என்பதனை சுட்டிக்காட்டவே.

எம் மீதான ஒடுக்குமுறைக் சிங்களப் பொது அமைப்புக்கள் துணைபோகும் போது, அவ் ஒடுக்குமுறையினை முறியடிக்க தமிழ் பொது அமைப்புக்கள் உறுதியோடு செயற்பட வேண்டியது அவசியமல்லவா!

இன்றைய நிலையில், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதும் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக விட்டுக் கொடுப்பற்ற போராட்டத்தினைத் தொடர்ச்சியாக நடாத்தி வருபவர்கள் விடுதலைப் புலிகளே என்பதும் எவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும். இவ் உண்மையினை அங்கீகரிக்க வேண்டியது பொது அமைப்புக்களது தார்மீகக் கடமையாகும். இதன் அடிப்படையில், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையினை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் பொது அமைப்புக்கள் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும்.

### முரண்பாடு கொண்டோரின் நிலை என்ன?

இன்று தமிழீழ விடுதலைக்காகப் போராடுவது யார் என்ற கேள்விக்கு ஒரு விடை தான் உண்டு. தமிழீழ விடுதலைப்புலிகள் என்பதே அவ்விடை. இந்நிலையில் போராட்டத்திற்காக வேறு அமைப்புக்களுக்கு ஆதரவு கொடுப்பது என்ற கேள்விக்கே இடமில்லை.

அதே நேரம், விடுதலைப்புலிகளுடன் முரண்பாடு கொண்டோரை என்ன செய்வது? என்ற கேள்வி எழ இடமுண்டு. ஒரு போராட்டம் இடம்பெறும் போது அப்போராட்டத்துடனும் அப்போராட்ட முறையுடனும் சிலர் முரண்படுவது இயல்பானதே. இது எமக்கு மட்டும் உரிய நடைமுறையல்ல. உலகெங்கும் நடைபெறும் போராட்டங்களிலும் நாம் இதனைக் காண முடிகின்றது.

விடுதலைப்புலிகளுடன் முரண்பாடு கொண்டோர் இருக்கத்தான் செய்வார்கள். இவர்களைத் திருப்தி செய்வதற்காக பொது அமைப்பு ஒன்று போராட்டத்தில் இருந்து ஒதுங்கி நிற்க வேண்டுமா? எமது அரசியல் அதிகாரத்தினை எமது கைகளில் எடுப்பதற்கான வரலாற்றுக் கடமையினை நாம் புறக்கணிக்கலாமா? அது வரலாற்றுத் துரோகமாக அமைந்து விடாதா? இதனை பொது அமைப்புக்களில் செயற்படுவோர் சிந்திக்க வேண்டும்.

### சர்வதேச அரசியல்....

அவுஸ்திரியா, அல்பேனியா, பல்கேரியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களில் கணிசமானோர் யூகோசிலோவாக்கியாவுக்கு அனுப்பப்பட்டனர். ருமேனியாவிலும் கிரேக்கத்திலும் வந்தேறு குடிகள் மிகையாயினர். குர்திஸ் இன மக்கள் துருக்கி, ஈராக், ஈரான், சீரியா போன்ற நாடுகளில் சிதறுண்டனர். ஏகாதிபத்திய நலன்களுக்கேற்ப நாடுகளைக் கூறுபோடவோ அல்லது ஒற்றுமைப்படுத்தவோ சுயநிர்ணய உரிமை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனாலேயே 'கேர்ஸன் பிரபு' சுயநிர்ணய உரிமையை "இரு முனைகொண்ட வாள் என்று வர்ணித்தார்.

சுயநிர்ணய உரிமை பற்றி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச் சபையிலும், மனித உரிமைகள் குழுக் கூட்டங்களிலும், சர்வதேச நீதிமன்றத்திலும் அநேக விவாதங்கள் நிகழ்ந்துள்ளன. ஆயினும் தொடர்ந்தும் சுயநிர்ணய உரிமையானது குறைப் பிரசவ நிலையிலேயே காணப்படுகிறது. இதன் நேரடிவிளைவே பல நாடுகளிலும் மோசமடைந்துவரும் தேசிய இனப்பிரச்சினைகளாகும். பலம் பொருந்திய சில நாடுகள் தமது நலன்களைப் பாதுகாக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை பயன்படுத்த முற்படுவதும் சுயநிர்ணய உரிமையின் பின்னடைவுக்கு முக்கிய காரணமாகும். 'அல்பிரட் கொவன்' என்ற அறிஞர் சுயநிர்ணய உரிமைபற்றிய "அடிப்படையான மீளாய்வு" ஒன்றின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

தொகுத்துப் பார்க்கும்போது, சுயநிர்ணய உரிமையின் உள்ளடக்கங்களும், நோக்கங்களும் உன்னதமானவையாக இருக்கலாம். வரலாற்றில் எதிர்பாராமல் ஏற்பட்ட சில சாதகமான சந்தர்ப்பங்களினால் அவை வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் சிக்கலடைந்து வரும் சர்வதேச அரசியலில் அவை ஏற்படுத்தக்கூடிய விபரீதங்களும் பல உண்டு. யதார்த்தமாகப் பார்க்கும்போது, சுயநிர்ணய உரிமையானது, தேசியவாதத்துக்கு கொள்கையடிப்படையாகவோ அல்லது பிரச்சாரக் கருவாகவோ அமையலாம். ஆனால், சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் ஒரு மக்கள் பிரிவோ அல்லது அதன் அமைப்போ, குறித்த பிரச்சினை தொடர்பாக தேசிய -பிராந்திய - சர்வதேச சக்திகளுக்கிடையில் ஏற்படுகின்ற -அரசியல் சமன்பாட்டைச் சீர் செய்யத்தக்க வல்லமையையும், செல்வாக்கையும் பெறும்போதே சுயநிர்ணய உரிமையும் நடைமுறைச் சாத்தியமாகிறது.

மற்றோர் விதமாகக் கூறின், தேசிய -பிராந்திய -சர்வதேச எல்லைகளைத் தொட்டு நிற்பதே நவீன சுயநிர்ணயத்தின் முனைப்பம்சமாகும். இது சுயநிர்ணயம் எனும் பதம் வெளிக்கொணரும் அர்த்தத்தையே கேள்விக்குரியதாக்குகிறது. 'சுயநிர்ணயம்' என்பது 'பொது நிர்ணயம்' என்பதனை நோக்கி அதிக தூரம் முன்னேறிவிட்டது. ஆயினும் இம்மாற்றம் பற்றிய தர்க்க -விஞ்ஞான அடிப்படைகள் அபிவிருத்தியடையவில்லை. ■


REFERENCES:

1. Some of the exclusive works on self determination are Alfred Cobban. The Nation State And National Self -Determination (New York. 1969); Rupert Emerson. From Empire to Nation: The Rise to Self -Assertion of Asian And African Peoples (O. U. P. London. 1960); A. R. Sureda. The Evolution of the Right of Self -Determination: A Study of United Nations Practice (Leiden. 1973); L. C. Buchcheit, Secession, The Legitimacy of Self -Determination (New Haven, London, 1978); and Dov Ronnen. The Quest of Self -Determination (London, 1979).

2. U N document E/CN, 4/1199 (1978).

3. U N document A/CN/ 4/29-1/Add. 2(1977).

4. Idid.

5. U N document A/CN. 8188 (1976).

6. Quoted by James Avery Joyce, The New politics of Human Rights (St. Martins Press. Newyork. 1979) PP. 158

7. See. J. M. Robson (ed) collected works of John Stuart Mill 1861(University of Toronto press, Toronto, 1977. ) PP 371-577

8. U. S. Congressional Records. Vol. 56. Pt. 2, P. 1952.

9. Quoted by Michael Lowy. "Marxism and the National Question" in Rovin Blackburn (ed). Revolution And Class Struggle (Fontana Collins, 1977) P. 157.

10. Wilson's Speech of 17 September 1919 in R. S Baker And W. E. Dodd (eds), War And Peace: Presidential Messages, Addresses And public papers (1917 -1924) 1927. p. 244.

11. Robert Lansin, the Peace Negotiations New York. 1921, Chap. VII, "Self -Determimation", Quoted in Sarah Wambaugh, plebiscites Since the World War (Carnegie Endowment for International Peace, Washington, 1933), P. 15.

12. See, Rostislv Ulyanovsky, National Liberation, Progress publishers, Moscow, 1978, PP. 32 -33.

13. V. I. Lenin, "Critical Remarks on the National Question", Collected workd, (Progress Publishers, Noscow, 1964), Vol, 20, P. 27.

14. Quoted by Ralph Pettman, State and Class: A Sociology of International Affairs, (Cromm Helm London, 1979) P 125.

15. The leading protagonists of this view are Hans kelsen, Leland M. Goodrich, Edward Hambro and Anne P. Simons; See Hans Kelson, The Law of the United Nations, (Praeger New York, 1951). PP. 51-53. Leland N. Goodrich. Edward Hambro and Anne P. Simons, Charter of the United Nations: Commentary and Documents, (Columbia University Press, New York, 1969. ) PP. 29 -31.

16. Quincy Wright, "Recognition And Self, Determination", (Proceedings A. S. I. L 1954), PP. 23 -27: Rosalyn Giggins, Development of International Law through the Political Organs of the United Nations, (O. U. P. , London, 1963) PP. 100 -105: Also see Norman Bentwich and Andrew Martin, A Commentary On the Charter of the United Nations, (Columbia University Press, New York, 1969) PP. 29 -31.

17. See Article 6, of Resolution 151, (XV) of the General Assembly.

18. For Commentary On the Declaration see Rosenstock, The Declaration of Principles of International Law Concerning Friendly Relations: A Survey, (A. J. I. L. 1971), PP. 713 -735.

19. Last but one para of the Declaration.

20. UN Monthly Chronicle (New York, February, 1970), P. 36.

# ஒரு திடமான, வலுவான, தேசிய எதிர்ப்பு இயக்கத்தை நாம் கட்டி எழுப்பவேண்டும். போர்க்குணம் மிக்க ஒரு புரட்சிகர சமுதாயமாக எமது தேசத்தை உருவாக்கம் செய்யவேண்டும்.

**தேசியத் தலைவர் வே. பிரபாகரன்**



## பொறுப்பு

"நாம் இன்று வரலாற்றின் மிகவும் நெருக்கடியான கால கட்டத்தில் நிற்கின்றோம். தமிழீழத்தில் கோரத் தாண்டவமாடிவரும் அரச பயங்கரவாத அட்டூழியங்களால் பொது மக்கள் மிகவும் இக்கட்டான ஆபத்தான நிலையை எதிர்நோக்கியுள்ளனர். எமது மக்கள் சிங்கள இனவாத அரக்கர்களால் கொன்று குவிக்கப்படும் பொழுது முழு உலகமுமே கவலை கொள்ளலாம். கண்டனங்கள் தெரிவிக்கலாம். கண்ணீர் வடிக்கலாம். ஆயினும் பொது மக்களைப் பாதுகாத்து அவர்களது சுதந்திரத்தை வென்றெடுக்கும் மாபெரும் பொறுப்பு விடுதலைப் போராளிகளாகிய எம்முடையது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்"

## உறுதி

"விடுதலைப்புலிகளின் மனோதிடத்தையும், உறுதியையும் சிங்கள இராணுவத்தால் ஒருபோதும் அழித்து விட முடியாது. நாங்கள் மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும், உன்னதமான இலட்சியப் பற்றும் கொண்டவர்கள்."

## வேண்டுகோள்

"எமது போராட்டத்தைத் தீவிரமாக்கும் அதேவேளை எமது மக்களுக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஆகவே எமது போராட்டம் மக்களின் பாதுகாப்புத் திட்டமொன்றை அடிப்படையாகக் கொண்டதாக அமையப்பெறும். இந்தப்பாதுகாப்பு போர்முறைத் திட்டத்திற்கு எமக்கு பெருமளவு நிதியுதவி தேவையாகின்றது. இதற்காகவே நாம் தேசிய பாதுகாப்பு நிதியை ஆரம்பித்திருக்கின்றோம்."

## அறைகூவல்

"இது மக்கள் யுத்தம் என்பதால் போராட்டத்தில் மக்களும் பங்களித்தேயாக வேண்டும். முழு இனமுமே ஒன்றுபட்டு அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து போராட வேண்டும். இந்த மக்கள் விடுதலைப் போரின் முன்னணிப் படையாக நின்று எமது விடுதலை இராணுவம் போராடும்."

தேசியத் தலைவர் வே. பிரபாகரன்


| | | | | |
|---|---|---|---|---|
| TAMIL CO-ORDINATING COMMITTEE<br>P.O.BOX 694, MULGRAVE NORTH<br>VICTORIA 3170, AUSTRALIA.<br>Tel: 03-457 6347 Fax: 03-561 8224 | LIBERATION TIGERS OF TAMIL EELAM<br>P.O.BOX 47, 7600 STRUER<br>DENMARK.<br>Tel / Fax: 97-841231 | TAMIL CO-ORDINATING COMMITTEE<br>341 Rue des Pyrenees<br>75020 paris, france.<br>Tel: 435 81142 Fax: 435 81191 | TAMIL CONFEDERATION-GERMANY<br>P.O.BOX 340251<br>5270 GUMMERSBACH 34<br>GERMANY. | TAMIL CO-ORDINATING COMMITTEE<br>Via Mariano Stabile - 34<br>90139 PALERMO, ITALY.<br>Tel / Fax: 091-611 3179 |
| TAMIL CO-ORDINATING COMMITTEE<br>Groot Hertoginnelaan 106<br>2517 BL Den Haag, NEDERLAND<br>Tel:070-346 1963 Fax:070-346 1970 | TAMIL CO-ORDINATING COMMITTEE<br>P.O.Box 1699 Vika<br>0110 OSLO - 1, NORWAY.<br>Tel: 02-191260 Fax: 02-190114 | TAMIL CO-ORDINATING COMMITTEE<br>HOFJECKLIN, 7415 RODELS<br>SWITZERLAND.<br>Tel: 077-816609 | UNITED TAMILS ORGANISATION<br>54 TAVISTOCK PLACE<br>LONDON WC1H 9RG, U.K.<br>Tel: 071-837 7162 Fax: 071-278 5666 | |


Printed by BBOS LTD